பரிசுத்தவான்களின் வரலாறு 14

இறுதியான மீட்பாளர்

# இமாம் மஹ்தி

அலைஹிஸ்ஸலாம்

ஆக்கம்
தர் ராஹெ ஹக் நிறுவனம்

வெளியீடு
அமீத் பப்ளிசர்ஸ், பெங்களூர்

Title:
**Imam al Mahdi**
(May Allah Hasten his Appearing)

Language:
**Tamil**

Author:
**Dar Rahe Haq Institute**

1st Edition
2005 July (1000 copies)

**Published by:**
Ameed Publishers Pvt. Ltd.,
#7/2, 2nd Floor, Aga Abdullah St.,
Richmond Town,
Bangalore 500 025
India.
Tel. 080 30905013

**Price: Rs.75.00**

بسم الله الرحمن الرحيم

இறுதியான மீட்பாளர்

# இமாம் மஹ்தி

அலைஹிஸ்ஸலாம்

# அறிமுகம்

## பெயர்

இமாமுல் காயிம் மஹ்தியின் (அலைஹிஸ்ஸலாம்) இயற்பெயரைக் குறிப்பிட வேண்டாமென இமாம்கள் தடுத்துள்ளனர். அவர்களது இயற்பெயர் இறுதி நபியவர்களின் பெயராகும். அவர்களது கௌரவப் பெயர் நபியவர்களின் கௌரவப் பெயராகும்.[1]

எனவே அவர்கள் வெளியாகும் வரை அவர்களது பெயரை தெளிவாகக் குறிப்பிடுவது ஆகுமானதோ பொருத்தமானதோ அல்ல.[2]

## பிரபல்யமான பெயர்கள்

.மஹ்தி, காயிம், ஹுஜ்ஜத், பகியதுல்லாஹ்.

## தந்தை

இமாம் ஹஸன் அஸ்கரி அலைஹிஸ்ஸலாம்.

---

1. கமாலுத்தீன், ஷெய்க் ஸதூக், பா.1, ப.403,404, மற்றும் பா. 2, ப. 49,159,160
2. பிஹாரருல் அன்வார், பா.51, ப.31,34, மற்றும் அல்காபீ, பா.1, ப.332,333

## தாய்

நர்கிஸ் எனும் கண்ணியமான பெண்மணி. இவர் ரோம் தேச மன்னரின் பேத்தியாவார்.

## பிறப்பு

ஹிஜ்ரி 255 ஷஃபான் மாதம் நடுப்பகுதி வெள்ளிக்கிழமை.

## இடம்

ஈராக்கின் நகரங்களுள் ஒன்றான ஸாமர்ரா.

## வயது

ஹிஜ்ரி 1426 ஆகிய இவ்வருடத்தில் அவர்கள் பிறந்து 1171 வருடங்கள் பூர்த்தியாகின்றன. அவர்கள் அல்லாஹ் நாடும் காலம் வரை உயிரோடு இருப்பார்கள். பின்பு ஒரு நாள் இறை உத்தரவோடு. இப்பூவுலகை நீதியாலும் நேர்மையாலும் நிரப்புவதற்காக வெளியாகி வருவார்கள்.

## *ஏனைய மதங்களில் மஹ்தி*

தெய்வீக மற்றும் உலகளாவிய சீர்திருத்தவாதி என்ற வகையில் வாக்களிக்கப்பட்ட இமாம் மஹ்தி பற்றிய நம்பிக்கை அதிகமான மதங்கள் மற்றும் கோட்பாடுகளில் காணப்படுகின்றது.

இஸ்லாத்தில் மட்டுமின்றி யூத, கிறிஸ்தவ, இந்து, பௌத்த சொராஸ்திரிய மதங்களிலும் தெய்வீக சீர்திருத்த வாதி பற்றிய நம்பிக்கை காணப்படுவதோடு அவரை எதிர் பார்த்த வண்ணமும் உள்ளனர்.

ஹிந்துக்களின் மதநூலான கீதையில் வந்துள்ள தாவது. 'உலகம் சீர்கெட்டு விட்டது. பிறகு இறுதிக் காலப் பகுதியில் ஓர் அரசர் வெளியாகுவார். அவர் எல்லா சனங் களுக்கும் தலைவராகவும் வழிகாட்டியாகவும் திகழ்வார். அவர் உதவி பெற்றவர் என அழைக்கப்படுவார்.'[3] உலகம்

3. அந்நஜ்முஸ ஸாகிபு

முழுவதிலும் ஆதிக்கம் செலுத்தி தன் மார்க்கத்தில் மக்களை நுழைவிப்பார். அவர் தம்மை விசுவாசிப்போர் நிராகரிப்போர் ஒவ்வொருவரையும் அறிந்திருப்பார். அவர் இறைவனிடம் எதையேனும் வேண்டினால் இறைவன் உடனே அதனை அவருக்கு நிறைவேற்றிக் கொடுப்பான்.[4]

சொராஸ்தியரின் சீடரான ஜாமஸ்ப் தனது நூலில் குறிப்பிடுகிறார்– 'ஹாஷிம் கோத்திரப் பரம்பரையிலிருந்து அரேபிய மண்ணில் ஒரு மனிதர் தோன்றுவார். அவர் ஆஜானுபாகுவான உடலமைப்பைக் கொண்டிருப்பார். அவர் தனது பாட்டனாரின் மார்க்கதைப் போதிப்பார். அவருடன் சக்திவாய்ந்த பெரும்படையொன்று காணப்படும். அவர் பாரசீகம் நோக்கிச் சென்று அங்கு புனருத்தாரணங்களை மேற்கொண்டு இவ்வுலகை நீதியால் நிரப்புவார். அவரது நீதியான ஆட்சியின் கீழ் ஓநாயும் ஆடும் ஒரே பாத்திரத்தில் நீர் அருந்தும்.'[5]

சொராஸ்தியரின் சமய நூல்களில் ஒன்றான ஸந்த் கூறுகிறது– "அச்சந்தர்ப்பத்தில் யஸ்தான் (நலவுகளின் கடவுள்) புறம் இருந்து பெரும் வெற்றி கிடைக்கும் அஹ்ரிமன் (தீமையின் கடவுள்) படை அழிந்துவிடும். அஹ்ரிமனின் படையின் வல்லமை அனைத்தும் பூமியுள் புதைந்து விடும். மேலெழுவதற்கான எவ்வித வழியும் அவர்களுக்கு இருக்காது. எனவே இவ்வுலகம் அதன் ஈடேற்றத்தை அடைந்து கொள்ளும். மனித இனம் மகிழ்ச்சியில் திளைக்கும்."[6]

விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில், "இஸ்மவேலுக்காகவும் நீ செய்த விண்ணப்பத்தைக் கேட்டேன். நான்

4. பஷாரதுல் அஹ்தைன், ப. 245
5. மே. கு., ப. 258
6. மே. கு., ப. 238

அவனை ஆசீர்வதித்து அவனை மிகவும் அதிகமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவேன். அவன் பன்னிரண்டு பிரபுகளைப் பெறுவான். அவனைப் பெரிய ஜாதியாக் குவேன்.[7] எனவும்

"நல்லவர்கள் பூமியை வசப்படுதத்திக் கொளவார் கள். அபரிமிதமான சமாதானத்தில் அவர்கள் திளைத்திருப் பார்கள்.[8] எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்குர்ஆன் இக்கருத்தை பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றது– "நிச்சயமாக நாம் சபூரில் திக்ருக்குப் பின்னர் எழுதியிருக்கின்றோம். நிச்சயமாக இப்பூமியை என் னுடைய அடியார்களில் நல்லவர்கள் தாம் அனந்தரம் கொள்வார்கள்.[9]

இதில் சபூர் என்பது தாவூத் நபியின் வேதமும்[10] திக்ர் என்பது மூஸா நபியின் தௌராத் வேதமும் ஆகும்.[11]

இறைவன் குறிப்பிடுகின்றான்– "மனிதர்களே! உங்களில் எவரேனும் மெய்யாகவே விசுவாசம்கொண்டு நற்கருமங்களைச் செய்தால் அவர்களுக்கு முன்னர் சென் றோரைப் போன்று பூமிக்கு அதிபதிகளாக்கி வைப்பதாகவும் இவர்களுடைய பயத்தை அமைதியும் பாதுகாப்புமாக மாற்றி விடுவதாகவும் அல்லாஹ் வாக்களித்திருக்கின்றான்.[12]

பிறிதோர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்; "பூமியில் ஒடுக்கப்பட்டவர்கள் மீது அருள் புரிந்து, அவர்க

7. ஆதியாகமம், அ. 17, வ. 20
8. சங்கீதம், அ.37, வ.10
9. சூரா அல் அன்பியா: 105
10. சூரதுல் இஸ்ராஉ: 50
11. சூரதுல் அன்பியா: 48
12. சூரதுன் நூர்: 55

ளைத் தலைவர்களாக்கி வாரிசுகளாகவும் ஆக்கி வைக்க நாம் விரும்பினோம்."[13]

மேற்குறிப்பிட்ட இறைவசனங்கள், இந்த உலகம் அதன் இறுதிக் காலப்பகுதியில் நல்லடியார்களின் ஆட்சியின் கீழ் வரும் என்பதையும் அப்போது அவர்கள் உலகத்தில் வழிகாட்டிகளாகவும், தலைவர்களாகவும் திகழ்வார்கள் என்பதையும் சான்று பகர்கின்ற ஆதாரங்களாக விளங்குகின்றன.

மனிதன் வீழ்ச்சியடைந்து வாழ்வின் அதள பாதாளத்துக்குச் செல்கின்ற போது விழித்துக் கொள்கிறான். நீதியும் அமைதியும் சமாதானமும் அபிவிருத்தியும் வெறுமனே அதிகாரம், பலம், சிநதனை, தொழிநுட்பம் என்பவற்றால் மட்டும் சாத்தியப் படுவதில்லை என்பதை உணர்கிறான். தெய்வீக ஞானத்துடனும் வழிகாட்டலுடனும் தன்னைப் பிணைத்துக் கொள்வதே விடுதலைக்கான ஒரே வழி என்பதை உணர்கிறான். மனித இனம் அதள பாதாளத்தில் இருந்து மீள்வதெனின் உலகளாவிய ரீதியில் நீதியை நிலைநாட்டுகின்ற ஒரு தெய்வீக சீர்திருத்தவாதியின் தேவை உணரப்படுகிறது.

13. சூரா அல் கிஸஸ் - ப. 5

# இமாம் மஹ்தி பற்றி இஸ்லாம்

இறைத்தூதரும் இமாம்களில் ஒவ்வொருவரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இமாம் மஹ்தி பற்றியும் அவர்களது வெளிப்பாடு, எழுச்சி, நீண்ட மறைவு மற்றும் அவர்களது ஏனைய குணாம்சங்களைப் பற்றியும் தெளிவுபடுத்திக் கூறியுள்ளார்கள். இவ்வறிவிப்புகளையும் ஹதீஸ்களையும் அதிகமான நபித்தோழர்களும் தாபியீன்களும் குறிப்பிட்டுள்ளனர்.

'அல்இமாம் அல்மஹ்தி' எனும் நூலின் ஆசிரியர் அவ்வறிவிப்பை அறிவித்த நபித்தோழர்கள் 50பேரின் பெயர்களையும், தாபிஈன்களிலிருந்து 50பேரின் பெயர்களையும் தனது புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். குறித்த தாபியீன்கள், நபிகளாரை நேரடியாகக் கண்டிராதவர்களாவர். எனினும், அவர்கள் நபியின் தோழர்களிடமிருந்து இமாம் மஹ்தி பற்றி தாம் அறிந்த விடயங்களை அறிவிப்புச் செய்துள்ளனர்.[14]

---

14. அல் இமாமுல் மஹ்தி - பா.40, ப.48

புகழும் பிரபல்யமும் பெற்ற சில கவிஞர்கள் அந்த அறிவிப்புகளின் உள்ளடக்கம் பற்றி பல பாடல்களை இயற்றி யுள்ளனர். இமாம் மஹ்தியின் பிறப்புக்கு பல ஆண்டுகளுக்கு முன்பே இயற்றப்பட்ட இப்பாடல்கள் இன்றுவரையும் நிலைபெற் றுக் காணப்படுகின்றன.

கவிஞர் குமைத் என்பவர் (மரணம் ஹி.126), வீரமும் ஆளுமையும் நிரம்பிய கவிஞராவார். இமாம் மஹ்தி பற்றி அவர் இயற்றிய பாடலை இமாம் பாக்கிரின் முன்னிலையில் பாடிக் காண்பித்தார். இமாம் மஹ்தியின் புரட்சி பற்றியும் அதில் குறிப்பிட்டிருந்தார்.[15]

இஸ்மாயீல் ஹுமைரி என்பவர் (மரணம் ஹி.173) இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்களை சந்தித்து அவர்களுக்கு சில அன்பளிப்புகளை வழங்கிய பின்பு ஒரு நீண்ட பாடலைப் பாடினார். அவற்றில் சில அடிகளின் கருத்து பின்வருமாறு அமைந்திருந்தது:

"என் இறைவா! உனது சொல் உன்னை வழிப்படக் கூடிய, மாறு செய்யக்கூடிய படைப்பினங்கள் அனைத்தின் மீதும் அத்தாட்சி என்று சாட்சி கூறுகின்றேன். நிச்சயமாக, எனது ஆன்மா வேணவாக் கொண்டிருக்கும் சமூகப் பொறுப் பாளரும் இறுதிப் பிரதிநிதியுமானவர் ஒருவர் இருக்கின்றார். அவருக்கு அவசியமான ஒரு மறைவுண்டு. அவர் மறைந்திருக் கும் நிலையிலும் அல்லாஹ் அவர் மீது ஸலவாத் சொல்கின் றான். குறித்த காலம் அவர் மறைந்திருப்பார். பின்பு வெளியா குவார். அப்போது அவர் கிழக்கு மேற்கு அனைத்தையும் நீதியால் நிரப்புவார்."[16]

---

15. அல் அமீனி - பா.2, ப.201,203
16. ஆல் கதீர், அல்லாமா அமீனி - பா. 2, ப. 360, புஸூலுல் முஹிம்மா, ப. 249

ஹிஜ்ரி மூன்றாம் நூற்றாண்டில் புகழ்பெற்ற கவிஞ ராக விளங்கிய தஃபல் அஸ்ஸயீ (மரணம் ஹி.246) இமாம் றிழாவின் அமர்வில் இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் பற்றி பின்வருமாறு பாடியுள்ளார்;

“இன்றும் நாளையும் அவரை நான் எதிர்பார்த்திருக்க வில்லையெனில், நஷ்டங்களை எனது ஆன்மா சந்தித்திருக் கும். இமாம் ஒருவர் வெளிவருவார் என்பதில் மாற்றுக்கருத் துக் கிடையாது. அல்லாஹ்வின் பெயரையும், அவனது செழிப்பையும் அவர் நிலைப்படுத்துவார். உங்களிலுள்ள சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்தறிவிப்பார். நல்லவர் களுக்கும் பாவிகளுக்கும் தீர்ப்பு வழங்குவார்."[17]

இக்கவிதையை அவர் பாடிய போது இமாம் றிழா அலைஹிஸ்ஸலாம் தமது தலையை உயர்த்தியவாறு கூறினார்: 'தஃபலே! இக்கவிதை வரிகளை உனது நாவில் ஹஸ்ரத் ஜிப்ரீல் பாடவைத்தார்."

பின்னர் கேட்டார்கள், "இந்த இமாம் யார் என்பதை அறிவாயா?" அதற்கு தஃபல், "இல்லை" என்று கூறிவிட்டு, "அவர் தங்கள் அஹ்லுல்பைத்தில் உள்ள ஓர் இமாம்; பிற்காலத்தில் உலகில் வெளியாகி பூமியை நீதியாலும் நேர்மையாலும் நிரப்புவார் என்று மட்டுமே கேள்விப் பட்டுள்ளேன்" என்று கூறினார்.

இமாம் ரிழா அலைஹிஸ்ஸலாம் தஃபலுடைய வார்த்தையைத் தொடர்ந்து இவ்வாறு கூறினார்கள்; "தஃபலே! எனக்குப் பின்னுள்ள இமாம் எனது மகன் முஹம்மத் (இமாம் ஜவாத்), அவருக்குப் பின்னாலுள்ள இமாம் அவரது மகன்

---

17. அல் கதீர், பா. 2, ப. 360, புஸூலுல் முஹிம்மா, ப. 249

அலீ (இமாம் ஹாதி), அவருக்குப் பின்னுள்ள இமாம் அவரது மகன் ஹஸன் (இமாம் அஸ்கரி), அவருக்குப் பின்னுள்ளவர் தான் அவரது மகன் ஹுஜ்ஜத் (இமாம் மஹ்தி) ஆவார். அவர் மறைவில் இருக்கும் போது எதிர்பார்க்கப் படுவார். அவர் வெளியாகி வரும் போது பின்பற்றப்படுவார். இமாம் மஹ்தி வெளிப்பட்டு அநீதியாலும் அட்டூழியங்களாலும் நிரம்பியி ருக்கும் இவ்வுலகை நீதியாலும், தர்மத்தாலும் நிரப்பும் வரை உலக முடிவை அல்லாஹ் நீடித்து வைப்பான்."[18]

இமாம்களின் காலத்தில் வாழ்ந்தவர்கள், இமாம்களின் மாணவர்களாக இருந்தவர்களில் சில கவிஞர்கள் தமது பாடல்களில் இமாம் மஹ்தியின் பெயரை தெளிவாகக் குறிப்பிட்டு, அல்லது சூசகமாக சுட்டிக்காட்டிப் பாடியுள்ளனர்.[19]

இமாம்களிடத்திலும் 'நீங்கள் தானா எதிர்பார்க்கப் படுகின்ற இமாம் மஹ்தி?"என்று பலர் வினவியுமிருக்கின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களை, இமாம் மஹ்தி பற்றி அறிமுகப் படுத்துவதற்கான சிறந்த தருணமாக அவ் இமாம்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

இவ்வாறான அறிவிப்புகளும் ஹதீஸ்களும் பிரபல்யம் பெற்றமையால், தாமே இமாம் மஹ்தி என்று பொய்யாக வாதிடுவோரும் பரவலாக வெளியாகினர். இது இமாமின் பிறப்புக்கு முன்பிருந்தே ஆரம்பமாயிற்று. வேறு சிலர், தமது நேசத்துக்குரியவர்களை மகிழ்ச்சிப்படுத்தி உயர்வுறச் செய்வதற் காக அவரே இமாம் மஹ்தியென்றும் வாதிட முனைந்தனர்.

உதாரணமாக, றுசானிய்யா பிரிவினர், முஹம்மத் பின் ஹனபிய்யா தான் எதிர்பார்க்கப்படும் மஹ்தி என்று

---

18. அல் புஸூலுல் முஹிம்மா, ப. 251
19. கிதாபுல் மஹ்தி, ப. 113

வாதிட்டனர். அவர் மக்கள் பார்வையிலிருந்து மறைந்திருக் கின்றார் என்றும் பின்னாளில் வெளியாகி வருவார் என்றும் நம்பிக்கை கொண்டனர். இமாம் மஹ்தி சிலகாலம் மறைந்திருப்பார் என்பது பற்றி இறைத்தூதரும் இமாம்களும் கூறியவை பற்றிய அறிவிப்புக்களை தமது கோட்பாட்டுக்கு ஆதாரமாகக் கொண்டனர்.[20]

அப்பாசிய கலீபா மஹ்தியும் தன்னை இமாம் மஹ்தியென்று பறைசாற்றிக் கொண்டதோடு, தான் மேற் கொண்ட சமூக சீர்திருத்த மற்றும் அபிவிருத்தி நடவடிக் கைகளை அதற்கு ஆதாரமாகக் குறிப்பிடவும் செய்தார்.

முஸ்லிம் அறிஞர்களில் அதிகமானோர் இமாம் மஹ்தி தொடர்பான ஹதீஸ்களையும் அறிவிப்புகளையும் தமது கிரந் தங்களில் பதிவு செய்துள்ளனர்.[21] இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (மரணம் ஹி.214), இமாம் புஹாரி (மரணம் ஹி.256) போன்றோரின் கிரந்தங்களிலும் மற்றும் பல கிரந்தங்களிலும் இவை காணப்படுகின்றன.[22] இக்கிரந்தங்கள் இமாம் மஹ்தியின் பிறப்புக்கு முன் எழுதப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது.

அஹ்லுல்பைத் பிரிவைச் சேர்ந்த அறிஞர்கள் எழுதிய நூல்களுள் 'மஷாபிக்" எனும் ஹஸன் மஹ்பூப் எழுதிய நூல் குறிப்பிடத்தக்கது. இமாம் மஹ்தியின் நீண்ட மறைவு இடம் பெறுவதற்கு சுமார் நூறு வருடங்களுக்கு முன் இந்த நூல் எழுதப்பட்டதாகவும் இதில் தத்ரூபமான விளக்கங்கள் இருப்பதாகவும் ஷெய்க் தப்ரீஸீ எழுதியுள்ளார்.[23]

---

20. அ.ஃலாமுல் வரா - பா. 113
21. நவீத், அம்ன் வ அமான்
22. இஸ்பாத்துல் ஹுதாத், பா. 7, ப. 198,206, முஸ்னத் அஹமத்-பா. 1, ப. 84,99
23. மே. கு

இமாம் பாக்கிர் அலைஹிஸ் ஸலாம் மற்றும் இமாம் ஸாதிக் ஆகியோரின் காலத்து முஹத்திஸ்களும் இமாம் மஹ்தி பற்றி றிவாயத்துக்களை அறிவித்துள்ளதையும் அறிஞர் தப்ரீஸீ சுட்டிக்காட்டுகிறார்.[24]

தவிரவும், உலமாக்களால் இமாம் மஹ்தி தொடர்பான பிரத்தியேக விடயங்களை மாத்திரம் உள்ளடக்கிய நூல்களும் எழுதப்பட்டுள்ளன.[25] அவர்களுள் இமாம் மஹ்தியின் பிறப்புக்கு முதல் 'அஹ்பாருல் மஹ்தி' என்ற நூலை எழுதிய அறிஞர் ஷவாஜினி (மரணம் ஹி.250) குறிப்பிடத் தக்கவராவார்.[26] அவ்வாறே, அஹ்லுல்பைத் நேசர்களான அன் மாதி, முஹம்மத் பின் ஹஸன் பின் ஜூம்ஹூர் போன்றோரும் இவ்வகையில் பிரபல்யம் பெற்றவர்களாவர். இவர்களும் இமாம் மஹ்தியின் பிறப்புக்கு முன்பே இமாமின் ஆளுமை, அவர்களது மறைவு போன்றவற்றை விளக்கும் நூல்களை எழுதினர்.[27]

இஸ்லாத்தின் ஏனைய எந்த விடயம் பற்றியும் இல்லாத அறிவிப்புகள், ஹதீஸ்கள் இமாம் மஹ்தி தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தகைய அறிவிப்புகள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளப்படத்தக்க நிபந்தனைகளைக் கொண்ட ஸஹீஹான ஹதீஸ் என்பதிலே அனைத்து முஸ்லிம் அறிஞர்களும் –ஷீயா, ஸுன்னா– ஏகோபித்த கருத்தைக் கொண்டுள்ளனர்.[28] ஷாபி மத்ஹப் உலமாக்களில் ஒருவரான ஸன்ஜஸீ (மரணம் ஹி.363) 'மனாகிபுஷ்ஷாபியீ' எனும் நூலின் ஆசிரியர். அவர் கூறுகின்றார்; "இமாம் மஹ்தி

---

24. மே. கு
25. நவீத் அம்ன் வ அமான் - ப. 95
26. அல் மஹ்தியுல் முன்தஸர் - ப. 21,24
27. ஷெய்க் தூஸீ, பஹ்ரஸ்த் - ப. 284,301
28. நவீத் அம்ன் வ அமான்

தொடர்பாக அறிவிக்கப்படுகின்ற நபி ஸல்லலலாஹு அலைஹி வ ஆலிஹி அவர்களின் ஹதீஸ்கள் அனைத்தும் எவ்வித ஐயமுமின்றி ஏற்றுக் கொள்ளப்படத்தக்க வகையில் .முதவாத்திராக உள்ளன." [29]

'அல்இமாம் அல்மஹ்தி' எனும் நூலின் ஆசிரியர் கூறுகின்றார்; "இமாம் மஹ்தி தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ள ஹதீஸ்கள் அனைத்தையும் கணக்கிட்டால் அவை ஆறாயிரத்துக்கும் அதிகமான எண்ணிக்கை கொண்டதாகும். இஸ்லாத்தின் அடிப்படை விடயங்கள், மற்றும் முஸ்லிம்கள் ஐயமின்றி ஏகோபித்து அங்கீகரிக்கக்கூடிய எவ்விடயம் பற்றியும் இந்தளவு எண்ணிக்கையான ஹதீஸ்கள் அறிவிக்கப்படவில்லை."[30]

இதன் அடிப்படையில், குறிப்பிட்ட சிலர் மாத்திரமன்றி முஸ்லிம்கள் அனைவருமே, இஸ்லாமிய வரலாறு தோன்றிய காலம் முதல் மஹ்தியின் எழுச்சி சம்பந்தமான தகவலை அறிந்திருக்கின்றனர்.

இமாம் மஹ்தி தொடர்பான அறிவிப்புகள், அன்னார் ஹாஷிம் குலத்தைச் சார்ந்தவர், ஹஸ்ரத் பாத்திமாவின் புதல்வர், இமாம் ஹுஸைனின் பரம்பரையில் தோன்றக் கூடியவர், அவர்களது தந்தையின் பெயர் ஹஸன் என்பன போன்ற விடயங்களைத் தெளிவுபடுத்துகின்றன. மேலும், அவர்களது பெயரும் குலப் பெயரும் நபி ஸல்லலலாஹு அலைஹி வ ஆலிஹி அவர்களின் பெயராகவும் குலப் பெயராகவும் இருக்கும், அவர்களது பிறப்பும் வாழ்வும்; சுருக்கமானதும் நீண்டதுமான இரு மறைவுகள் அன்னாரது வாழ்வில் இருக்கும்; இறைநாட்டம் வரை அவர்கள்

29. அல் மஹ்தியுல் முன்தழர் - ப. 85
30. அல் இமாமுல் மஹ்தி, ப. 66

மறைவாக இருப்பார்கள்; பின்னர் அல்லாஹ்வின் அனுமதி யுடன் வெளிப்படுவார்கள்; உலகம் முழுவதிலும் இறைவனின் சட்டங்களது ஆட்சியை நிலைநாட்டுவதற்கான பெரும் புரட்சியை மேற்கொள்வார்கள்; அநீதியாலும் கொடுமையாலும் சீர்கெட்டுள்ள உலகை நீதியாலும் நேர்மையாலும் நிரப்புவார்கள் போன்ற விபரங்களை ஹதீஸ்கள் துள்ளியமாக விளக்கியே உள்ளன.

இவை மாத்திரமன்றி, அவ் அறிவிப்புகள் இமாம் மஹ்தியின் பிரத்தியேக உடலமைப்பு, ஆளுமை பற்றிய அம்சங்களையும் விபரித்துள்ளன. அஹ்லுஸ்ஸுன்னா கிரந்தங்களில் பதிவாகியுள்ள ஹதீஸ்களில் சிலதை இங்கு நோக்குவோம்:

I.இமாம் மஹ்தியின் வெளிப்பாடு பற்றிய நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி குறிப்பிட்டார்கள்: "உலகம் முடிவுற ஒரு நாள் இருந்தாலும் அந்நாளில் இறைவன் எமது பரம்பரையில் தோன்றும் ஒரு மனிதரை அனுப்புவான். அவர் அநீதத்தால் நிறைந்த உலகை நீதியால் நிரப்புவார்."[31]

2.நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி குறிப்பிட்டார்கள்: "எனது அஹ்லுல் பைத்திலிருந்து ஒரு மனிதர் வரும் வரை மறுமை நாள் வரமாட்டாது. அவர் பெயர் எனது பெயரை ஒத்ததாக இருக்கும்."[32]

3.நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி குறிப்பிட்டார்கள்: "எனக்குப் பின் அலீ எனது உம்மத்தின் இமாம் ஆவார். அவரது பரம்பரையில் தான், எதிர்பார்க்கப்படும் காயிம் (மஹ்தி) தோன்றுவார். அவர் வெளியானால்,

---

31. முஸ்னத் அஹமத், பா. 1, ப. 99
32. மே. கு, பா. 1, ப. 376,430

அநீதியிலும் அனாச்சாரத்திலும் மூழ்கிக் கிடக்கும் உலகை நீதியாலும் நன்மையாலும் நிரம்பச் செய்வார்."

'நன்மாராயம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவும் உண்மையைக் கொண்டு என்னை அனுப்பிய அல்லாஹ்வின் மீது ஆணையாக, அவர் மறைவாக இருக்கும் காலப்பகுதியில் அவரது இமாமத்தில் உறுதியாக இருப்பவர்கள் புடம்போட்ட தங்கத்தை விடவும் கண்ணியம் பொருந்தியவர்களாக இருப்பர்."

இவ்வாறு நபியவர்கள் கூறியபோது, ஜாபிர் பின் அப்துல்லாஹ் அல்அன்சாரி எழுந்து, "இறைத்தூதரே! இமாம் மஹ்தி மறைந்து இருப்பாரா?" எனக் கேட்டார். அதற்கு நபியவர்கள், "ஆம்" என்று கூறியவாறு, "இறைவன் மீது ஆணையாக, அவரது மறைவென்பது ஈமான் கொண்டோரைச் சுத்தப்படுத்துவதற்காகவும் நிராகரிப்போரை அழித்து விடுவதற்காகவுமே ஜாபிரே! இந்த விடயம் அல்லாஹ்வின் தீர்மானமும் இரகசியமும் அடியார்களிடையிலான நிலைக்களனுமாகும். எனவே, இவ்விடயத்தில் சந்தேகங் கொள்வதை விட்டும் எச்சரிக்கையுடன் இருந்துகொள். இறைவனது விடயத்தில் சந்தேகங்கொள்வது நிராகரிப்பாகும்" என்று கூறினார்கள்.[33]

4. உம்மு சல்மா நாயகி அறிவிக்கின்றார்கள். "மஹ்தி பற்றி பிரஸ்தாபித்த நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி அவர் ஹஸ்ரத் பாத்திமாவின் பரம்பரையில் உள்ளவராவார்" எனக் கூறினார்கள்.[34]

5. ஹஸ்ரத் சல்மான் பார்ஸி கூறுகின்றார்கள்: 'நான் ஒரு தடவை இறைத்தூதரிடம் சென்றேன். அப்போது குழந்தையாக

33. யனாபீஉல் மவத்தா, ப. 494
34. அல் முஸ்தத்ரக் அஸ் ஸஹீஹைன்.

இருந்த இமாம் ஹுஸைன், நபிகளாரின் மடியில் இருந் தார்கள். நபியவர்கள், ஹுஸைனுடைய கண்களையும் உதடு களையும் முத்தமிடுபவர்களாக இருந்தார்கள். அப்போது நபிக ளார் ஹுஸைனைப் பார்த்துச் சொன்னார்கள், "நீர் தலைவர், தலைவரின் புதல்வர், தலைவரின் சகோதரர். நீர் இமாம், இமாமின் புதல்வர், இமாமின் சகோதரர். நீர் அத்தாட்சி, அத்தாட்சியின் புதல்வர், அத்தாட்சியின் சகோதரர். நீர் ஒன்பது அத்தாட்சிகளின் தந்தை. அதில் ஒன்பதாமவர் காயிம் (இமாம் மஹ்தி) ஆவார்."[35]

6. இமாம் ரிழா அலைஹிஸ்ஸலாம் கூறினார்கள்: "இறுதி யான தலைவர் இமாம் ஹஸன் அஸ்கரியின் புதல்வராவார். அவர்தான் ஸாஹிபுஸ்ஸமான். அவர் தான் மஹ்தி"[36]

7.நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி கூறினார்கள்: "இமாம் மஹ்தி பற்றி நான் உங்களுக்கு நன்மாராயம் கூறுகின்றேன். எனது சமூகத்தினர் பிளவுபட்டு வழிகேட்டிலி ருக்கும் காலத்தில் எனது உம்மத்திலிருந்து ஒருவர் அனுப்பப் படுவார். அவர் அநீதியிலும் கொடுமையிலும் மூழ்கியிருக்கும் உலகை நீதியாலும் நேர்மையாலும் நிரப்பிவிடுவார். வானத்தி லும் பூமியிலும் உள்ளோர் அவரை ஏற்றுக் கொள்வர். அவர் மூலம் மகிழ்ச்சியுமடைவர்."[37]

8. இமாம் ரிழா அலைஹிஸ்ஸலாம் கூறுகின்றார்: "பேணுதல் இல்லாதவனுக்கு மார்க்கமில்லை. உங்களில் சங்கை மிக்கவர் உங்களில் இறையச்சம் உடையவரே. அதாவது இறையச்சத் துடன் செயல்புரிகின்றவர்." பின்பு சொன்னார்கள்: "எனது நான்காவது சந்ததியில் ஓர் இமாம் உண்டு. அவர் மூலம்

35. யனாபீஉல் மவத்தா - ப. 492
36. மே. கு - ப. 491
37. முஸ்னத் அஹ்மத் - பா. 2, ப. 37

அநீதி, அட்டூழியம் என்பவற்றிலிருந்து அல்லாஹ் பூமியை சுத்தப்படுத்துவான். அவரது பிறப்பிலே மனிதர்கள் சந்தேகம் கொள்வார்கள். அவர் குறிப்பிட்ட காலம் மறைந்து இருப்பார். அவர் வெளியாகும் போது பூமி தன் இரட்சகனின் ஒளிபெற்று பிரகாசிக்கும். அவர், மனிதர்கள் மத்தியில் நீதியை நிலைநாட்டுவார். அதனால் மனிதர்கள் எவரும் எவருக்கும் அநீதியிழைக்கமாட்டார்கள்."[38]

9. ஹஸ்ரத் அலீ அலைஹிஸ்ஸலாம் கூறினார்கள்: "பிற்காலத்தில் அல்லாஹ், தன்னால் நேசிக்கப்படுகின்ற தன்னையும் நேசிக்கின்ற ஒரு கூட்டத்தினரை உருவாக்குவான். அவர்களுக்கு மத்தியில் தனிமையாக விலகி நின்ற ஒருவரை அதிகாரமுடையவராக விக்குவான். அவர் தான் சிவந்த முகத்தோற்றம் கொண்ட மஹ்தி. எவ்வித கஷ்டமும் இன்றி பூமியை நீதத்தால் நிரப்புவார். தன் சிறுவயதிலேயே பெற்றோரை விட்டுத் தனிமைப்படுவார். அவர் தமது மக்கள் மத்தியில் கண்ணியமிக்கவராவார். முஸ்லிம் தேசங்களில் பாதுகாப்பான ஆட்சி செலுத்துவார். அவரது வார்த்தைகள் செவிமடுக்கப்படும். இளைஞர்கள், வயோதிபர்கள் அனைவரும் அவருக்குக் கட்டுப்படுவார்கள். அவர் அநீதியாலும் அட்டூழியத்தாலும் நிரம்பியிருக்கும் பூமியை நீதியால் நிரப்புவார். அப்போது அவரது தலைமைத்துவம் முழுமைபெற்று, அவரது ஆட்சியும் உறுதியடையும். அச்சந்தர்ப்பத்தில் இறைவன் கப்றில் உள்ளவர்களை எழுப்புவான். உயிர்பெற்றெழும் அவர்கள், பூமியில் நிலவும் சிறந்த ஆட்சியையும் அமைதி வாழ்வையும் காண்பார்கள். பூமி தனது அருட்கொடைகளை வெளிப்படுத்தும். அதில் ஆறுகள் பெருக்கெடுக்கும். குழப்பங்கள், அட்டூழியங்கள் அழிந்துவிடும். நற்செயல்களும் செழிப்பும் அதிகரிக்கும். அதற்குப் பின்னுள்ளவற்றை நான் விபரிக்கத் தேவை

---

38. யனாபீஉல் மவத்தா - ப. 448

யில்லை. அந்த அமைதியான உலகினை நான் ஆசீர்வதிக்கிறேன்."[39]

அஹ்லுல் பைத் மத்ஹபினர் தமது கிரந்தங்களில் பதிவுசெய்துள்ள சில ஹதீஸ்களையும் பார்ப்போம்.

1. இமாம் ஸாதிக் அலைஹிஸ்ஸலாம் கூறினார்கள்— "ஹஜ்ஜின் போது மக்கள் தமது இமாமைத் தேடுவாரகள். அவரோ அவர்களைக் காண்பார். ஆனால் மக்கள் அவரைக் காணமாட்டார்கள்."[40]

2. அஸ்பஃக் இப்னு நபாத்தா அறிவிக்கிறார்: 'அமீருல் முஃமினீன் அலீ அலைஹிஸ்ஸலாம் கடுமையாக சிந்தித்துக் கொண்டிருந்தார். கீழே பாரத்த வண்ணம் தலையைக் கையில் ஏந்திய வண்ணம் காணப்பட்டார். நான் அவரை அணுகி 'என்ன பூமியைப் பார்த்தவாறு சிந்திக்கின்றீர்களே. அது பூமியைப் பற்றியா?' எனக் கேட்டேன்.

அமீருல் முஃமினீன் இவ்வாறு பதில் தந்தார்கள். 'நிச்சயமாக இல்லை. பூமியில் நான் எப்பொழுதுமே அக்கறை காட்டியது கிடையாது. எனது சிந்தனை யெல்லாம் எதிர்காலத்தில் எனது சந்ததியில் இருந்து வரும் இமாமையே சுற்றி வந்தது. அவர் எனது பரம்பரையில் பதினோராமவர். அவரோ அநீதியாலும் அக்கிரமத்தாலும் நிறைந்த பூமியை நீதியாலும் சமத்துவத்தாலும் நிரப்புவார். அவர் சிலகாலம் மறைந்திருப்பார். அவர் பற்றிய நம்பிக்கை சிலருக்குக் குழப்பமாக இருக்கும். அதனால் சிலர் வழிகெடவும் சிலர் நேர்வழி பெறவும் முடியும்."[41]

---

39. யனாபீஉல் மவத்தா - ப. 467
40. பிஹாருல் அன்வார்
41. மே. கு

3. இமாம் ஸாதிக் அலைஹிஸ் ஸலாம் கூறினார்– "உங்களது இமாம் மறைந்திருப்பது பற்றி உங்களுக்கு அறிவிக்கப்பட்டால் அதை மறுக்க வேண்டாம்."[42]

4. மீண்டும் அன்னார் கூறினார்: 'இமாமுல் காயிம் இரண்டு முறை மறைந்திருப்பார். ஒன்று குறுகியது அடுத்தது மிக நீண்டது. முதலாவதின் போது அவர் இருக்கும் இடம் எங்கே என்பதை அவரது நேசர்களில் மிக முக்கியமானவர்கள் அறிந்திருப்பர். ஆனால் நீண்ட மறைவின் போது அன்னாரது இடத்தை அவர்களும் அறிந்திருக்க மாட்டார்கள்."[43]

5. இமாம் ஸாதிக் அலைஹிஸ் ஸலாம் கூறியதாவது: 'இமாம் மஹ்தி வெளியாகி விட்டால் வேறு யாருக்கும் யாரும் பைஅத் செய்ய முடியாது. அத்தகைய பிரமாணங்கள் இருப்பின் அவை செல்லுபடியற்றதாகி விடும்."[44]

6. இறைதூதர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி அருளினார்கள்– "இமாம் மஹ்தி என் பிள்ளையாவார். எனது பெயரையும் குடும்பப் பெயரையும் கொண்டிருப்பார். எனது உடல், உளக் குணவியல்புகளையும் பழக்கவழக்கங்களையும் கொண்டிருப்பார். என் வழியில் நின்று மக்களை நான் போதித்த மார்க்கத்தின் பாலும் இறைவேதத்தின் பாலும் அழைப்பு விடுப்பார்.

"அவரைப் பணிந்தவர் என்னைப் பணிந்தார். அவரை மறுத்தவர் என்னை மீறினார். அவரது மறைவை

42. மே. கு
43. மே. கு
44. மே. கு

மறுத்தவர் என்னை நிராகரித்தார். அவரை பொய்யென நம்பியவர் என்னை உண்மைப்படுத்த மாட்டார். அவர் விவகாரத்தில் என் வார்த்தைகளை ஏற்காதவர் பற்றியும் மறுத்துரைப்போர் பற்றியும் அவரின் பாதையிலிருந்து மக்களை வழிகெடுப்போர் பற்றியும் நான் அல்லாஹ்விடம் முறையிடுகிறேன். 'அநியாயம் செய்பவர்கள் எந்த முடிவை அடைந்து கொள்வார்கள் என்பதைச் சீக்கிரம் அறிந்து கொள்வார்கள்."[45]

7. ஏழாவது இமாம் செய்னுல் ஆபிதீன் அலைஹிஸ்ஸலாம் சொல்கிறார்– "நம் பரம்பரையைச் சேர்ந்த இமாம் மஹ்தி முன்னைய நபிமார்களின் குணாம்சங்கள் பலவற்றைப் பெற்றிருப்பார். ஹஸரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் மற்றும் நூஹ் அலைஹிஸ் ஸலாம் இருவரிடம் இருந்தும் நீண்ட ஆயுளையும் ஹஸரத் இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களிடம் இருந்து ஆரவாரமில்லாத ஜனனம் மற்றும் மக்களில் இருந்து விலகிய வாழ்க்கையும், ஹஸ்ரத் மூஸா (அலைஹிஸ் ஸலாம்) விடமிருந்து அச்சமும் மறைந்து வாழ்தலையும் ஹஸ்ரத் ஈஸா (அலைஹிஸ் ஸலாம்) விடமிருந்து மக்கள் அவர் விடயத்தில் கருத்து வேறுபடு தலையும் ஹஸ்ரத் ஐயூபிடம் (அலைஹிஸ் ஸலாம்) இருந்து துன்பத்தில் இருந்து மீள்தலையும் எங்கள் திருத்தந்தை முஹம்மத் நபியிடம் இருந்து நீதியும் சமத்துவமும் நிலைக் கப் போராடுவரையும் தமது குணாம்சங்களாகப் பெற்றிருப்பார். [46]

8. இமாம் ஸாதிக் அலைஹிஸ்ஸலாம் சொன்னார்கள்: "இந்த இமாம் பலகாலம் மறைந்திருப்பார். அக்காலத்தில்

45. மே. கு
46. மே. கு

அடியான் இறைவனை அஞ்சி நடக்க வேண்டும். தனது தீனைப் பற்றிப் பிடிக்க வேண்டும்."[47]

9. இமாம் ஸாதிக் அலைஹிஸ்ஸலாம் மேலும் கூறினார்: "ஒரு காலத்தில் மக்களை விட்டு இமாம் மறைந்திருப்பார்." ஸுராரா இமாமிடம் வினவினார்: "அக்கால கட்டத்தில் மக்கள் என்ன செய்வார்கள்." இமாம் (அலைஹிஸ்ஸலாம்) கூறினார்கள் "அன்னார் வெளிப்படும் வரை தாம் வழிபடும் மார்க்கத்தில் பற்றோடு வாழ்வார்கள்."[48]

10. இமாம் ஸாதிக் (அலைஹிஸ் ஸலாம்) கூறுகிறார்: "மக்களின் மீது ஆட்சி செலுத்தி நீதியை நிலைநாட்ட எவருமே இல்லை என்று ஆகும் போது இமாம் தோன்று வார். இல்லாது போனால், அவர்கள் இருந்தால் நீதியாகச் செய்வார்களே என்று கூறுவார்கள். பின்னர் இமாம் மஹ்தி (அலைஹிஸ்ஸலாம்) சத்தியத்தையும் நீதியையும் நிலை நிறுத்துவார்."[49]

---

47. மே. கு
48. மே. கு
49. மே. கு

# இமாமின் பிறப்பு

இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் ஹிஜ்ரி 255ல் (கி.பி 868) ஷஃபான் மாதம் நடுப்பகுதியில் வெள்ளிக்கிழமை அதிகாலையில் சாமர்ரா நகரில் தமது பிதா இமாம் ஹஸன் அஸ்கரியின் வீட்டில் பிறந்தார்கள். [50]

அவர்களது தந்தை பதினோராவது இமாமாகிய ஹஸன் அல்அஸ்கரி அலைஹிஸ்ஸலாம். அவர்களது தாயின் பெயர் நர்கிஸ். சூசன், ஸெய்கல் என்றும் அப்பெண்மணி அழைக்கப்படுகிறரா்.

அப்பெண்மணி ஈசா நபியின் ஹவாரியூன்களில் ஒருவரான சம்ஊன் என்பவரின் பரம்பரையில் வந்த யோசுவா என்ற ரோம் மன்னரின் புதல்வியாவார்.

அவர் அஹ்லுல் பைத்தினரிடத்தில் மிக கண்ணிய மாக நோக்கப்பட்டு வந்தார். அன்னை ஹகீமா எனும்

---

50. உஸூலுல் காபீ - பா, 1 ப. 514, அல் இர்ஷாத் - ப. 320

இமாம் ஹாதியின் சகோதரி கூட இவர் மீது உயர்ந்த மதிப்பு வைத்திருந்தார். எந்தளவுக்கெனில், அன்னை ஹகீமா தன்னை அவரது சேவகியாகக் கருதினாா.[51] மற்றும், எனது தலைவியே, என்றே அவரை அழைப்பார்.[52]

நர்ஜிஸ் அம்மையார் ரோமில் இருந்த போது ஆச்சரியமான பல கனவுகளைக் கண்டார். ஒரு தடவை இறைத்தூதரையும் ஈஸா (அலை) அவர்களையும் கனவில் காண்கின்றார். அவர்கள் இருவரும் அப்பெண்மணியை இமாம் ஹஸன் அஸ்கரீக்கு திருமணம் செய்து வைக்கின்றனர்.

பிறிதொரு கனவில், அவர்கள் ஹஸ்ரத் பாத்திமா ஸஹ்ரா ஸலாமுல்லாஹி அலைஹாவின் அழைப்பின் பேரில் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கின்றார். இருந்தும் அதனை தனது குடும்பத்தாரிடத்திலும் சூழ உள்ளவர்களிடத்திலும் மறைத்து வந்தார்.

அப்போது முஸ்லிம்களுக்கும் ரோமர்களுக்கும் இடையில் நடந்த போரில் மன்னர் யுத்த முனைகளில் முன்பகுதிகளில் இருந்து படைகளை வழிநடத்தினார். எல்லை நோக்கி நகரும் படைகளுக்குப் பின்னால் மறைவாக தன் அடிமைகளையும் வேலையாட்களையும் அழைத்துக் கொண்டு செல்லுமாறு அன்னை நர்கிஸுக்கு கனவில் ஒரு பெரியாரின் கட்டளை வந்தது.

அன்னையார் தான் கண்ட அனைத்தையும் நுணுக்க மாக நடைமுறைப்படுத்தி எல்லையை வந்தடைந்தார். முஸ்லிம் களின் முன்னணிப் படையணி ஒன்றினால் இவர்கள்

51. பிஹார் - பா. 51, ப. 12
52. மே. கு

அனைவரும் சிறைபிடிக்கப்பட்டனர். அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களும் இதிலே உள்ளனர் என்ற தகவலை அறியாத முஸ்லிம்கள் அவர்கள் அனைவரையும் பக்தாதுக்கு அழைத்துச் சென்றனர்.

இவை அனைத்தும் பத்தாவது இமாமாகிய இமாம் ஹாதியின் கடைசிக் கால கட்டத்தில் நடந்தவையாகும்.[53] இமாம் ரோம் மொழியில் எழுதப்பட்ட ஒரு மடலை தம் தூதுவர் மூலமாக பக்தாதில் இருந்த நர்கிஸுக்கு அனுப்பி வைத்தார். அடிமை விற்பவர்களிடம் இருந்து நர்கிஸை வாங்கிக் கொண்டு இமாமிடம் வந்தார் அத் தூதர்.

அவ்வேளை இமாம் ஹாதி அலைஹஸ் ஸலாம் அப்பெண்மணி முன்பு கண்ட கனவுகளை ஞாபகப்படுத்தி நன்மாராயம் கூறினார். சமீபத்தில் இமாம் அஸ்கரியின் மனைவியாகவும் இவ்வுலகையே நீதத்தால் நிரப்பி, தனது ஆட்சியை அனைத்து உலகுக்கும் பரப்பக்கூடிய ஒரு குழந்தைக்குத் தாயாகும் பாக்கியம் இருப்பதாகவும் கூறினார்.

மார்க்க சட்டதிட்டங்களையும் இஸ்லாமிய பண்புகளை யும் கற்றுக் கொடுக்குமாறும் நர்கிஸின் அனைத்து விடயங் களையும் கவனிக்குமாறும் அஹ்லுல்பைத்தைச் சேர்ந்த கண்ணியமிக்க அன்னையும் இமாமின் சோதரியுமான ஹகீமாவிடம் ஒப்படைத்தார்கள்.

குறிப்பிட்ட சில காலங்களின் பின்பு அன்னை நர்கிஸ் இமாம் ஹஸன் அஸ்கரியின் மனைவியாகினார்.[54] இமாமை

---

53. மே. கு
54. அல் பிஹார் - பா. 51, ப. 6,11

சந்திக்கும் போதெல்லாம், அன்னாருக்கு ஒரு குழந்தை பிறக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்திப்பது அன்னை ஹகீமாவின் வழக்கம்..

ஹகீமா கூறுகிறார்: ஒரு நாள் நான் இமாமிடம் சென்று வழமை போன்று பிரார்த்தித்தேன். அப்போது இமாம் ''மாமியே! நீங்கள் இறைவனிடத்தில் வழங்குமாறு பிரார்த்திக்கின்ற குழந்தை இன்றிரவு பிறக்கின்றது” என்றார்கள்.[55]

ஹகீமா சொல்கின்றார். ஒருமுறை நான் அங்கு சென்ற போது நர்கிஸ் எனது செருப்பைக் கழற்றிவிட முன்வந்தார். 'என் தலைவியே தங்களது பாதணியைக் கழற்றவந்தேன்' என்று கூறினார்.

அதற்கு நான் 'நீங்கள் தான் எனது தலைவி, வழிகாட்டி' என்று கூறியவாறு, நீங்கள் எனக்கு பாதணி யைக் களைந்து விடுவதையோ எனக்கு பணிவிடை செய்வ தையோ இறைவன் மீது ஆணையாக நான் விரும்பமாட்டேன். மாறாக நானே உங்களுக்கு பணிவிடை செய்ய வேண்டும்."

ஹகீமாவின் வார்த்தையைக் கேட்ட இமாம் ஹஸன் அஸ்கரி, "என் மாமியே! இறைவன் உமக்கு நல்லருள் புரிவானாக!" என்று கூறினார்கள்.

அன்று இமாமோடு சூரியன் மறையும் வரை இருந்து விட்டு பின்பு எழுந்து செல்லத் தயாராகி, வேலைக்காரப் பெண்ணிடம் எனது உடையைக் கொண்டு வருமாறு கூறினேன்.

---

55. மே. கு - பா. 51, ப. 25

'மாமியே! நீங்கள் இனறிரவை எங்கள் வீட்டில் கழியுங்கள். இறைவன் அருளால் இன்றிரவு கண்ணியமிக்க ஒரு குழந்தை பிறக்கவுள்ளது. இறைவன் அதனைக் கொண்டு மரணித்துக் கிடக்கும் இவ்வுலகை உயிர் பெறச் செய்வான்." என்றார் இமாம்.

"அக்குழந்தை யார் மூலமாக கிடைக்கும்? நர்கிஸிடமோ கற்பவதிக்குரிய எந்த அடையாளமும் தென்பட வில்லையே" என்று நான் கேட்டேன்.

அதற்கு இமாமவர்கள், "வேறு எவர் மூலமுமல்ல, நர்கிஸ் மூலமாகவே தான்" என்றார்கள்.

ஹகீமா சொல்கின்றார்: நான் நர்கிஸிடம் சென்று அப்பெண்மணியைக் கட்டித் தழுவி உற்று நோக்கினேன். கர்ப்பம் தரித்திருப்பதற்குரிய எந்த அடையாளமும் அவரில் தென்படவில்லை. நான் இதை இமாமிடம் தெரிவித்தேன். அதற்கு இமாம் அலைஹிஸ்ஸலாம் புன்முறுவல் செய்தவர் களாக, “பஜ்ருடைய நேரம் வருகின்ற போது, அவரது கர்ப்பம் தெளிவாகும்" என்றார்கள்.

இப்பிரசவம் ஹஸ்ரத் மூஸாவின் தாயின் பிரசவத்துக்கு நிகரானதாகும். ஹஸ்ரத் மூஸா அலைஹிஸ் ஸலாம் பிறக்கும் வரை அவரது தாயார் கர்ப்பவதி தான் என்று எவரும் அறிந்திருக்கவில்லை. ஏனென்றால், பிர்அவ்ன், மூஸாவைத் தேடி கர்ப்பவதிகளின் வயிற்றைப் பிளந்த காலமது. இதுவும் அது போன்ற ஒன்றுதான். எனவே, தற்கால பிர்அவ்ன்களிடம் இருந்து இதுவும் மறைக்கப்படுகின்றது என அவர் விளக்கினார்.

அன்னை ஹகீமா மேலும் விபரிக்கிறார்: நான் பஜ்ருடைய நேரம் வரை அப்பெண்மணியை அவதானித்துக் கொண்டிருந்தேன். அவரோ எவ்வித அசைவுமின்றி பஜ்ருடைய நேரம் வரை தூங்கிக் கொண்டிருந்தார். திடீரென அவரில் ஒரு மாற்றம் தென்பட, அவரை எனது நெஞ்சோடு அணைத்துக் கொண்டேன். அப்போது இமாம் என்னை அழைத்து, அப்பெண்மணியின் மீது, 'இன்னா அன்ஸல்னா" சூராவை ஓதுமாறு பணித்தார்கள்.

அதனை நான் ஓதினேன். இன்னும் அவரிடம் 'உமது நிலை எவ்வாறு உள்ளது' என்று வினவினேன்.

அதற்கு அவர், ''உமது தலைவர் உமக்கு கூறியது போன்று விடயம் தெளிவாகி விட்டது" என்றார்கள்.

நான் எனக்கு ஏவப்பட்டது போன்று ஓதிக் கொண்டி ருந்தேன். திடீரென வயிற்றிலிருந்து குழந்தை பதில் கொடுத் தது. நான் ஓதியது போல் ஓதி என் மீது ஸலாம் கூறியது.

ஹகீமா தொடர்ந்து கூறுகையில், "அதனைக் கேட்டு நான் பயந்து விட்டேன்." அப்போது இமாம் என்னை அழைத்து, "இறைவனின் இவ்விடயத்தைப் பற்றி நீர் பயப்பட வேண்டாம். இறைவன் சிறுவயதிலே எங்களைப் பேசவைக்கின் றான். பெரிய வயதில் இவ்வுலகில் அவனது அத்தாட்சியாக எங்களை ஆக்கியுள்ளான்" என்று கூறினார்கள்.

நான் பேசி முடியும் போது பார்த்தேன் நர்கிஸைக் காணவில்லை. எனக்கும் அவருக்குமிடையில் ஒரு திரை விழுந்திருந்தது. இமாமிடம் சென்ற போது அவர்கள் 'எனது மாமியே! நீங்கள் செல்லுங்கள் அவரை அவரது இடத்தில் இருக்கக் காண்பீர்கள், என்று எனக்கு கூறினார்கள்.

நான் மீண்டும் சென்றேன். எனக்கும் அவருக்கும் இடையிலிருந்த திரை நீங்கியது. நான் அவரிடம் இருந்தேன். எனது பார்வையை மங்க வைக்கும் ஓர் ஒளி பிரகாசிப்பதைக் கண்டேன்.

அது ஒரு குழந்தை. தனது நெற்றியை நிலத்தில் பதித்து சுஜூது செய்த வண்ணம் இரு பெருவிரல்களை வானத்தின் பக்கம் உயர்த்தி பின்வருமாறு கூறியது, "அல்லாஹ்வைத் தவிர வேறு நாயன் இல்லை. அவனுக்கு இணை கிடையாது. எனது பாட்டன் அவனது தூதர் என்றும் எனது தந்தை முஃமின்களின் தலைவர் என்றும் சாட்சி சொல்கின்றேன்." பின்பு ஒவ்வொரு இமாமாக எண்ண ஆரம்பித்தார்கள். பின்னர், "இறைவா! எனது வாக்குறுதியை எனக்கு நிறைவேற்றுவாயாக. எனது விவகாரத்தை பூர்த்தியாக்கித் தருவாயாக. எனது பாதங்களையும் உறுதிப்படுத்துவாயாக. என்னைக் கொண்டு பூமியை நீதியால் நிரப்புவாயாக" எனப் பிரார்த்தித்தார்கள்.[56]

56. பிஹார் - பா. 51, ப. 12,14, காலுத்தீன் பா. 2, ப. 100,102

## பிறந்த செய்தி மறைக்கப்பட்டது

அப்பாஸிய உமையா ஆட்சியாளர்கள் குறிப்பாக இமாம் ஸாதிக் அவர்களின் காலத்திலும் அதன் பின்பும் இமாம்கள் விவகாரத்தில் சந்தேகத்துடன் கடின போக்குடனும் நடந்து கொண்டனர். இச்சங்கை மிகு மனிதர்கள், மக்கள் மத்தியில் கண்ணியத்திற்குரியவர்களாக இருந்ததும், காலப்போக்கில் மனிதர்கள், அவர்களை அதிகமாக நேசிக்க ஆரம்பித்தமையும் இப்பொறாமைக்கு வலுவூட்டியபது.

மக்களுக்கு மத்தியில் பிரபல்யமாக பேசப்படுகின்ற வாக்குறுதியளிக்கப்பட்ட இமாம் மஹ்தி இறைத்தூதரின் வழித்தோன்றலில் இமாம்களின் பேரர்களில் உள்ளவராகும். அவர் இமாம் அஸ்கரியின் மகன். அவர்தான் இவ்வுலகை நீதியால் நிரப்புவார் என்ற செய்தியை அவர்கள் அறிந்திருந்தனர்.

எனவே, இமாம் அஸ்கரியையும் அவர்களது ஆட்சியின் தலைமைப் பீடமான சாமர்ராவுக்கு அழைத்து அன்னாரது தந்தை பாட்டன் முப்பாட்டன் போன்று கண்காணித்து தம் பிடியில் வைத்திருந்தனர்.

இவ்வாறான ஒரு பிறப்பு நிகழக்கூடாது, அது வளரக் கூடாது, அதனை பூண்டோடு அழித்து விட வேண்டும் என்பதில் அப்பாசியர் முழு மூச்சோடு முயற்சித்தனர். ஆனால், இறைநியதியோ அவ்வாறான ஒரு பிறப்பு பிறந்தாக வேண்டும் என்றாகிவிட்டது. இதன் விளைவாக அவர்களது அனைத்து முயற்சிகளும் தோல்வியைத் தழுவின.

இறைவன் அவர்களது பிறப்பை மூஸா அலைஹிஸ் ஸலாம் பிறந்தது போன்று ஒரு மறைவான விடயமாக ஆக்கி வைத்தான்.

அதேநேரத்தில் இமாம் ஹஸன் அஸ்கரியின் நெருங்கிய தோழர்கள் இமாம் மஹ்தியை அவர்களின் தந்தையின் காலத்தில் பல தடவைகள் கண்டிருக்கின்றனர்.

மேலும் தமது தந்தை ஷஹீதாக்கப்பட்ட போது வெளியாகிய இமாம் மஹ்தி, தமது தந்தையின் ஜனாஸா வுக்கு தொழுகை நடாத்தினார்கள். அதன் பின்பு அவர்களை விட்டும் இமாம் மறைந்து விட்டார்கள்.

பிறப்புத் தொட்டு தந்தையின் ஷஹாதத்து வரை இமாம் அஸ்கரியின் நெருங்கிய தோழர்கள் சிலர் இமாம் மஹ்தியை காணும் பாக்கியத்தைப் பெற்றனர் அவர்கள், இமாம் அஸ்கரியின் வீட்டில் தான் இருக்கின்றார்கள் என்பதையும் அறிந்து கொண்டர்.

பொதுவாக இமாம் மஹ்தி சிறுவயதில் மறைந்தி ருந்த போதிலும் முக்கியமான தலைவர்கள் அவரைக் கண்டனர்.

I. ஷீயாக்களுக்கு மத்தியில் மதிப்பு மிக்க பெரியார்களில் ஒருவரும், இமாம் அஸ்கரியின் நெருங்கிய தோழர்களில் ஒருவருமான அஹ்மத் பின் இஸ்ஹாக் கூறுகின்றார்;

நான் ஒருமுறை இமாம் அஸ்கரீயிடம் அவருக்குப் பின்னுள்ள இமாம் யார் எனக் கேட்க விரும்பினேன். ஆனால், என்னை முந்திக் கொண்ட இமாம் "உயர்வான இறைவன் ஹஸ்ரத் ஆதம்(அலை) அவர்களைப் படைத்ததி லிருந்து இப்பூவுலகை அவனது பிரதிநிதிகளிலிருந்து வெற்றிட மாக வைத்திருக்கவில்லை. அதேபோன்று மறுமை நாள் வரை அவனது படைப்பினங்களை அவனது ஹுஜ்ஜத் (பிரதிநிதி) இல்லாமல் தனிமைப்படுத்த மாட்டான். அந்த ஹுஜ்ஜத்தைக் கொண்டு இப்பூவுலகவாசிகளுக்கு வரும் சோதனைகளைத் தடுப்பான். அவரைக் கொண்டே மழைபொழியச் செய்கின் றான். அவரின் பொருட்டைக் கொண்டே பூமியில் உள்ள அருட்கொடைகளை வெளிப்படுத்துகின்றான் என்றார்கள்.

அப்போது நான், "இறைத்தூதரின் பேரரே! தங்களுக் குப் பின் இமாமாக வரக்கூடியவர் யார்?" என வினவினேன். உடனடியாக எழுந்து வீட்டினுள் நுழைந்த இமாம், பௌர்ணமி இரவில் காட்சி தரும் சந்திரன் போன்ற முகத்தோற்றத்தைக் கொண்ட மூன்று வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவரை தமது தோளில் சுமந்து வெளியே வந்தார்கள்.

அப்போது இமாம் "அஹ்மதே! நீர் இறைவன் மீதும் அவனது அத்தாட்சி மீதும் கொண்டுள்ள சங்கையும், மதிப்பும் இல்லையென்றால் இந்த பிள்ளையை உமக்குக் காண்பித்தி ருக்க மாட்டேன்" என்று கூறிவிட்டு, "இக்குழந்தைக்கு இறைத் தூதரது பெயரும், அவர்களது பட்டப்பெயரும் சூட்டப் பட்டுள்ளன. இவர் அநீதியும், அட்டூழியங்களும் மலிந்து காணப்படும் இவ்வுலகை நீதத்தாலும் நேர்மையாலும் நிரப்பி வைப்பார்" என்றார்கள்.

மேலும் கூறினார்கள்: "அஹ்மதே! இந்நிகழ்வு ஹிழ்று (அலை), துல்கர்னைன் (அலை) போன்றோரின் நிகழ்வுகளுக்கு ஒப்பான ஒன்றாகும். இறைவன் மீது ஆணையாக, அவருக்கு ஒரு மறைவு உண்டு. அதில் அவரது இமாமத்தை ஏற்று இறைவனால் உறுதிபடுத்தப்பட்டவர்களைத் தவிர ஏனையவர்கள் நஷ்டமடைந்து நாசமாகி விடுவார்கள். அதே போன்று அவரது இமாமத்தை ஏற்றுக் கொள்ளக்கூடியவருக்கு அவரது வெற்றிக்காக பிரார்த்திக்கும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

அஹ்மத் இப்னு இஸ்ஹாக் கூறுகின்றார்: நான் இமாமவர்களிடம், "இதுவிடயத்தில் நான் உறுதி கொள்வதற்கு ஏதாவது அடையாளங்கள் உள்ளனவா?" என்று கேட்டேன்.

அப்போது அச்சிறுவர் வாய்திறந்து அழகான முறையிலே கூறினார்: "நான் அல்லாஹ்வை அஞ்சிய அத்தாட்சியாக இவ்வுலகில் இருக்கின்றேன். அவனது எதிரிகளையும் அடக்கியாள்வேன்" என்று பேசினார்.

"இத்தெளிவுக்குப் பிறகும் அடையாளங்களைத் தேடாதீர்" என்று வேண்டிக் கொண்டார்.

ஷெய்க் சதூக் கூறுகின்றார்: இந்த ஹதீஸை நான் அலீ இப்னு அப்துல்லாஹ் பின் அல்வறாகி வாயிலாக கேள்விப்பட்டதுடன் அது அவரது கையெழுத்தாகவும் இருந்தது. அது பற்றி நான் அவரிடம் கேட்ட போது, நான் கூறியது போன்று அதனை அவர் ஸஃத் பின் அப்துல்லாஹ் வாயிலாகவும், அஹ்மத் பின் இஸ்ஹாக் வாயிலாகவும் எனக்கு அறிவித்துள்ளதாக கூறினார்.[57]

---

57. கமாலுத்தீன் பா 2 ப 55,57

2. அஹ்மத் இப்னு ஹஸன் இப்னு இஸ்ஹாக் அல்கும்மி கூறுகின்றார்:

இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் பிறந்தபோது எங்கள் தலைவர் இமாம் அஸ்கரி (அலை) அவர்களிடம் இருந்து எனது பாட்டனார் அஹ்மத் பின் இஸ்ஹாக் அவர்களுக்கு ஒரு ஏடு வந்தடைந்தது. அது இமாமின் கைகளால் எழுதப்பட்டு அவரது முத்திரையும் அதில் பதியப்பட்டிருந்தது. அதில் எழுதப்பட்டிருந்ததாவது;

“எங்களுக்கு ஒரு குழந்தை பிறந்துள்ளது. இவ்விடயம் வெளியில் யாருக்கும் தெரியாது இருக்கட்டும். நாங்கள் மிகவும் நெருக்கமானவர்களுக்கும் அவரது விலாயத்தை ஏற்பவர்களுக்குமே இத்தகவலை வெளிப்படுத்து வோம். நாங்கள் அவரை உமக்கு அறிமுகப்படுத்துவதை விரும்புகின்றோம். இறைவன் எங்களை சந்தோஷப்படுத்தியது போன்று உம்மையும் சந்தோஷப்படுத்த வேண்டும் என்பதற்காக வேயாகும். வஸ்ஸலாம்."[58]

3. இமாம் மஹ்தியின் பிறப்பு பற்றி அறிந்து வைத்திருந்த பெரியார்கள் வரிசையில் குறிப்பிடத்தக்கவர்கள்; இமாமின் மாமி ஹகீமா, இமாம் அஸ்கரியின் பணியாளர் நஸீம் அபூஜஃபர், முஹம்மத் இப்னு உஸ்மான் உமரீ, அல் ஹுஸைன் இப்னு ஹஸன் அலீ அம்ர் அல் அஹ்வாஸீ, பணியாளரான நஸ்ர் காமில் இப்னு இப்றாஹீம், அலீ இப்னு ஆஸ் அல்கூபி, அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ் அலவி, இஸ்மாயீல் இப்னு அலீ, யஃகூப் இப்னு யூசுப் அல்ழர்ராப்,[59] இஸ்மாயீல் இப்னு மூஸா இப்னு ஜஃபர், அலீ இப்னு

58. மே. கு - பா. 2, ப. 107
59. மே. கு பா. 2, ப. 104.114, இஸ்பாத்துல் ஹுதாத் - பா. 7, ப. 15,35

அல்முதஹ்ஹர், இப்றாஹீம் இப்னு இத்ரீஸ், பணியாளர் தரீப்[60] அபூஸஹ்ல் நவ்பாதீ முதலானோர்.[61]

4. இமாம் அஸ்கரி சில ஷீயாக்களிடம், கூறியதாக ஜஃபர் இப்னு முஹம்மத் இப்னு மாலிக் கூறுகின்றார்: அக்கூட்டத்தினர் இமாமிடம் சென்ற போது இமாம்,

'நீங்கள் எனக்குப் பின்னால் ஹுஜ்ஜத் யார் என்பதை கேட்க வந்துள்ளீர்கள்" என்றார்கள்.

அதற்கு அவர்கள் 'ஆம்" என்றனர்.

சந்திரனின் ஒரு துண்டு போன்றும், தோற்றத்தில் இமாம் அஸ்கரிக்கு ஒப்பானவர் போன்றும் உள்ள ஒரு சிறுவர் அங்கு காணப்பட்டார்.

இமாம் அஸ்கரி கூறினார்கள்: "இவர்தான் உங்கள் இமாம். எனக்குப் பின்பு இவர்தான் உங்கள் பிரதிநிதி. அவருக்கு வழிப்படுங்கள். எனக்குப் பின்பு அவரை விட்டும் பிரிந்து விடாதீர்கள். அப்படிப் பிரிந்தால், உங்கள் மார்க்கத்தில் நீங்கள் நாசமாகி விடுவீர்கள். அறிந்து கொள்ளுங்கள், இத்தினத்திற்குப் பிறகு அவர் வெளிவரும் காலம் வரை நீங்கள் அவரைக் காணமாட்டீர்கள். இமாமின் பிரதிநிதியாக உஸ்மான் இப்னு சயீத் இருக்கின்றார். அவர் சொல்வதை ஏற்று நடவுங்கள். அவரது ஏவல்களுக்கு தலைசாயுங்கள்."[62]

ஈசா இப்னு முஹம்மத் அல் ஜவ்ஹரி அறிவிக்கிறார் – "நானும் ஒரு குழுவினரும் இமாமைச் சந்தித்து வாழ்த்துக் கூறவெனப் புறப்பட்டோம். அப்போது எங்களது

---

60. அல் இர்ஷாத் - ப. 330
61. அல் குனா வல் அல்காப் - பா. 1, ப. 91
62. மே. கு

சகோதரர்கள் ஷஃபான் மாதம் வெள்ளிக்கிழமை பஜ்ருடைய நேரத்தில் ஒரு குழந்தை பிறந்ததாக அறிவித்தனர். நாங்கள் இமாமிடம் சென்று இமாம் அவர்கள் எங்களுக்கு ஸலாம் கூற ஆரம்பிப்பதற்கு முதல் நாங்கள் வாழ்த்துக் கூறினோம்.

நாங்கள் அவரிடம் கேள்வி கேட்பதற்கு முதல் அவர் எங்களிடம் கேட்டார் "எனது மகன் பற்றிய தகவல்களை மறைக்கக்கூடியவர் உண்டா?" என்று கேட்டுவிட்டு ஹஸரத் மூஸா (அலை) அவரது தாய் பெட்டியில் வைத்து கடலில் வீசிய போது 'அவருக்கும் நான் விடையளித்து விட்டேன் பின்னர் மூஸா தன் தாயிடம் திரும்பிய வந்து விடுவார்' என மீண்டும் அதனை அவரது தாயிடமே மீட்டுத் தருவதாக வாக்களித்தது போல், அவரையும் மீட்டுத் தருவதாக அல்லாஹ் வாக்களித்துள்ளான்."[63]

63. இஸ்பாதுல் ஹுதாத் - பா. 7, ப. 143

## *மறைக்கப்பட்டது ஏன்?*

ஹிஜ்ரி 360 வரையான காலப்பகுதியில் சமுதாயத்தினர் மத்தியில் இறைத்தூதரும் அன்னாரைத் தொடந்து அவர்களது பிரதிநிதிகளான இமாம்களும் இஸ்லாமிய அடிப்படைகள் அதன் மார்க்க சட்டதிட்டங்கள் சமுதாய, பொருளாதார கலாசார விவகாரங்கள் மற்றும் உயரிய போதனைகளையும் தெளிவுபடுத்தினர். அவை பாதுகாக்கப்பட்டு எழுத்துருப் பெற்றன.

. அக்கிரமக்கார ஆட்சியாளரகளின் கெடுபிடிகள் மத்தியிலும் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இஸ்லாத்தின் இனிய பரிமாணங்ளைத் தெளிவு படுத்துவதில் இமாம்கள் முன்னின்றனர். எந்தக் கேள்வியும் குளறுபடியும் இல்லாத ஓர் உலகளாவிய அமைப்பாக இஸ்லாம் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஓர் உலகளாவிய நீதியான ஆட்சிக்குரிய அடிப்படைகள் மிகத் தெளிவாக உள்ளன. எனினும் அத்தகைய ஓர்

ஆட்சியைப் புரிந்து கொள்கின்ற அல்லது அதனை அங்கீகரிக்கின்ற அளவுக்கு உலக மக்கள் தயார் நிலையில் இல்லை. அத்தகைய தயார்நிலை காணப்பட்டிருப்பின் இமாம் மஹ்தி மறைந்திருக்க மாட்டார்கள்.

இதுவே அவரது குறுகிய கால மறைவும் கூட பின்னர் நீண்டகால மறைவாக மாறக் காலாய் அமைந்தது.

மர்ஹூம் நஸீருத்தீன் தூஸீ கூறுகின்றார்கள்: "இமாம் மஹ்தியின் மறைவுக்கு காரணம் இறைவனின் புறமோ அல்லது அவர் புறமோ இல்லை. இமாமின் வருகைபற்றிய அச்சமும் மனிதர்களின் பணிவின்மையுமே உண்மைக் காரணம். இவை நீங்குமானால் இமாம் வெளியாகுவது தவிர்க்க முடியாதது."[64]

இமாம் மஹ்தியின் மறைவு இறைவனது நாட்டத்தின் பிரகாரம் நிகழ்ந்த தெளிவான விடயம். நாம் இங்கு அதன் அனைத்து இரகசியங்களையும் அறிந்து கொள்ளும் நிலையில் இல்லை. ஆனால் நாம் கூறிய விடயமும் இமாமின் மறைவுக்கு தலையாய காரணமாக அமையும் சாத்தியம் உண்டு. பதினொரு இமாம்களின் நீண்ட காலப் பிரிவில் மக்களின் உதாசீனமும் சமுதாயத்தின் அடாவடித்தனங்களும் அனுபவத்தில் கண்டவை. அந்த காலகட்டத்தில் மனிதர்கள் இமாம்களுக்கு மாறுசெய்ததும் அவர்களுக்கு ஒத்தாசை வழங்காமையும் தெளிவான விடயமாகும். நீதமான இஸ்லாமிய ஆட்சிக்கு தலைசாய்ப்பதற்கு இவர்கள் தயாராக இல்லை என்பது மிகத் தெளிவாகியது. ஆகவே இச்சந்தர்ப்பத்தில் இமாமின் மறைவு ஓர் அத்திய வசியமாக மாறிவிடுகின்றது.

64. ரிஸாலாதுல் இமாமா - ப. 25

அதே போன்று அவர் தோன்றுவாரெனில் அதுவும் பல கேள்விகளை எழுப்பி விடலாம். பொறுத்தமற்ற ஒரு சமுதாய சூழலில் இமாம் ஏன் வெளியாக வேண்டும். எனவே அவர்கள் மறைந்திருந்து நிலைமை பொருந்தி வருகிறது எனக் கருதுகிறார்களோ அப்போது தோன்றுவார்கள். மக்களும் அப்போது தான் முண்டியடித்துக் கொண்டு அவருக்கு ஆதரவு தருவார்கள்.

"ஒரு சமுதாயம், தங்களைத் தாங்களே மாற்றிக் கொள்ளாதவரை இறைவன் அவர்களை மாற்றமாட்டான்."

இந்த இரகசியம் இமாமின் வெளியேற்றம் வரும் வரை மறைவாகவே இருக்கும். பின்னர் வெளிவரும் போது மனிதர்கள், தாமே இமாமின் மறைவுக்குக் காரணம் எனினும் அது பற்றி பராமுகமாக இருந்து விட்டோம் என்பதனை அறிந்து கொள்வார்கள்.

மனிதர்கள், ஏற்கனவே தங்களைத் தயார்படுத்தி இருப்பார்கள் என்றால் நிச்சயமாக இமாம் அவர்களுக்கு மத்தியில் வெளியாகி இருப்பார்கள். ஆனால் அவர்கள் தங்களைத் தயார்படுத்தவோ தங்களை சீர்செய்து கொள்ளவோ உறுதிபூணவில்லை. மாறாக தங்களது உள்ளங்களை குழப்பத்தை விளைவிக்கும் பலதரப்பட்ட அமைப்புகளிடம் பறிகொடுத்தனர். அவ்வாறான அமைப்புகள், மாநாடுகள் அவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் ஆற்றலைப் பெற்றுள்ளன என்றும் கற்பனை செய்து கொண்டிருந்தனர்.

மர்ஹூம் குலைனி தனது அல் காஃபீ கிரந்தத்திலும் ஷெய்க் தூஸீ 'அல் ஃகைபா'விலும் ஸுராராவிடமிருந்து அறிவிக்கின்றார்கள்:

இமாம் ஸாதிக் அலைஹிஸ்ஸலாம் சொல்லக் கேட்டேன். 'நிச்சயமாக இச்சிறுவருக்கு (இமாம் மஹ்திக்கு) அவர் வெளியாகி வருமுன் ஒரு மறைவு உண்டு.' நான், 'அது ஏன்' என்று கேட்டேன்.

அவர்கள், "அச்சத்தின் காரணமாக" என்று கூறி, தமது வயிற்றை நோக்கி சமிக்ஞை செய்தார்கள். (அதாவது கொலை செய்யப்படலாம் என்ற அச்சம் என்பதை விளக்கினார்கள்.[65]

இமாம் மஹ்தி எந்தவொரு கட்டமைப்புக்கோ, ஆட்சி அதிகாரத்தினருக்கோ கட்டுப்படுபவராக இருக்கமாட்டார். அவர்கள் வெளிவரும் போது அவர்களுக்கு எவருடனும் உடன்படிக்கை கிடையாது.

"இமாம் வெளியாகும் போது எவருக்கும் எவர் மீதும் எவ்வித பிரமாணமும் கட்டுப்பாடும் கிடையாது."[66]

ஏனெனில், சத்தியத்தின் அடிப்படையில் பணிகளை முன்னெடுக்கவும் இறைதீனை எவ்வித பயமோ, பக்கச்சார்போ, அநீதியோ இன்றி நடைமுறைப்படுத்தி அதனை சமுதாயத்தில் நிலைபெறச் செய்வதற்கும் இந்த சூழல் அவசியமாகும்.

எனவே தான், எவருடனும் எவ்வித உடன்படிக்கையும் வாக்குறுதியும் அவர்களுக்கு கிடையாது. அவர்கள் ஒரு தெளிவான நிலையில் எவருடனும் எந்த உடன்பாடும் இன்றி வெளியாகுவார்கள். அழிச்சாட்டிய, குழப்பக்கார ஆட்சிகளை யெல்லாம் நீக்கி இஸ்லாத்தைப் பரப்பி அனைத்து உலகிலும் அதனை உறுதி பெறச் செய்வார்கள்.

---

65. அல் காபீ - பா. 1, ப. 337
66. மே. கு - பா. 1, ப. 342

## குறுகிய மறைவு

இமாம் அஸ்கரியின் ஷஹாதத்துக்குப் பிறகு ஹிஜ்ரி 260லிருந்து ஹிஜ்ரி 329வரை, அதாவது கிட்டத்தட்ட 69 வருடங்கள் சிறிய மறைவு நீடித்தது.[67]

அன்று தொட்டு இமாம் மஹ்தி தோன்றும் வரை பெரிய மறைந்திருப்பது அல்லது நீண்ட மறைவாகும்.

சிறிய மறைவின் போது இமாமுடன் மக்களின் தொடர்பு பூரணமாக துண்டிக்கப்படவில்லை. வரையறுக்கப் பட்ட நிலையில் அவரது தொடர்புகள் இருந்தன. இமாமின் குறிப்பிட்ட பிரதிநிதிகள் மூலம் தங்களது கேள்விகளையும் கஷ்டங்களையும் இமாமிடம் முன்வைத்து அவற்றுக்குரிய பதில் களையும் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு மக்களுக்கு இருந் தது. சில சந்தர்ப்பங்களில் நேரடியாகவும் இமாமை சந்திக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்தனர்.[68] நீண்ட மறைவுக்கும் இமாமோடு தொடர்பு துண்டிக்கப்பட்டு அவர்களது விடயங்கள்

67. மே. கு
68. அல் மஹ்தி

பொது பிரதிநிதிகளான மார்க்க மேதைகளிடம் ஒப்படைக்கப் படுவதற்கும் உரிய முன் எற்பாடாக இக்கால கட்டத்தைக் கணிக்க முடியும்.

நீண்ட மறைவு முன் ஏற்பாடுகள் எதுவும் இன்றி திடீரென நிகழ்ந்திருந்தால் சிந்தனா ரீதியான சில குளறு படிகளை ஏற்படுத்தி இருக்கும். அதேபோன்று சிந்தனையும் அம்மறைவை ஏற்கும் நிலையில் இருந்திருக்க மாட்டாது.

எனவே தான் சிறிய மறைவின் போது சிந்தனைகள் படிப்படியாக அதனை ஏற்றுக் கொள்ளும் நிலைக்கு தயார்படுத் தப்பட்டன. பின்பு தான் நீண்ட மறைவு ஆரம்பமாகிற்று.

இமாமின் குறிப்பிட்ட பிரதிநிதிகள் ஊடாக இமாமுடன் கொண்டிருந்த தொடர்பும் சிறிய மறைவின் போது இமாமுடன் சிலர் சந்தித்தமையும் ஒன்றோடொன்று இணைந்து இமாமின் பிறந்துள்ளமையையும் உயிர் வாழ்வையும் உறுதிப்படுத்துவதில் பங்காற்றின. இவ்வாறான முன் ஏற்பாடுகள் இன்றி பெரிய மறைவு நிகழ்ந்திருந்து, இவ்விடயங்கள் போதிய தெளிவு இல்லாமல் இருந்திருந்தால், சிலருக்கு அவ்விடயத்தில் சந்தேகம் ஏற்பட வாய்ப்பிருந்திருக்கும்.

எனவே தான், இறைவன் தனது நுட்பத்தையும் நுணுக் கத்தையும் கொண்டு இறைதூதர் மற்றும் இமாம்கள் மூலமாக அறிவித்தது போன்று அவர்களது மறைவையும் இருவிதமாக ஏற்படுத்தினான். சிறிய மறைவு, அதன் காலமும் குறுகியது. அது நீண்ட மறைவுக்குரிய ஏற்பாடாகும். அதனையே சிறிய மறைவு என்றும் அதனை பின் தொடர்ந்து வருகின்ற நீண்ட மறைவை பெரிய மறைவென்றும் அழைக்கப்படுகின்றது.[69]

---

69. அ.்.யானுஷ் ஷீஆ - பா. 4, ப. 21

## நான்கு பிரதிநிதிகள்

இமாம் மஹ்தி சிறிய மறைவின் போது, தமது நேசர்களில் உள்ள பெரியார்களில் சிலரை அவர்களது வகீலாகவும், பிரதிநிதிகளாகவும் நியமித்தார்கள். அவர்கள் அனைவரும் இமாமை சந்திக்கும் பாக்கியத்தை பெற்றிருந்தனர். எனவே மக்கள் தங்களது கேள்விகளை இந்த பிரநிதிகளிடம் ஒப்படைத்தனர். அதன் பதில்களையும் அக்கடிதத்திலேயே குறிப்பிட்டவாறு அவர்களிடத்தில் இருந்து பெற்றுக் கொண்டனர்.

இந்த நான்கு பிரதிநிதிகளைத் தவிர, வேறு பிரதிநிதிகளும் பல பிரேதேசங்களில் இருந்துள்ளனர். அவர்கள் மக்களின் கேள்விகளை மேற்கூறிய நான்கு முக்கிய பிரதிநிதிகள் ஊடாகவே ஒப்படைத்து பதிலும் பெற்றுக் கொண்டனர்.

ஆயதுல்லாஹ் ஸெய்யித் முஹ்சின் அமீன் கூறுவது போன்று, அந்நால்வரும் பொதுவான பிரநிதிகளாக இருந்தனர். ஏனையோரின் பிரநிதித்துவம் ஹுஸைன் முஹம்மத் இப்னு ஜஃபர் அல் அஸதி, அஹ்மத் இப்னு அஸதி, அஹ்மத் இப்னு இஸ்ஹாக் அஷ்அரீ, இப்றாஹீம் இப்னு முஹம்மத் அல் ஹமதானி, அஹ்மத் இப்னு ஹம்ஸா இப்னு அல் யஸஉ, முஹம்மது அல்யஸஉ போன்றோரின் பிரதிநிதித்துவத்தைக் குறிப்பிடலாம்.

## நான்கு பிரதிநிதிகளின் பெயர்கள்

1. அபூஅம்ர் உஸ்மான் இப்னு சயீத் அல்அம்ரீ.
2. அபூஜஃபர் முஹம்மத் இப்னு உஸ்மான் இப்னு சயீத் அல்அம்ரீ.

3. அபுல்காசிம் அல்ஹுஸைன் இப்னு றூஹ் அன்னபஹ்தீ.
4. அபுல்ஹஸன் அலீ இப்னு முஹம்மத் அஸ்ஸமரீ.

## I. அபூ அம்ர் உஸ்மான் இப்னு சயீத் அல்அம்ரீ

இவர் மரியாதைக்குரிய கண்ணியவான். இமாம் அஸ்கரீ, இமாம் ஹாதி போன்றோரின் நம்பிக்கைக்குரியவராகவும் வகீலாகவும் இருந்திருக்கின்றார்.[70] மேலும் இமாம் மஹ்தியின் கட்டளைப் பிரகாரம் இமாம் அஸ்கரியின் ஜனாஸாவை கபனிட்டு அதனை அடக்கம் செய்யும் பொறுப்பையும் கொண்டிருந்தார்.[71]

அவர், சாமர்ராவில் உள்ள அல்அஸ்கர் என்ற இடத்தில் வசித்து வந்ததனால், அவரையும் அல்அஸ்கரீ என்றும் அழைத்தனர். அவர், இமாமவர்களுக்கு செய்கின்ற பணிவிடைகளை, அக்கால ஆட்சியாளர்களின் கூலியாட்கள் கண்டு கொள்ளாமல் இருப்பதற்காக எண்ணெய் வியாபாரம் செய்பவர்களாக இருந்தார்கள்.

இமாம் அஸ்கரீயைத் தொடர்பு கொள்வது கடினமாக இருந்த போது இமாமிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவர்கள் மீது கடமையாக்கப் பட்டவைகளை அவர்கள் அபூஅம்ரிடம் ஒப்படைத்தார்கள். அவர், அவற்றை தனது எண்ணெய் விற்கும் பாத்திரத்தினுள்ளும், தண்ணீர் எடுத்துச் செல்லும் துருத்தியின் உள்ளும் சுமந்து சென்று அதனை இமாமிடம் ஒப்படைப்பார்கள்.

அஹ்மத் இப்னு இஸ்ஹாக் கும்மீ கூறுகின்றார்:

---

70. முன்தஹல் மகால், அல் மஹ்தி ப. 181
71. அ.்.யானுஷ் ஷீஆ

ஒரு தடவை நான் இமாம் ஹாதியிடம் சென்று, "நான் சில சந்தர்ப்பங்கள் இங்கு இருக்கிறேன். அதே போல் இல்லாமலும் இருப்பேன். அதேபோன்று இங்கு இருக்கும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் உங்களிடம் வரவும் முடிவதில்லை. அப்போது யார் சொல்வதை கேட்டு, யார் கட்டளைக்கு அடிபணிந்து நடப்பது?" என்று கேட்டேன்.

அதற்கு இமாம், "இதோ அபூஅம்ர் இருக்கிறாரே (உஸ்மான் பின் சயீத் அம்ரீ). அவர் நம்பிக்கைக்குரிய ஒரு மனிதர். உங்களுக்கு அவர் ஏதாவது கூறினால், அதை என்னிடம் இருந்தே சொல்கின்றார். அத்தோடு அவர் ஏதேனும் உங்களிடம் கொண்டு வந்தால் என்னிடமிருந்தே கொண்டு வருகின்றார்" என்று கூறினார்கள்.[72]

உஸ்மான் பின் சயீதின் பிரதிநிதித்துவம் இமாம் ஹஸன் அஸ்கரீ (அலை) அவர்களின் ஷஹாதத்துக்குப் பிறகும் இமாம் மஹ்தியின் உத்தரவுடன் நீடித்தது. ஷீயாக்களும் அவரை பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டு அவர்களது தேவைகள் சம்பந்தமாக அவர்களிடத்தில் கேள்விகள் கேட்பார்கள். அதன் பதில்களை இமாமிடம் இருந்து பெற்று அவர்களுக்கு அறிவிப்பார்கள்.[73]

மர்ஹூம் முஹக்கிக் தாமாத் தனது 'சிராதுல் முஸ்தகீம்" என்ற நூலில் எழுதியுள்ளார்: இமாம் அஸ்கரீ அலைஹிஸ்ஸலாம் தனக்கு பின்னால் வரும் இமாமைக் காட்டித் தர வேண்டுமென இமாமின் நேசர்கள் சிலர் வாக்குவாதப்பட்டனர். இமாமுக்கு இது சம்பந்மாக கடிதம் எழுதினார் உஸ்மான். வெண்ணிற காகிதத்தில் கறுப்பு மை

72. மே. கு
73. அல் மஹ்தி - ப. 171, பிஹார் - பா. 51, ப. 346

இல்லாமல் காய்ந்த பேனாவால் எழுதி அனுப்பினார். அதற்கு இவ்வாறு பதில் வந்தது

'அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமான அல்லாஹ்வின் திருநாமத்தால் இறைவன் எங்களையும் உங்களையும் வழிகேட்டில் இருந்தும் குழப்பத்திலி ருந்தும் பாதுகாப்பானாக. உங்களில் ஒரு கூட்டத்தினர் தீனிலும், அவர்களது இமாம் மீதும் சந்தேகம் கொள்கின்றனர் என்கின்ற விடயம் எங்களுக்குக் கிட்டியது. எனவே அது சம்பந்தமாக உங்களுக்காக வேண்டி நாம் கவலைப்படுகின் றோம். எங்களுக்காக அல்ல. ஏனெனில் இறைவனும் உண்மையும் எங்களுடனாகும். இதற்குப் பிறகும் நாங்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. நாங்கள் இவைனின் அருளை நேரடியாகப் பெறுகிறோம். ஏனையோர் இறைய ருளை நமக்கூடாகப் பெறுகின்றனர். நீங்கள் ஏன் சந்தே கம் கொண்டு தடுமாற வேண்டும்? இமாம் மஹ்தி என்கின்ற காயிம் மறைவார் என்பதனை முன் சென்ற இமாம்கள் மூலம் அறிந்திருக்கவில்லையா?

உங்கள் வாழ்வில் உறுதிப்பாட்டையும் வழிகாட்ட லையும் வழுங்குவதற்காக ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் தொட்டு இமாம் அஸ்கரி அலைஹிஸ் ஸலாம் வரைக்கும் தலைவர்களையும் வழிகாட்டிகளையும் இறைவன் ஆக்கித் தரவில்லையா? ஒரு வழிகாட்டி மறையும் போது இன்னொரு வழிகாட்டி வெளியாகுவார். ஒரு நட்சத்திரம் சாய்கின்ற போது, இன்னொரு நட்சத்திரம் உதயமாகும்.

எனவே, இறைவன் இமாம் அஸ்கரீயை எடுத்துக் கொண்டால் அவனது மார்க்கம் பொய்த்து விட்டது என்றும் இறைவனுக்கும் படைப்புகளுக்கும் இடையில் உள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டு விடுகின்றது என்றும் எண்ணுகின்றீர்களா?

ஒரு போதும் அவ்வாறில்லை. மறுமை நாள் வந்து இறைவனின் கட்டளை வெளிவரும் வரை அவ்வாறு நிகழாது. எனவே இறைவனை அஞ்சிக் கொள்ளுங்கள். எங்கள் மீது ஸலாம் கூறுங்கள். விடயங்களை எங்களிடம் சமர்ப்பியுங்கள். நான் உங்களுக்கு உபதேசம் செய்துவிட்டேன். இறைவன் என்மீதும் உங்கள் மீதும் சாட்சியாக இருக்கின்றான்."[74]

## *2. அபூஜஃபர் இப்னு முஹம்மத் இப்னு உஸ்மான்*

உஸ்மான் இப்னு சயீத் தனது மறைவுக்கு முன்பு இமாமின் உத்தரவுடன் தனது மகனான அபூஜஃபர் இப்னு முஹம்மத் இப்னு உஸ்மானை அவருக்குப் பின்னால் சமுதாயத்தில் இமாமின் பிரதிநிதியாக நியமித்தார்கள்.

முஹம்மத் இப்னு உஸ்மானும் தனது தந்தை போன்று ஷீயாக்களிடத்தில் முக்கியமான ஒருவராகவும், இறையச்சம், உண்மை, நீதம், தூய்மை போன்ற பண்புகள் உடையவராகவும் காணப்பட்டார். அது மாத்திரமன்றி இமாம் அஸ்கரி அலைஹிஸ் ஸலாம் காலத்தில் அவரும், அவரது தந்தையும் இமாமிடத்தில் நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தனர்.

ஷெய்க் தூஸி கூறுகின்றார்: "அஹ்லுல்பைத் நேசர்கள் அவரது நீதத்திலும் இறையச்சத்திலும் நம்பிக்கையிலும் ஏகோபித்த முடிவைக் கொண்டுள்ளனர்."[75]

முதலாவது பிரதிநிதியான உஸ்மான் இப்னு சயீதுக்குப் பிறகு இமாம் மஹ்தியிடமிருந்து பின்வரும் கட்டளை வந்தது.

---

74. அல் அன்வாருல் பஹிய்யா - ப. 324
75. பிஹார் - பா. 51, ப. 345, அல் ∴கய்ப் - பா. 316,319

அதிலே முதலாம் பிரதிநிதியின் மறைவு பற்றியும் அவரது மகனின் பிரதிநிதித்துவம் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டிருந்தன.

"இறைவனின் தீர்ப்பை பொருந்திக் கொண்டவர்களாக அவனது ஏவலுக்கு அடிபணிந்தவர்களாக, நாம் எல்லோரும் அவனுக்குரியவர்கள் அவன் பாலே மீள வேண்டியுள்ளோம். உமது தந்தை ஈடேற்றம் உடையவராக வாழ்ந்து புகழுக்குரியவ ராக மரணித்துள்ளார். எனவே இறைவன் அவர் மீது அருள் புரிந்து நேசர்களுடனும் இமாம்களுடனும் இணைத்துள்ளான். அவர், இமாம்களது விடயத்தில் ஓய்வின்றி உழைத்த ஒருவர். அதேபோன்று இறைவனுக்கும் இமாம்களுக்கும் நெருக்கத்திற்கு உள்ளாக்கக்கூடிய அதிக முயற்சிகளை செய்தார். இறைவன் அவரை தனது அருட்பார்வைக்குள்ளாக்கி அவர் பட்ட கஷ்டத்துக்குரிய கூலியைக் கொடுப்பானாக."

இன்னும் ஒரு கடிதத்தில், "இறைவன் உமக்கு உயரிய கூலியைத் தருவானாக. நீ சந்தித்துள்ள இந்த சோகநிகழ்வுக் குரிய பொறுமையை இறைவன் உனக்குத் தருவானாக. அவரது பிரிவு உன்னையும் எங்களையும் தனிமைப்படுத்தி உள்ளது. அவருக்கு இறைவன் கொடுத்த பரிபூரண ஈடேற்றத் தில் ஒன்று தான் உன்னைப் போன்ற பிள்ளையைத் தந்து அவருக்குப் பின்னால் அவரது பொறுப்பைச் செய்யவும் அவரது இடத்தை நிரப்பவும் அருள் புரிந்துள்ளான்.

'நான் இறைவனைப் புகழ்கின்றேன். நிச்சயமாக உள்ளங்கள் உமக்கு சார்பாகவே உள்ளன. உன்னிடத்தில் இறைவன் தந்துள்ள அனைத்துக்கும் உதவி புரிவான். உனது வல்லமைகளையும் புயங்களையும் பலப்படுத்தி உன்னை வெற்றியடையச் செய்து உனது பாதுகாவலனாக இருப்பான்."[76]

76. பிஹார் - பா. 51, ப. 349, கமாலுத்தீன் - பா. 2, ப. 188

அப்துல்லாஹ் இப்னு ஜஃபர் அல்ஹுமைரி கூறுகின்றார்கள்: உஸ்மான் இப்னு சயீத் மரணித்த போது, இமாமவர்கள் முன்னர் எங்களுக்கு எழுதிய எழுத்தை ஒத்த எழுத்துடன் ஒரு கடிதம் வந்தது. ஆதன் படி அபூஜஃபர் முஹம்மத் இப்னு உஸ்மான் தனது தந்தையின் இடத்துக்கு நியமிக்கப் பட்டிருந்தார்.[77]

இன்னும் ஓர் இடத்தில் இஸ்ஹாக் இப்னு யஃகூப் என்பவரின் கேள்விக்கு பதிலளிக்கும் போது, எழுதினார். 'இறைவன் முஹம்மத் இப்னு உஸ்மானையும் அவரது தந்தை யையும் பொருந்திக் கொள்வானாக" அவர் எனது நம்பிக்கைக்குரியவர். அவரது தொகுப்பு எனது வசனமாகும்."[78]

அப்துல்லாஹ் பின் ஜஃபர் அல்ஹுமைரீ கூறுகின்றார்: நான் முஹம்மத் இப்னு உஸ்மானை சந்தித்த போது, "நீர் இமாம் மஹ்தியைச் சந்தித்துள்ளீரா?" எனக் கேட்டேன். அதற்கு அவர் "ஆம். நான் அவரை இறுதியாக இறையில்லமான கஃபாவில் வைத்து சந்தித்தேன். அப்போது அவர்கள் பின்வருமாறு கூறினார்கள். 'எனது இறைவா! நீ எனக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றித் தருவாயாக."[79]

இன்னும் அவரை (இமாமை) கஃபாவின் திரையைப் பிடித்தவாறு பின்வருமாறு கூறுபவர்களாகவும் கண்டேன்: "என் இறைவா! என்னைக் கொண்டு உமது எதிரிகளை பழிவாங்குவாயாக."[80]

---

77. பிஹார் - பா. 51, ப. 349
78. மே. கு - பா. 51, ப. 349
79. மே. கு - பா. 51, ப. 351
80. மே. கு - பா. 51, ப. 351

மேலும் முஹம்மத் இப்னு உஸ்மான் அறிவிக்கின்றார். “இறைவன் மீது ஆணையாக, இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் ஒவ்வொரு வருடமும் ஹஜ்ஜுக்கு சமுகம் தருகின்றார் கள். மனிதர்களைக் கண்டு அவர்களை அறிந்து கொள்கின் றார்கள். ஆனால் மனிதர்கள் அவரை அறிய மாட்டார்கள்.”[81]

அபுல் ஹஸன் இப்னு அஹ்மத் அத்தல்லால் அல்கும்மீ என்பவர் கூறுகின்றார்: "நான் சலாம் கூறுவதற்காக அபூஜஃபர் முஹம்மத் இப்னு உஸ்மான் (ரழி) அவர்களிடம் சென்றேன். அப்போது அவரிடத்தில் ஓர் ஆடையிருந்தது. அதன் மீது ஓவியன் ஒருவன் சில அலங்காரங்களை வரைந்து அதில் ஓரப்பகுதியில் குர்ஆன் வசனங்களையும் இமாம்களது பெயர்களையும் எழுதுகின்றான்.

நான் "எனது தலைவா! இது என்ன உடை?" என்று கேட்டேன். "இது எனது கப்றுக்குரியவை. அக்கப்ரிலே நான் இருந்து கொள்வேன். அல்லது அதன் மீது சாய்ந்து அதில் புறழ்வேன். நான் ஒவ்வொரு இரவும் அதனுள் இறங்கி குர்ஆனில் இருந்து ஒரு ஜுஸ்உவை ஓதிவிட்டு வெளிவரு வேன். அதனைப் பற்றி நினைப்பேன்.

இன்னும் (அறிவிப்பாளர்) கூறுகையில், இமாம் எனது கையைப் பிடித்து அம்மண்ணறையைக் காண்பித்து விட்டு, "குறிப்பிட்ட இந்த நாள், மாதம், வருடம் வந்தால் நான் இறைவனிடம் சென்று விடுவேன். இந்தப் போர்வைக்குள்ளே அடங்கப்பட்டு விடுவேன்." எனக் கூறினார்கள்.

நான் அவரை விட்டு வந்த பிறகு அவர் கூறியவை நிகழ்ந்தன. நானும் எதிர்பார்த்த வண்ணம் இருந்தேன்.

81. மே. கு - பா. 51, ப. 50

அபூஜஃபர் நோய்வாய்ப்பட்டார். அவர் குறிப்பிட்டபடி அவரால் கூறப்பட்ட அதேநாளில் அதே மாதத்தில், அதே வருடத்தில் மறைந்து அதே கப்றில் அந்த போர்வையினுள் அடக்கம் செய்யப்பட்டார்கள்."[82]

அவர்களது மறைவுக்கு முன்பு முக்கியஸ்தர் சிலர் அவர்களைச் சந்தித்த போது, இமாம் மஹ்தியின் கட்டளைப் பிகராகம் இமாமோடு உள்ள விடயங்களைக் கவனிப்பதற்காக அபுல் காஸிம் ஹுஸைன் இப்னு ரூஹ் நவ்பக்தீயை நியமித்து விட்டுச் சொன்னார்கள். "நான் மரணித்தால் அபுல் காஸிம் நவ்பக்தி விடயங்களுக்கு பொறுப்பாக இருப்பார். எனவே அவர்களை எனது இடத்துக்கு எனக்குப் பின்பு நியமிக்குமாறு ஏவப்பட்டுள்ளேன். எனவே உங்கள் விடயங் களை அவர்களிடமே ஒப்படையுங்கள்."[83]

அபூஜஃபர் முஹம்மத் இப்னு உஸ்மான் அல்அம்ரீ ஹிஜ்ரி 305ல் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார்கள்.[84]

## *3. ஹுஸைன் இப்னு றூஹ் அன்னவ்பஹ்தீ*

அபுல்காசிம் அல்ஹுஸைன் இப்னு றூஹ் அன்ன பஹ்தீ கண்ணியம் வாய்ந்த மதிப்புமிக்க ஒருவராகக் காணப்பட்டார்கள். அவர்களை, அவர்களது நண்பர்கள் போலவே எதிரிகளும் மதித்தனர். அவர்கள் கூரிய சிந்தனை யுடையவர். தெளிவான கருத்துகள் கூறுபவர். இறையச்சம் மிக்கவர்.

---

82. அல் குனா வல் அல்காப்
83. பிஹார் - பா. 51, ப. 355
84. மே. கு - பா. 51, ப. 352

அவர் இரண்டாவது பிரதிநிதியின் காலத்திலும் சில விடயங்களை முன்னின்று செய்துள்ளார். ஜஃபர் இப்னு அஹ்மத் இப்னு மதீல் அல்கும்மீ என்பவர், முஹம்மத் இப்னு உஸ்மானுடன் ஏனையவர்களை விட மிகவும் நெருக்கமான வராகவும், விசேட தொடர்புடையவராகவும் இருந்தார். முஹம்மத் இப்னு உஸ்மானின் கடைசி நேரத்தில் அவருடைய சாப்பாடு ஜஃபர் இப்னு அஹ்மதினதும் அவரது தந்தையின தும் வீட்டிலே தயார் பண்ணப்பட்டது. எனவே தான் இரண்டாவது பிரதிநிதியின் தோழர்களுக்கு மத்தியில் ஜஃபர் இப்னு அஹ்மத் இப்னு மதீல் தான் இரண்டாவது பிரதிநிதியின் பிரதிநிதியாக வருவார் என்று அதிகம் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனாலும், முஹம்மத் இப்னு உஸ்மானின் கடைசி நேரத்தில், மரணத் தறுவாயில் நடந்ததை ஜஃபர் இப்னு அஹ்மத் இப்னு மதீல் கூறுகின்றார். அபூஜஃபர் முஹம்மத் இப்னு உஸ்மான் அல்அம்ரீ அவர்கள் மரணத்தறுவாயில் இருக்கும் போது நான் அவரது தலைப்பகுதியிலிருந்து இருந்தேன். அபுல்காசிம் இப்னு றூஹ் அவரது காலடியில் இருந்தார். அப்போது முஹம்மத் இப்னு உஸ்மான் திடீரென என் பக்கம் திரும்பி சொன்னார். நான் அபுல்காசிம் இப்னு அல்ஹுஸைன் றூஹ் என்பவருக்கு வசிய்யத்து செய்யுமாறு ஏவப்பட்டுள்ளேன். "நான் உடனே அவரது தலைப்பகுதியை விட்டு எழுந்து அபுல்காசிமின் கையைப் பிடித்து நான் இருந்த இடத்தில் அவரை உட்காரவைத்து விட்டு நான் அவரது கால் பக்கத்தில் அமர்ந்து கொண்டேன்."[85]

"நாம் அவரை அறிவோம். இறைத் திருப்தியை அவர் பெற்றிருந்தார். நாம் அவரின் தொகுப்பில் றிவாயத்

85. மே. கு - பா. 51, ப. 354

தில் நம்பிக்கை வைத்துள்ளோம். அல்லாஹ் அவருக்கு அவனிடமுள்ள எல்லா நலன்களையும் தருவானாக. நிச்சய மாக அவன் சக்திமிக்கவன். இணையற்றவன். அவனது தூதர் மீதும் அன்னாரின் பரிசுத்த குடும்பத்தின் மீதும் ஸலாம் உண்டாகட்டும்." [86]

அபூசஹ் பக்தாதில் வாழ்ந்த பெரிய அறிஞர். இமாம் மஹ்தியுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தவர். அவர் அதிக நூற்களை எழுதியுள்ளார். "எவ்வாறு இந்த பிரதிநிதித்து வம் உம்மை விடுத்து ஷெய்க் அபுல்காசிம் இப்னு றூஹிடம் கொடுக்கப்பட்டது." என அவரிடம் வினவப்பட்ட போது அவர் சொன்னார், "எவரை தெரிவு செய்ய வேண்டும் என்பதனை இமாம்கள் நன்கு அறிவார்கள்."

"நான் எதிரிகளுடன் விவாதிப்பவன். இமாமின் இருப் பிடத்தை அபுல்காசிம் அறிந்திருந்தது போன்று, நானும் பிரதிநிதித்துவத்தின் மூலம் அறிந்திருந்தால், இமாமை நிராகரிப் போரிடம் விவாதிக்கும் போது, அவர்களுக்கு சங்கடங்களை ஏற்படுத்தி அவர்களது இடத்தை அறிந்து கொள்ளவும் ஆளாக்கி இருப்பேன். ஏனெனில், அதனை எனக்குள் மறைத்துக் கொள்ள மாட்டேன்.

"ஆனால், அபுல் காசிமோ இமாம் மஹ்தி தனது ஆடையின் கீழ் மறைந்திருந்தாலும் அது கத்திரியால் துண்டிக் கப்பட்டாலும் அவரது ஆடையும் கூட இமாமைக் காட்டிக் கொடுக்கமாட்டா." [87]

அபுல்காசிம் அல்ஹுஸைன் இப்னு றூஹ், 21 வருடங்கள் பிரதிநிதித்துவப் பொறுப்பை ஏற்று செயற்பட்டார்.

---

86. மே. கு - பா. 51, ப. 356
87. மே. கு - பா. 51, ப. 389, அல் குனாவல் அல்காப் பா. 1, ப. 91

அவரது வபாத்துக்கு முன்பு இமாம் மஹ்தியின் உத்தரவுடன் பிரதிநிதித்துவப் பொறுப்பை அபுல்ஹஸன் அலீ இப்னு முஹம்மத் அஸ்ஸம்ரீயிடம் ஒப்படைக்கப்பட்டது ஹிஜ்ரி 326ல் ஷஃபான் மாதம் இவ்வுலகை விட்டுப் பிரிந்தார். அவரது அடக்கஸ்தலம் தற்போது பக்தாதில் உள்ளது.[88]

## *4. அபுல்ஹஸன் அலீ இப்னு முஹம்மத் அஸ்ஸம்ரீ*

'முன்தஹல் மகால்' என்ற நூலை எழுதிய ஆசிரியர் அபுல்ஹஸன் அலீ இப்னு முஹம்மத் அஸ்ஸம்ரீ பற்றி தனது நூலில்: "அவர், வர்ணிக்கத் தேவையற்ற அளவு உயர்வான ஒரு மேதை எனக் குறிப்பிடுகிறார்."[89]

இந்த சங்கை மிக்க மனிதர், ஹுஸைன் இப்னு றூஹின் மறைவுக்குப் பின்பு இமாம் அலைஹிஸ்ஸலாம் ஊடாக பிரதிநிதித்துவப் பொறுப்பைப் பெற்றுக் கொண்டு மக்களின் விவகாரங்களை வழிநடாத்திச் சென்றார்.

முஹத்திஸ் அல்கும்மி கூறுகின்றார்: ஒருமுறை அபுல்ஹஸன் அஸ்ஸம்ரீ பெரியோர்கள் பலரின் சந்நிதானத்தில் இருந்த போது, "அலீ இப்னு பாபவைஹியின் மறைவினால் ஏற்படக்கூடிய கவலைக்குரிய நற்கூலியை இறைவன் தருவானாக. அவர் இப்போது தான் இவ்வுலகை விட்டுச் சென்று விட்டார்" என்று கூறினார்.

அப்பெரியோர்கள் அந்நாளை, அந்த மாதத்தைக் கணக்கிட்டு வைத்திருந்தார்கள். சுமார் 17.18 நாட்களின் பின்பு அலீ இப்னு பாபவைஹி மரணித்த செய்தி அவர்க

---

88. மே. கு, பா. 5, ப. 358,360
89. முன்தஹல் மகால்

ளுக்கு வந்தது.[90] ஹஸ்ரத் ஸம்ரீ குறிப்பிட்ட அதே நேரத்தில் அன்னார் மரணித்திருந்தார்.[91]

அலீ இப்னு முஹம்மத் அஸ்ஸம்ரீ ஹிஜ்ரி 329ல் மரணிக்கின்றார். அவர் மரணிப்பதற்கு முன்பு சிலர் அவரிடம் வந்து அவருக்குப் பின்னால் உள்ளவரை அறிவிக்கும் படி கேட்டனர். அதற்கு அவர் “இறைவனிடமே அனைத்தும் உள்ளது. அதனை அவன் அறிவிப்பான்” என பதிலளித்தார்.[92]

இமாமிடம் இருந்து பின்வரும் மடல் வந்தது. அதில் அஸ்ஸம்ரீயைப் பற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. அதனை அவர் மனிதர்களுக்கு வெளிப்படுத்தி, ஒவ்வொன்றாக எடுத்துக் கூறினார்: "இறைவனின் திருநாமம் கொண்டு. அலீ இப்னு முஹம்மத் அஸ்ஸம்ரீயே! இறைவன் உமது மறைவினால் உமது சகோதரர்களின் கூலியை உயர்வுபடுத்தித் தருவானாக. இன்னும் ஆறு நாட்களில் நீர் மரணித்து விடுவீர். எனவே உமது விடயங்களை சரிபார்த்துக் கொள்வீர். உமது மறைவுக்கு பின்னால் உமது இடத்திற்கு எவரையும் நியமிக்காதீர்.

"எனது மறைவு நீண்டதாக மாறிவிட்டது. எனவே இறைவனின் கட்டளை வரும் வரை வெளியாக முடியாது. அக்கட்டளை நீண்ட ஒரு காலத்திற்குப் பிறகு உள்ளங்கள் கறை படிந்து பூமியில் அநியாயமும் அட்டுழியமும் மலிந்து காணப்படும் சந்தர்ப்பத்தில் வரும்.

"சிலர் நாம் நேசர்களிடத்தில் தாம் எனது பிரதிநிதி என்றும் என்னைக் கண்டதாகவும் கூறுவார்கள்.

---

90. அல் குனா வல் அல்காப் - பா. 3, ப. 231
91. அல் ஃகய்பா ப. 242,243
92. பிஹார் - பா. 51, ப. 361, அல் ஃகய்பா - ப. 242,243

எனவே விழிப்பாக இருங்கள். எவரேனும் சுப்யானியின் தோற்றத்துக்கும் வானலோக சத்தத்திற்கும்[93] முன்பு இவ்வாறு கூறுவாரானால் அது பொய்யாகும். எந்த அசைவும் எந்த வல்லமையும் உயர்வான இறைவனைக் கொண்டேயாகும்."[94]

ஆறாம் நாள் அபுல்ஹஸன் அஸ்ஸம்ரீ இவ்வுலகை விட்டுப் பிரிகின்றார். 'ஹலன்ஜீ' எனும் பகுதியில் அநி இதாப் கால்வாய் அருகில் அடக்கம் செய்யப்பட்டார்.[95]

இமாமின் குறிப்பிட்ட பிரதிநிதிகள் இறையச்சம் உடையவர்களாவும் அவர்கள் காலத்தில் வாழ்ந்த மனிதர்களில் சிறப்பு வாய்ந்தவர்களாகவும் காணப்பட்டனர். எனவே, மக்கள் அவர்கள் மீது அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். சிறிய மறைவின் காலத்தில் தங்களது கேள்விகளை, கஷ்டங்களை அவர்களிடம் ஒப்படைத்து அதற்குரிய பதிலை இவர்கள் மூலமாக இமாமிடமிருந்து பெற்றுக் கொள்வார்கள்.

இக்கால கட்டத்தில் சில சாலிஹீன்கள் இந்த பிரதிநிதிகள் மூலமாக இமாமை சந்திக்கும் பாக்கியத்தையும் பெற்றிருந்தனர். அக்கால கட்டத்தில் இமாம் புறமிருந்த அந்த பிரதிநிதிகளால் நிகழ்ந்த அதிசயங்கள், கராமத்துகள் அனைத்தும் மக்களை இன்னும் உறுதி பெறச் செய்தன.

ஷெய்க் தூஸீ தனது 'அல்இஹ்திஜாஜ்' என்ற நூலில் கூறுகையில்; "இவர்களில் எவரும் அந்த பிரதிநிதித்துவப் பொறுப்பை இமாமின் உத்தரவின்றி பெற்றுக் கொள்ளவில்லை. ஒருவர் பின்னொருவராக பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டதும்

---

93. அ.ஃயானுஷ் ஷீஆ - பா 1 ப. 21, காமூஸுர்ரிஜால் - பா. 7, ப. 51
94. பிஹார் பா 51 ப 362
95. அல் மஹ்தி ப 182,183

இமாமின் உத்தரவின் பேரிலே தான். மக்களும், இமாம் புறமிருந்து அவர்களது உண்மைப்பாட்டையும், பிரதிநிதித்துவத் தையும் உறுதிப்படுத்தும் கராமாத்துகள் அவர்கள் மூலமாக வெளிப்படாதவரை அவர்களை ஏற்றுக் கொள்ளவும் இல்லை."[96]

96. அல் இஸ்திஜாஜ்

## நீண்ட மறைவு

எவ்வாறு இருந்தும் சிறிய மறைவு முடிந்து பெரிய மறைவு ஆரம்பித்து இன்று வரை நீடித்துள்ளது. சிறிய மறைவின் போது மக்கள் தங்கள் பிரச்சினைகளை பிரதிநிதிகள் மூலமாக இமாமிடம் முன்வைத்து அதற்குரிய பதிலைப் பெறும் வாய்ப்பைப் பெற்றிருந்தனர். ஆனால், அவ்விடயம் பெரிய மறைவின் போது சாத்தியமற்ற ஒன்றாக ஆகிவிட்டது.

இக்காலகட்டத்தில் மனிதர்கள் தங்களது விடயங்களை இமாமின் பொதுப்பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கு மாறு நிர்ணயிக்கப்பட்டு அதன் பதிலை அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டனர். ஏனெனில், பொதுப்பிரதிநிதிகள் அவர்களைப் பற்றி வந்திருந்த அறிவிப்புகளின் பார்வையிலும் அவர்கள் கொண்டிருந்த பாண்டித்தியத்தின் பார்வையிலும் ஓர் அத்தாட்சியாகக் காணப்பட்டனர்.

மர்ஹூம் அல் கஷீ கூறுகின்றார்: இமாமிடமிருந்து வந்துள்ள ஒரு மடலில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "எங்களது

நேசர்களில் எவரேனும் எங்கள் நம்பிக்கைக்குரியவர்களால் எங்களிடம் இருந்து அறிவிக்கப்படும் விடயத்தில் சந்தேகம் கொண்டால் அவருக்கு ஷபாஅத்தும் இல்லை, மன்னிப்பும் இல்லை. நாங்கள் எங்கள் இரகசியங்களை அவர்களிடம் கொடுத்து அதனை அவர்களிடம் ஒப்படைத்துள்ளோம் என்பதனை அவர்கள் அறிவார்கள்." [97]

ஷெய்க் தூஸீ, ஷெய்க் சதூக், ஷெய்க் தபர்சி போன்றோர் இஸ்ஹாக் இப்னு அம்மாரிடம் இருந்து அறிவிக்கின்றார்கள். அவர் இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் மறைந்துள்ள காலத்தில் மக்கள் மீது கடமையான விடயம் பற்றிய பகுதியில் பின்வருமாறு கூறியதாக அறிவிக்கின்றார்:

"நிகழக்கூடிய புது விடயங்களில் எங்களது அறிவிப்பாளர்களிடம் மீளுங்கள். ஏனெனில், அவர்கள் உங்களிடம் எனது அத்தாட்சியாகவும் நான் அவர்கள் மீது இறைவனின் அத்தாட்சியாகவும் உள்ளேன்."[98]

மர்ஹூம் தபர்சி தனது நூலில் இமாம் சாதிக் கூறியதாக பின்வருமாறு அறிவிக்கின்றார்:

“மார்க்க மேதைகளில் இருந்து எவரேனும், தனது ஆத்மாவை கெடுதிகள், தவறுகளிலிருந்து பாதுகாப்பவராகவும், தனது மார்க்கத்தை பாதுகாப்பவராகவும், தனது மனோ இச்சைக்கு மாற்றமானவராகவும், இறைவனின் ஏவலுக்கு கட்டுப்பட்டு நடப்பவராகவும் இருந்தால் மக்கள் அவரை பின்பற்றட்டும்.”[99]

---

97. அல் மஹ்தி ப 182,183
98. அல் இஹ்திஜாஜ் - ப 283
99. அல்மஹ்தி, ப.182,183

எனவே, பெரிய மறைவின் போது முஸ்லிம்களின் பொறுப்பு மார்க்க மேதைகளிடம் ஒப்படைக்கப்படுகின்றது. அனைத்து விவகாரங்களும் *'வலிய்யுல் பகீஹ்'* எனப்படும் 'மார்க்க அறிஞரின் தலைமை'யின், காண்காணிப்பின் கீழே நடைபெறும்.

மார்க்க மேதைகளுக்கு இதற்கு முன்பிருந்தே *பத்வா* -மார்க்கத்தீர்ப்பு- வழங்கும் அதிகாரம் வழங்கப்படிருந்த போதிலும், *மர்ஜஇய்யத்* எனும் மார்க்க மேதைகளின் தலைமைத்துவம் இந்த கால கட்டத்திலிருந்து ஆரம்பித்து இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் தோன்றும் வரை நீடிக்கும்.

## மறைந்திருப்பதன் விளைவு

இமாம் மஹ்தியை விசுவாசிப்பதன் மூலம் எதிர்பார்ப்புகள் உயிர் பெறுவதுடன் சிந்தனை வளர்ச்சியும் ஏற்படுகின்றது. எனவே, இமாம் மஹ்தியை ஈமான் கொண்டு அவர் எந்நேரத்திலும் வெளிவரலாம் என்ற எதிர்பார்ப்பிற்கு பாரிய தாக்கங்கள் உள்ளன. அதனை எதிர்பார்க்கின்றவர்களிடத்திலும் பரிசுத்த தோழர்களின் உள்ளங்களிலும் அதிக நலவை ஏற்படுத்துகின்றது.

எனவே தான், அவர்கள் தங்களை நல்ல முறையில் தயார்படுத்திக் கொள்கின்றனர். இன்னும் அனைத்து வகையான அநீதிகளை விட்டும் அத்து மீறல்களை விட்டும் தங்களை தூரமாக்கிக் கொள்கின்றனர். இமாம் அவர்களின் அரவணைப்பையும் தோழமையையும் அடைந்து கொள்ளும் அளவுக்கு நீதியையும் சகோதரத்துவத்தையும் நேசிக்கின்றனர். இமாமை சந்திக்கவும் தரிசிக்கவும் கிடைக்கும் சந்தர்ப்பத்தைப் பாழாக்க விரும்ப மாட்டார்கள்.

அவரது கோபத்தின் மூலமும் அவரை விட்டு தூரமாகுவதன் மூலமும் ஏற்படும் நெருப்பில் தங்களை எரித்துக் கொள்ள மாட்டார்கள். மேலும், இமாம் மஹ்தியை ஈமான் கொள்வதன் மூலம் குழப்பக்கார, அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கு தலைசாய்க்க மாட்டார்கள். அவரை பின்பற்றுபவர்களிடத்தில் தைரியத்தையும் உற்சாகத்தையும் இது உண்டு பண்ணுகின்றது. எந்த அநியாயக்காரன் முன்னிலை யிலும் எழுந்து நின்று அவனது கட்டளையை மீறி அவனுக்கு அடிபணியாத அளவுக்கு தைரியம் வழங்குகிறது.

இந்த சங்கை மிக்க இமாமின் தோற்றத்தை ஈமான் கொள்வதனால் முஸ்லிம்கள் அனைத்து விடயங்களையும் எதிர்காலத்துக்கு ஒப்படைத்து விட்டு மீட்பாளர் வந்ததும் சரிப்பட்டு வரும் என ஒதுங் கி இருப்பதோ அக்கிரம அதிகாரத்திற்கு தலைசாய்ப்பதோ, தொழில்நுட்ப முன்னேற்றத் திலும் அறிவுசார்ந்த முன்னேற்றத்திலும் தங்களை ஈடுபடுத் தாது சமூக சேவைகளை விட்டும் கைநழுவுவதோ சரியான ஒரு விடயமல்ல.

எனவே, இவ்வாறான எண்ணம் சோம்பேறித்தனத்துக் கும் பலவீனத்துக்கும் இட்டுச் செல்வது அனுமதிக்க முடியாது.

இமாம்களும் அவர்களது மாணவர்களும் இமாமின் தோற்றம் பற்றி உற்சாகத்துடனும் உறுதியுடனும் நம்பிக்கையுட னும் இருக்கவில்லையா? அதேபோன்று பெரும் பெரும் உலமாக்கள் அதனை ஈமான் கொண்டு நம்பிக்கை கொள்ள வில்லையா?

அவ்வாறு இருந்தும் இஸ்லாம் உயர்வு பெற வேண்டும் என்பதற்காக தங்களால் முடிந்த அனைத்து முயற்சி களையும் மேற்கொள்வதில் சளைத்து விடவும் இல்லை. அதே போன்று பொதுவாக தங்கள் கடமைகளை, பொறுப்புகளை

செய்வதை விட்டும் ஒதுங்கிக் கொள்ளவுமில்லை. மாறாக, ஆபத்துமிக்க தங்களது பொறுப்புகளை நிறைவேற்றுபவர்களாக வும் அனைத்து உற்சாகத்துடனும் எதிர்பார்ப்புகளுடனும் தங்கள் காலத்தில் செயல்படுவோராகவும் காணப்பட்டனர்.

ஆரம்ப கால முஸ்லிம்கள் நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி வாயிலாக நிச்சயமாக இஸ்லாம் பெரும் வெற்றிகளைச் சந்திக்கும் என்று கேள்விப்பட்டிருந்தார்கள். இந்த நற்செய்தி அக்கால முஸ்லிம்களை ஒதுங்கிக் கொண்டு மௌனம் சாதிக்கும் அளவுக்கு ஆக்கவில்லை. மாறாக அவர்களது முயற்சிகள் அதிகரித்தன. அதன் விளைவால் தங்களது தியாகங்களையும் ஆளுமையையும் வளர்த்தெடுத்து தங்கள் நோக்கங்களை அடைந்து கொண்டனர்.

தற்கால முஸ்லிம்கள் பாரிய பொறுப்புகளைக் கொண்டுள்ளனர். அவற்றை பொறுமையுடனும் உறுதியுடனும் முன்னெடுத்துச் செல்வது அவர்களது கடமையாகும். அதே போன்று சந்தர்ப்ப சூழல்களை அறிந்து அதற்கேற்ப எவ்வேளையிலும் களத்தில் சமூகமளித்து சந்தர்ப்பங்களை நல்ல முறையில் பிரயோசனப்படுத்துவது அவர்களது பொறுப்பாகும்.

அத்தோடு அவர்கள் தீயவற்றை தடுப்பவர்களாகவும், நல்லவற்றைப் பரப்புபவர்களாகவும், அவற்றை தூய்மையுடனும் பேணி நடப்பவர்களாகவும் இருப்பதுடன் எதிரிகளின் ஊடுரு வல்களுக்கு எதிரில் அரணாக நின்று இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் எதிரியின் இராணுவ, அரசியல், பொருளா தார, சிந்தனை ரீதியான அனைத்து தாக்குதல்களிலிருந்தும் பாதுகாப்பவர்களாகவும் இருக்க வேண்டும்.

இன்னும் இறைவனின் அருளும் இமாமின் உதவியும் அடைந்து கொள்ளும் வகையில் தம்மை பலப்படுத்திக்

கொள்ள வேண்டும். தங்களால் இயலுமான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். அத்தோடு இப்பூமியில் இமாம் தோன்றுவதற்கு அவசியமான அனைத்து வாய்ப்புகளையும் தயார் செய்வோராக இருக்க வேண்டும்.

இமாம் அலீ அலைஹிஸ்ஸலாம், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி கூறியதாக அறிவித்தார் கள். “வணக்கங்களில் மிகச் சிறந்தது இமாம் மஹ்தியின் வருகையை எதிர்பார்த்திருப்பதாகும்.” [100]

இன்னும் நான்காம் இமாமான செய்னுலாப்தீன் அலைஹிஸ் ஸலாம் கூறுகின்றார்கள்:

“இறைத்தூதரதும் அவருக்குப் பின்பு வந்த இமாம்கள தும் பிரதிநிதிகளில் ஒருவரான பனிரண்டாவது இமாம் நீண்ட காலம் மறைந்திருப்பார். அவர் மறைந்துள்ள காலத்தில் அவரது இமாமத்தை ஏற்று அவர் தோன்றுவதை எதிர்பார்த் திருப்பவர்கள், அனைத்துக் காலத்துடையவர்களையும் விட சிறந்தவர்கள்.

ஏனெனில், இறைவன் அவர்களுக்கு மறைந் துள்ள நிலையிலும் இருப்பது போன்ற உணர்வைப் பெறும் அறிவையும், விளக்கத்தையும், சிந்தனையையும் கொடுத்துள் ளான். அத்தோடு அவர்களை அக்காலத்தில் இறைத் தூதரு டன் இருந்து போராடிய போராளிகள் போன்றும் ஆக்கியுள் ளான். அவர்கள் தான் உண்மையில் தூய்மையானவர்களும் எங்களது நேசர்களும் இறைதீனுக்காக மறைவாகவும் வெளிப் படையாகவும் அழைப்பு விடுக்கும் அழைப்பாளர்களும் ஆவர்."

---

100. யனாபீஉல் மவத்தா ப 493

இன்னும் ஓர் இடத்தில் இமாம் கூறுகையில், "வெற்றிகளில் மிகச் சிறந்தது இமாம் மஹ்தியின் வருகையை எதிர்பார்த்திருப்பதாகும்"[101] என்றார்.

ஆயத்துல்லாஹ் மர்ஹூம் சத்றுத்தீன் அஸ்ஸத்ர் எழுதுகின்றார்: "எதிர்பார்ப்பு என்பது எதிர்பார்க்கப்படக் கூடிய விடயத்தை அடைந்து கொள்வதில் நிதானத்துடன் இருந்து அதனை நிலைபெறச் செய்வதாகும்."

குறிப்பாக இமாமிய்யாக்களிடம் பொதுவாக சமூக அமைப்பிலும் ஒவ்வொரு தனி மனிதனிலும் இமாம் மஹ்தியின் வருகையை எதிர்பார்ப்பதன் விளைவாக, ஏற்படக் கூடிய உயர்வான சீர்திருத்தங்கள் பல உள்ளன.

1. எதிர்பார்ப்பு என்பது ஆத்மாவை பயிற்றுவிக்கக் கூடிய ஒரு முக்கிய பயிற்சியாகும். எதிர்பார்த்திருப்பது மிகவும் கடினமான விடயம் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

தமது எதிர்பார்ப்பின் அவசியம் பற்றி தனது சிந்தனா சக்தியைப் பயன்படுத்தி நியாயப்படுத்துவதோடு உள்ளத்தில் எழும் கிலேசங்களையும் தவிர்ந்து கொள்வது அவசியம். இதன் மூலம்;

அ. சிந்தனா சக்தியின் வளர்ச்சிச் செயற்பாடுகளைக் அதிகரிக்க அவசியமாகிறது.

ஆ. மனிதன் தன் சிந்தனையையும் மன வலிமையையும் ஒரிடத்தில் மையப்படுத்தி நோக்கும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்கிறான்.

---

101. பிஹார் பா. 52 ப. 122

2, நிகழக்கூடிய இன்னல்கள், எதிர்வரக் கூடிய கஷ்டங்கள் இலகுவாக்கப் படுகின்றன. அவை சீர்செய்யப்படலாம் என்பதை அறியும் போது அவை பெருகுவதை மட்டுப்படுத்த முடியும். மனிதன் சீர்திருத்த முறையை அறிந்து செயற்படுவதற்கும் அதனை அறியாமல் செயற்படுவதற்கும் இடையில் வித்தியாசம் உண்டு. இமாம் வெளியாகி வருவார். அதுவும் மிக விரைவில் சீர்செய்வார் என்ற நிலைப்பாட்டுடன் இருந்தால் அவற்றை சீர் செய்ய முடியும்.

3. எதிர்பார்த்திருப்பதன் அடிப்படை, நேசம் கொள்வதாகும். அதாவது மனிதன் இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாமின் தோழனாகவும் அவரது நேசராகவும் அவருக்கு உதவி ஒத்தாசை புரிபவராகவும் இருப்பதாகும். இமாமின் தோழமை யையும் அவரின் போராளியாக ஆகுவதற்குரிய தகுதியையும் பெறும் வரை தனது ஆத்மாவை சீர்செய்வதுடன் தனது நற்குணங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள வேண்டும். நிச்சயமாக அவற்றை அடைந்து கொள்வதற்கு, தற்போது நமக்கு மத்தியில் மிகவும் குறைவாகக் காணப்படும் நற்பண்பு மிகவும் தேவையான ஒன்றாகும்.

4. எதிர்பார்த்திருப்பது தன்னையும் ஏனையவைகளையும் சீர்செய்து கொள்ள உதவுவது போன்று, அதன் பின்பு இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் எதிரிகள் மீது வெற்றிகொள்ளக் கூடிய முன்னேற்பாடுகளையும் களத்தையும் அமைப்பதற்கும் காரணமாக இருக்கின்றது. குறிப்பாக இமாம் எதிரி மீது வெற்றி கொள்வது என்பது இலகுவான, வழமையான சாதனங்களைக் கொண்டேயாகும்.

உண்மையிலேயே இவை இமாம் மஹ்தியின் வருகையை எதிர்பார்த்திருப்பதன் மூலம் நிகழக்கூடிய நிகழ்வுகளில் சிலவாகும்.[102]

மர்ஹூம் முஸப்பர் கூறுகின்றார்:

"உலக சீர்திருத்தவாதி, மீட்பாளர், உண்மையின் பால் அழைப்பவர் இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் ஆவார். ஆனால், அதற்காக நாங்கள் உண்மையான தீனைப் பாதுகாப்பதற்கு ஏதும் செய்யாமல். குறிப்பாக ஜிஹாத் போன்ற மார்க்கத்தின் கட்டாயக் கடமைகள் மற்றும் இஸ்லாமிய சட்டங்களை நடைமுறைப்படுத்தல், நன்மையைக் கொண்டு ஏவி, தீமையைத் தடுத்தல் போன்றவற்றை கைவிட்டு விடுவது என்று அர்த்தமாகாது. யாரும் தமது பொறுப்பில் இருந்து நீங்கிக் கொள்ள முடியாது. ஏனெனில், எச்சந்தர்ப்பத்திலும் மனிதன் இறைசட்டங்களைப் பேணி நடக்க வும் அவற்றை நன்கு அறிந்து பாதுகாக்கவும் கடமைப்பட்டவ னாவான். தன்னால் இயன்றளவு நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பது அவனது கடமை.

எனவே, சீர்திருத்தர் ஒருவர் வருவார் என்பதற்காக இவ்வாறான கடமைகளை செய்யாது இருந்திட முடியாது. இமாமை எதிர்பார்த்திருப்பதென்பது முஸ்லிம்களின் எவ்வித மான கடமைகளையும் இல்லாமல் போக்கி விடாது. அதே போன்று அவர்களின் எந்த அமலையும் அதன் நேரத்தையும் காலத்தையும் விட்டும் பிற்படுத்தவும் மாட்டாது".[103]

இதனடிப்படையில் மிகவும் தெளிவான விடயம் நிச்சய மாக முஸ்லிம்களுக்கு இக்கால கட்டம் பெரும் பரீட்சைக்குரிய காலம் என்பதாகும். தங்கள் தீனைப் பாதுகாப்பதும்

102. கிதாபுல் மஹ்தி ப 201,202
103. பீ இன்திழாரில் இமாம் ப 54

இமாமுடன் சேர்ந்து இஸ்லாத்தின் வளர்ச்சியில் ஜெயம் பெறுவதற்காக பூமியைத் தயார் படுத்துவதும் கடமையாகிறது. நிச்சயமாக இந்த கடினமான பரீட்சையில் ஜெயம் பெறுபவர் கள் சொற்பமானவர்களே.

ஜாபிர் அல் ஜஅஃபீ கூறுகின்றார்: நான் இமாம் பாக்கிரிடம் "எப்போது இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் வருவார்கள்" என்று கேட்டேன்.

அதற்கு இமாம் அவர்கள், "தூரமாகட்டும், தூரமாகட் டும். எங்களது மஹ்தியின் வருகை பதர்கள் நீக்கம் செய்யப் பட்டு தூய்மை நிலை உருவாகும் வரை இடம்பெற மாட்டாது" என்றார்கள். [104]

எதிர்பார்ப்பு என்பது, இவ்வாறான குணாதிசயங் களைக் கொண்ட ஒன்று தான். அது கடமைகளை நிறைவேற் றுவதன் மூலம் அதிக முயற்சியின் பிற்பாடே அடைந்து கொள்ள முடியும். எனவே, நிச்சயமாக எதிர்பார்ப்பவர் நம்பிக்கை இழக்க மாட்டார். இறைவனிடமிருந்து வருகின்ற வெற்றியின் மூலம் அவரது அனைத்து எதிர்பார்ப்புகளும் ஆவல்களும் நிறைவு பெறும்.

இமாமின் மறைவின் மூலம் ஏற்படும் இன்னொரு நன்மை உண்டு. மனிதன் தனது அனைத்து ஆற்றலையும் அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்தித் தோல்வி கண்ட பின் தெய்வீக வழிகாட்டலின் பால் மீளுவதாகும். மனித சமுதாயம் தனது இறுதி இலக்காகிய இறை நெருக்கத்தைப் பெறுவதை உணர்தலாகும்.

104. அல் மஹ்தி ப 172

# மறைந்துள்ள இமாம் எதற்கு?

பாவங்கள் புரியாத உயிர் வாழும் ஓர் இமாம் இருப்பதன் தாத்பரியத்தைப் பற்றிய தெளிவு இல்லாத சிலர், மறைந்திருக்கக் கூடிய இமாம் இருப்பதன் மூலம் என்ன பலன் உண்டு என்று கேட்கின்றனர்.

இறைவன் இந்த உலகை படைத்ததன் நோக்கம், ஒரு பாவமும் புரியாத வழிகாட்டி இருப்பதன் மூலம் தான் பரிபூரணத்துவம் பெறும் என்பதனை இவர்கள் புரிந்து கொள்வதில்லை.

மனிதர்களை இறைவன் படைக்க முற்பட்ட போது மலாயிகாமார்களும் ஆட்சேபித்தனர்.

“அதில் விஷமம் செய்து இரத்தம் சிந்தக் கூடியவர் களையா நீ ஆக்கப் போகின்றாய்? நாங்களோ உன்னுடைய

புகழைக் கொண்டு உன்னைத் துதிக்கின்றோம். உன்னுடைய பரிசுத்த தன்மையைப் போற்றுகின்றோம் என்று கூறினர்". [105]

அதற்கு இறைவன், ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் விண்ணுலக, மண்ணுலக இரகசியங்கள் பற்றி அறிந்திருந்த உண்மைகளை அவர்களுக்கு வெளிப்படுத்தி அவர்களை மௌனம் சாதிக்கவும் திருப்தியுறவும் செய்தான்.

ஹஸ்ரத் ஆதம் அலைஹிஸ் ஸலாம் இறைகட்டளை யுடன் மலக்குகளுக்கு தம் ஞானத்தை வெளிப்படுத்திய போது, மலக்குகள் இறைவனின் அத்தாட்சியான அவர்களின் உண்மை நிலையையும் அவர்களுக்கு இறைவனிடத்தில் இருக்கின்ற கண்ணியத்தையும் பெருமதிப்பையும் அறிந்து கொண்டனர்.

எனவே, இத்தூய்மையானவர்களின் இருப்பின் அவசியம் புரிந்துகொள்ளப்பட வேண்டிய அம்சமாகும்.

இதன் அடிப்படையில் இறை அத்தாட்சிகளான இவர்கள் மனிதனின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் மாத்திரம் அருட்கொடையானவர்கள் அல்ல. மாறாக மனிதனின் இருப்புக்கும் அருட்கொடையாக இருந்தவர்கள்.

எனவே தான், நாம் சியாரதுல் ஜாமிஆவில் இவ்வாறு ஓதுகின்றோம்: "எங்கள் தலைவர்களே! உங்கள் புகழ் மட்டிட முடியாதது. புகழின் மூலம் உங்கள் யதார்த்தத்தை அடைந்து கொள்ளவோ வர்ணனை மூலம் உங்கள் மதிப்பை விபரிக் கவோ முடியாது. நீங்கள் வல்லமை பொருந்திய இறைவனின்

---

105. அல் பகரா : 30

அத்தாட்சியாகவும் நல்லோர்களின் வழிகாட்டியாகவும் ஒளியாக வும் உள்ளீர்கள்.

அவனது உத்தரவைக் கொண்டு உங்கள் பொருட்டி னால் தான் வானம் மழை பொழிகின்றது. இறைவன் தனது அருளின் வாயிலைத் திறக்கின்றான். உங்களைக் கொண்டே கஷ்டம் துன்பங்கள் நீக்கப்படுகின்றன."

இமாம் மூஸா காழிம் அலைஹிஸ் ஸலாம் தமது தந்தையான இமாம் ஜஃபர் ஸாதிக் அவர்களிடமிருந்து அறிவிக்கின்றார்கள்; "எங்களது வணக்கத்தின் மூலமே இறைவன் வணங்கப்படுகின்றான். எனவே, நாங்கள் இல்லை யென்றால் இறைவன் வணங்கப்பட்டிருக்கமாட்டான்."[106] இது போல் இன்னும் பலதரப்பட்ட அறிவிப்புகள் வந்துள்ளன.

"இப்பூமி அதில் இமாம் ஒருவர் இன்றி வெற்றிடமாக இருக்கமாட்டாது."[107]

இமாம் பாக்கிர் அலைஹிஸ் ஸலாம் கூறுகையில், "இறைவன் மீது ஆணையாக இறைவன் ஹஸ்ரத் ஆதமின் –அலைஹிஸ்ஸலாம்- உயிரைக் கைப்பற்றியதிலிருந்து இறைவன் பால் நேர்வழிகாட்டக் கூடிய ஓர் இமாமின்றி இப்பூமியை வெற்றிடமாக வைக்கவில்லை."[108]

அந்த இமாம் தான் அவனது அடியார்கள் மீது அவனது அத்தாட்சி. எனவே, இறை அடியார்களை ஆத்மீக ரீதியாக நெறிப்படுத்தக்கூடிய ஓர் இறை அத்தாட்சியான இமாம் இன்றி இப்பூவுலகம் வெற்றிடமாக இருக்கமாட்டாது.

---

106. உஸூலுல் காபீ பா. 1, ப. 193
107 மே. கு பா. 1, ப. 178
108 மே. கு பா. 1, ப. 178

"நமது கட்டளையின் பிரகாரம் வழிகாட்டும் தலைவர்களாக அவர்களை ஆக்கினோம். அவர்களுக்கு நல்லதைச் செய்யுமாறு வஹி அறிவித்தோம்."[109]

"அவர்கள் பொறுமையில் இருந்தமையால், அவர்களில் இருந்து நமது கட்டளைப் பிரகாரம் வழிகாட்டும் தலைவர்களை உருவாக்கினோம்."[110]

"இந்த வசனங்களில் இருந்து தெளியும் ஓர் உண்மை எதுவெனில், இமாம் வெறும் வழிகாட்டி மட்டுமன்றி ஆன்மீக பரிபக்குவத்தை ஏற்படுத்தி பரிபூரண நிலைக்கு மனிதனை அழைத்துச் செல்கின்ற பொறுப்பையும் அவர் சுமக்கிறார்." [111]

ஷீயாக்கள் மீது குறைகாண்கின்ற சிலர் கூறுகின்றனர்: 'உங்கள் கணிப்பின் படி மனிதர்களை நேர்வழியின் பால் இட்டுச் செல்லவும் உண்மையான ஷரீஆவையும் மார்க்க சட்டதிட்டங்களையும் தெளிவுபடுத்துவதற்கும் நபிகளுக்குப் பிறகு இமாம் ஒருவரின் இருப்பு அத்தியாவசியம் என்பதாகும். அப்படியெனில் இமாம் மறைந்திருப்பது பற்றி நம்பிக்கை இக் கருத்துடன் முரண்படுகின்றதே.'

ஏனெனில், இமாம் மறைந்திருக்கும் போது மனிதர் அவர் மூலமாக எந்தவிதமான பிரயோசனத்தையும் அடைந்து கொள்ளமாட்டார்கள். ஆகவே, அவர் மறைந்திருந்து என்ன பலன்? அல்லது மறைந்துள்ள இமாம் எதற்கு?

இவர்கள் இமாம் என்பதன் உண்மையான பொருளைப் புரிந்து கொள்ளாதவர்கள். நாம் இமாமத் என்ற

109 அல் குர்ஆன்
110 மே. கு.
111 அஷ்ஷீஆ பில் இஸ்லாம் ப 260

பகுதியில் தெளிவுபடுத்தி உள்ளோம். இமாமின் கடமை வெளிப்படையில் மனிதர்களை நேர்வழிப்படுத்துவது மாத்திர மல்ல, சட்டதிட்டங்களை முன்வைத்து அதன் பிரிவுகளை தெளிவுபடுத்தும் மனிதர்களின் உள்ரங்க விடயங்களையும் கவனிக்கும் பொறுப்பையும் கொண்டுள்ளனர். எனவே தான் இமாம், அவர்களின் ஆத்மீக வாழ்வையும் சிந்தனையையும் உணர்வுகளையும் ஒழுங்குபடுத்தி அவர்களது அமல்களை இறைவன் முன்னிலையில் கொண்டு செல்ல உதவுகிறார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் இமாம் வெளிப்படையில் சமுகமளித்திருப்பதற்கும் அவர்களது உடல் ரீதியான மறைவுக் கும் இடையில் வேறுபாடு கிடையாது. இமாம், அவர்களது கண்பார்வைக்கு மறைவாக இருந்தாலும் மனிதர்களின் ஆத்மாவின் உள்ரங்கத்தோடு தொடர்பு வைத்துள்ளார். அத் தொடர்பின் மூலமாக மனித வாழ்வில் நிறையவே புரட்சிகள் நடக்கின்றன.[112]

மர்ஹூம் நசீருத்தீன் தூஸீ கூறுகிறார். ‘‘அன்னாரது இருப்பு எவ்வாறு கருணையுள்ளதோ அவ்வாறு அவரது ஆதிக்கமும் கருணையுள்ள ஒன்றுதான். அவர் இல்லாமல் இருப்பது எங்களில் குறைபாடாகும்.”

மனிதன் சூரியனை விட்டு தூரமாக இருந்தாலும் அது, தனது பிரயோசனத்தை சந்தேகம் இன்றி வழங்கிக் கொண்டே இருக்கின்றது. எனவே, சூரியனை குறைகாண முடியாது. மாறாக, குறைகள் அனைத்தும் மனிதன் புறமே. அவன் அதனை விட்டுத் தூரமாகியதால் தனக்குத் தானே தீங்கிழைத்து அதன் ஒளியைப் பெறாவண்ணம் தன்னை ஆக்கிக் கொண்டான்.

---

112.. மே.கு, ப. 312,313

அத்தோடு, அவன் அதில் இருந்து எவ்வித பிரயோசனமும் பெறவில்லை என்றும் கற்பனை பண்ணவும் முடியாது. ஏனெனில் அவன் மறைவான இடத்தில், அல்லது அரங்கத்தில் வாழ்ந்தாலும் சூரியன் இல்லையென்றால் தொடர்ச்சியாக அவனால் வாழ முடியாது. இதே சூரியன் வசதிகளையும் உணவையும் வேலை செய்யக்கூடிய உற்சாகத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

இஸ்லாமிய அறிவிப்புகளில் இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம், மேகத்துக்குப் பின்னால் மறைந்திருக்கக் கூடிய சூரியனுக்கு ஒப்பிடப்பட்டுள்ளார்கள்.

சுலைமான் அல்அஃமசி இமாம் ஸாதிக்கிடம் கேட்டார் கள். "மறைந்திருக்கக் கூடிய அந்த இமாமைக் கொண்டு எவ்வாறு மக்கள் பிரயோசனப்படப் போகின்றார்கள்?"

அதற்கு இமாமவர்கள் பின்வருமாறு பதிலளித்தார்கள்: "சூரியனை மேகம் மறைத்துக் கொள்ளும் போது எவ்வாறு பிரயோசனம் அடைவார்களோ அவ்வாறே."[113]

ஒருமுறை ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் அல்அன்சாரி இறைத்தூதரை நோக்கி, "இமாம் மறைந்திருக்கும் காலகட்டத் தில் மக்கள் பிரயோசனம் அடைவார்களா?" என்று கேட்க, அதற்கு இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஆலிஹி பின்வருமாறு பதிலளித்தார்கள்.

"என்னை யார் நபியாக அனுப்பினானோ அவன் மீது ஆணையாக, சூரியனை மேகம் மறைத்துக் கொள்ளும் போது எவ்வாறு பிரயோசனம் அடைகின்றனரோ அவ்வாறு நிச்சயமாக அவரது ஒளியைக் கொண்டு ஒளி பெறுவார்கள்.

113. முன்தஹபுல் அதர் - ப. 271

அதேபோன்று அவரது விலாயத்தைக் கொண்டு பிரயோசனமும் அடைவார்கள்."[114]

இன்னும் கூறுவதானால், இமாம் ஒவ்வொரு வருடமும் ஹஜ்ஜில் கலந்து கொள்கின்றார்கள். அதேபோன்று விழாக்கள், ஒன்று கூடல்கள் போன்றவற்றுக்கும் வந்து செல்கின்றார்கள். இன்னும் சில முஃமின்களின் பிரச்சினைக்கு நேரடியாகவும் அல்லது வேறு விதமாகவும் தீர்வுகள் அளித்து நிவர்த்தி செய்கின்றார்கள். ஆனாலும், மனிதர்கள் அவரை அறியமாட்டார்கள், காணவும் மாட்டார்கள். ஆனால் இமாம் அவர்களை நன்கு அறிந்து அவர்கள் என்ன செய்கின்றனர் என்பதனையும் காண்பார்கள்."

மேலும் தகுதி உடையோர், நல்லோர் அனைவரும் அவரது அருளை அடைந்து கொள்வார்கள். அவர்கள் சமுகமளிக்கவில்லையென்றால் இமாம் அவர்களைத் தேடுவார்கள். சிலவேளைகளில் மனிதர்களில் அதிகமானோர் இமாமின் சிறிய மறைவிலும் பெரிய மறைவிலும் இமாமைச் சந்திக்கும் பாக்கியத்தை பெற்றிருந்ததுடன் அவரிடம் இருந்து பல கராமத்துகள், அதிசயங்களையும் கண்டும் உள்ளனர். அத்தோடு, முஃமின்களின் பலதரப்பட்ட பிரச்சினைகளும் இமாமினால் தீர்வும் காணப்பட்டுள்ளது.

மர்ஹூம் ஆயத்துல்லாஹ் செய்யித் சத்ருத்தீன் சத்ர் கூறுகின்றார்: பெரிய மறைவின் போது இமாமை அடைந்து கொள்ளக்கூடிய சாத்தியம் கிடையாது என்று அறிவிப்பவர்களுக்கு சில கூட்டத்தினர் அவரை சந்தித்து உள்ளனர் என்பதனை சொல்வதற்கு முடியும்.

114. கமாலுத்தீன் - பா. 1, ப. 265

இன்னும் இமாம் நேர்வழிகாட்டுபவர்களோடும் உபதேசம் செய்பவர்களோடும் அழைப்பாளர்களுடனும் நெருங்கி இருந்து அவர்கள் தங்களது நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடிய மிகவும் இலகுவான வழியையும், இஸ்லாமிய உயர்வுக்கான உண்மைப் பாதையையும் எத்தி வைக்கின்றார். அதனைக் கொண்டு அவர்கள் செயற்பட்டாலும் செயற்படாவிட்டாலும் சரி.

இன்னும் தீங்கிழைக்கப்பட்டவர்கள், நோயாளிகள், சங்கடத்துக்குள்ளானவர்கள், தேவையுடையவர்கள் போன்றோர் களை சந்திக்கின்றார்கள். அவர்களது வாழ்வு வளம் பெறும் வழியையும் அவர்களது ஆறுதலுக்குரிய உபகரணங்களையும் நோய் நிவாரணம் பெறும் வழிகளையும் தேவைகளை நிவர்த்தி செய்யும் வழிகளையும் அவர்களுக்கு அறிவிக்கின்றார்; காட்டிக் கொடுக்கின்றார்.

மேற்கூறப்பட்ட அனைத்தையும் அவர்களை அறியாத வர்களுக்கும் அவருக்கு சார்பாக இருப்பவர்களுக்கும் செய்கின்றார்கள். ஒருபோதும் அவர்கள் மற்றவருக்கு உதவுவ தில் குறைவைப்பதில்லை. நிலைமை இவ்வாறு இருக்க மறைவான இமாமைக் கொண்டு பிரயோசனம் அடைவது எவ்வாறு எனக் கேட்பது அபத்தமானதாகும்.

மார்க்கத்தின் எத்தனையோ அடிப்படை விடயங்கள் சம்பந்தமான கேள்விகளுக்கு இமாம் மஹ்தி பதில் தந்துள் ளார்கள். இன்னும் தீன், துன்யா சம்பந்தப்பட்ட எத்தனையோ பிரச்சினைகளுக்கு தீர்வு தந்துள்ளார்கள். நோயாளிகளுக்கு நிவாரணமும் சங்கடத்துக்குள்ளானவர்களுக்கு பாதுகாப்பும் நம்பிக்கை இழந்தோருக்கு நேர்வழியும் காட்டியுள்ளார்கள்.[115]

115. அல் மஹ்தி - ப. 178,179

# இமாமின் அற்புதங்கள்

இமாமின் சிறிய மறைவின் போது அவர்கள் மூலம் வெளியான அற்புதங்கள், அதிசயங்கள் எண்ணற்றவை. அவை ஆங்காங்கு சிதறி வாழ்ந்த முஃமின்களின் ஈமானை உறுதிப்படுதிக் கொள்ள உதவின. தூர பிரதேசங்களில் இருந்து சாமர்ரா, பக்தாத் போன்ற இடங்களுக்கு வந்த மக்கள் இமாமின் குறிப்பிட்ட பிரதிநிதிகள் மூலம் இமாமோடு தொடர்புகளை ஏற்படுத்தி இமாம் மூலம் வெளியான அற்புதங்கள் கராமத்துகள் போன்றவைகளை கண்கூடாக அவதானித்தனர்.

இமாம் மஹ்தியின் அற்புதங்கள் பற்றிக் கூறுவது என்றால், தனிமையில் ஒரு நூலே எழுத வேண்டும்.

மர்ஹூம் ஷெய்க் தூஸீ கூறுகையில்: “இமாமின் சிறிய மறைவின் போது அவரது இமாமத்தின் மீது சாட்சி பகரக்கூடிய அற்புதங்கள் எண்ணிலடங்காதவை” என்று குறிப்பிட்டுள்ளார்.[116]

116. அல் ∴கய்பா - ப. 170

நாம் உதாரணத்துக்காக சிலவற்றை மாத்திரம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

I. ஈசா பின் நஸ்ர் கூறுகின்றார்: அலீ இப்னு சியாத் அஸ்ஸம்ரீ இமாமிடத்தில் தனது மரணத்தின் போது அணிவதற்கு கபன் ஒன்றைத் தருமாறு வேண்டியிருந்தார். அதற்கு பதிலாக, "உமது எண்பதாவது வயதில் தான் அது உனக்குத் தேவைப்படும்" என இமாம் அறிவித்தார்.

அவரது மரணத்துக்கு முன்னர் இமாம் கபனுக்குரிய துணியை அனுப்பி வைத்தார், அவர் எண்பது வயதில் மரணித்தார்.[117]

2. அலீ இப்னு முஹம்மத் அறிவிக்கிறார். இமாம் புறமிருந்து இமாம்களின் அடக்கஸ்தலங்களை தரிசிக்க செல்ல வேண்டாம் என குறைஷிகளுக்கு தடையுத்தரவு பிறப்பிக் கப்பட்டது.

ஏனெனில் அங்கு செல்வோரைக் கைது செய்து சிறையிடுமாறு கலீபா ஏவியுள்ளமை பின்னர் தெரிய வந்தது..

3. அபூ ஜஃஉபர் முஹம்மத் இப்னு உஸ்மான் அம்ரீயின் பேரர் கூறுகிறார்: கும்மிலிருந்து ஒருவர் இமாமுக்கு வழங்கப்பட்ட அன்பளிப்புகளைச் சுமந்து கொண்டு பக்தாத் வந்தார். இமாமின் பிரதிநிதியாகிய என் தந்தையிடம் அவற்றைச் சமர்ப்பித்தார். அவர் திரும்பிச் செல்ல முற்பட்ட போது, "உம்மிடம் கொடுக்கப்பட்டதில் முழுவதையும் தரவில்லையே?" என்றார் தந்தை.

---

117. மே. கு - ப 172, பிஹார் - பா. 51, ப. 312

அவரோ அனைத்தையும் தந்ததாகச் சொன்னாலும் மீண்டும் யோசித்து தேடிப்பாரக்குமாறு அம்மனிதரிடம் கூறப்பட்டது. அவரும் கடுமையாக யோசித்தார். எதுவும் குறைந்ததாகப் படவில்லை.

மீண்டும் வந்து அபூ ஜஃபரிடம் விடயத்தைச் சொன்னார். அதற்கு அபூ ஜஃபர் கூறினார். "இமாம் கூறுகிறார் குறிப்பிட்ட மனிதர் தந்தை ஆடைகள் இரண்டும் வரவில்லையாம்."

வந்தவர் ஆச்சரியப்பட்டுத் திரும்பிச் சென்றார். அந்த ஆடைகளை எங்கும் காணவில்லை. பல நாள் தேடிய பிறகு மீண்டும் வந்து, "துரதிஷ்டமாக நான் அவற்றைத் தொலைத்து விட்டேன். மேலும் என்ன செய்யலாம்?" என வினவினார்.

"இமாம் சொல்கிறார். நீர் உனது பருத்தியை விற்ற போது அந்தப் பொதிக்குள் அவை சிக்கின. அது பெயர் குறிப்பிடும் நபரிடம் குறிப்பிட்ட அறையில் வைக்கப்பட்டுள்ளதாம்." என்றார் அபூ ஜஃபர்.

இவர் திரும்பிச் சென்றார். தேடிக் கண்டு பிடித்தார். அபூ ஜஃபரிடம் கொண்டு சென்று ஒப்படைத்தார். ஆயினும் அதிர்ச்சியில் இருந்து விடுபட அவருக்கு நெடுநாள் ஆயிற்று.[118]

4. முஹம்மத் பின் இப்றாஹீம் இப்னு மஹ்ஸியார் அல் அஹ்வாசீ கூறுகின்றார்: இமாம் அஸ்கரீ அலைஹிஸ் ஸலாம் மரணித்த போது எனது தந்தையிடம் அதிகளவு கும்ஸ் பணம் ஒன்றுசேர்க்கப் பட்டிருந்தது. எனவே, அவர் அதனை சுமந்து

118. அல் ∴கய்பா - ப. 172

கப்பலில் ஏறிக் கொண்டார். நானும் அவரை பின்தொடர்ந்து அவருடன் வெளியாகினேன். அப்போது அவருக்கு அதிக காய்ச்சலும் நோவும் ஏற்பட்டது. அவர் சொன்னார், "எனக்கு மரணம் நெருங்கி விட்டது. இதோ இங்கிருக்கின்ற பணம் சம்பந்தமாக இறைவனை அஞ்சிக் கொள்" என்று கூறிவிட்டு எனக்கு வசிய்யத்தும் சொல்லி விட்டு மரணித்து விட்டார்.

எனது தந்தை நலவைத் தவிர வேறு எதனையும் கூறவில்லை. இந்தப் பொருட்களை ஈராக்குக்கு எடுத்துச் சென்று ஒருவீட்டை புராத் நதி ஓரத்தில் வாடகைக்கு எடுத்துக் கொண்டு இமாம் அஸ்கரீயின் காலத்தைப் போன்று விடயம் தெளிவாகும் வரை எவருக்கும் அறிவிக்காது இருப்போம். தெளிவாகின்ற போது அதனை ஒப்படைப்போம், அல்லது அவர் பெயரால் தர்மம் செய்வோம் என்று எனக்குள் எண்ணிக் கொண்டேன்.

புராத் நதி ஓரத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு பல நாட்கள் கழிந்த நிலையில் திடீரென ஒரு தூதுவர் என்னிடம் வந்தார். அவரிடம் ஒரு கடிதமும் காணப்பட்டது. அதிலே, "உன்னிடம் நமக்குச் சொந்தமான பொருட்கள் உள்ளன" என எழுதப் பட்டிருந்தது. நான் மட்டுமே அறிந்தவற்றை இமாம் அறிந்துருந்தார்.

எனவே, அனைத்து பொருட்களையும் ஒப்படைத்து விட்டு பல நாட்களாக எதுவும் புரியாதவனாக அதிர்ச்சியில் இருந்தேன். அப்போது இமாம் புறமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது: "நாம் உம்மை உமது தந்தையின் இடத்துக்கு நியமித்துள்ளோம். எனவே, இறைவனைப் புகழ்வீராக."

5, ஹஸன் இப்னுல் பழ்ல் யமானீ கூறுகிறார்: சாமர்ராவுக்குப் போகப் புறப்பட்டேன், இமாமிடம் இருந்து ஒரு பை அனுப்பப்

பட்டிருந்தது. அதில் சில நாணயங்களும் இரண்டு ஆடைகளும் இருந்தன. நான் அவற்றை ஏற்க மறுத்து திருப்பி அனுப்பி விட்டேன். என் அந்தஸ்து பற்றி நான் பெருமையாக நினைத்ததே அதற்கு காரணம்.

பின்னர், நான் செய்த காரியத்தையிட்டு மனம் வருந்தினேன். மன்னிப்புக் கோரி கடிதம் வரைந்தேன். அன்பளிப்பு மீண்டும் கிடைத்தால் தந்தையிடம் எடுத்துச் செல்வதாக எண்ணினேன்,

இமாமிடம் இருந்து பதில் வந்தது. "நமது நல்லெண்ணத்தைப் புறக்கணித்தீர். இறைவனிடம் மன்னிப்புக் கோரும். அவன் மன்னிக்கிறவன். நீர் செலவு செய்வது உன்னைப் பொறுத்தது. ஆனால் அந்த இரு ஆடைகளும் உனது இஹ்ராமுக்கு உரியது.” [119]

முஹம்மத் இப்னு சூரத் அல்கும்மீ அவர்கள் அறிவிக்கின்றார். அவர் கும் தேசத்தின் பெரியோர்களில் ஒருவர். அலீ இப்னு அல்ஹுஸைன் இப்னு மூஸா இப்னு பாபவைஹி எனும் அவரது சாச்சாவின் மகளை திருமணம் செய்திருந்தார். அதன் மூலமாக அவருக்கு எதுவித குழந்தையும் கிடைக்கவில்லை. அவர் ஷெய்க் அபுல்காசிம் அல்ஹுஸைன் இப்னு ரூஹிடம் கடிதம் எழுதி இமாமவர்களை அவருக்கு ஞானம் நிறைந்த குழந்தை கிடைப்பதற்கு பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொண்டார்கள்.

இமாமிடமிருந்து பதில் வந்தது, “நீர் அவர் மூலமாக குழந்தை பாக்கியத்தை அடைந்து கொள்ளமாட்டீர். ஆனால், நீர் மிக விரைவில் பலமுள்ள ஓர் அடிமைப் பெண்ணை

---

119 மே. கு

பொறுப்பேற்பாய். அவர் மூலமாக உமக்கு மார்க்க ஞானமுள்ள இரு பிள்ளைகள் கிடைக்கும்."

முஹம்மத் இப்னு சூரத் கூறுகின்றார்: எனக்கு அபூஅப்தில்லாஹ் இப்னு சூரத் சொன்னார், அபுல்ஹஸன் பாபவைஹிக்கு மூன்று குழந்தைகள். முஹம்மத், ஹுஸைன் இருவரும் அறிஞர்கள். மனனமிடுவதில் மிகவும் திறமைசாலிகள். அவர்கள் ஏனைய தேசவாசிகளை விட அதிகம் மனனம் செய்யக் கூடியவர்கள். அவர்களுக்கு ஹஸன் என்று ஒரு சகோதரன் உண்டு. அவர் வணக்கத் திலும் இறையச்சத்திலும் மூழ்கியிருப்பார். மனிதர்களோடு இரண்டறக் கலக்கமாட்டார்.

இப்னு சூரத் சொன்னார்: அபூஜஃபர் எனப்படும் முஹம்மத் அபூஅப்துல்லாஹ், ஹுஸைன் இருவரும் ஏதாவது அறிவிக்கும் சமயங்களில் அவர்களின் மனனத்தைக் கண்டு மனிதர்கள் ஆச்சரியமடைவார்கள். அப்போது அவர்கள் இருவருக்கும் அவர்கள் சொல்வார்கள். "இத்தனிமையான சிறப்பு அவர்கள் இருவருக்கும் இமாமின் பிரார்த்தனையினால் கிடைத்தவை." கும் தேசவாசிகளை பொருத்தவரை இது ஒரு முக்கிய விடயமாகும்.[120]

120. அல் ∴கய்பா - ப. 188, பிஹார், பா. 51, ப. 324,325

# இமாமின் தரிசனம்

ஷெய்க் தபர்சீ தனது அஃலாமுல் வரா என்ற நூலில் கூறுகின்றார்: இமாமைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்று அவரது அற்புதங்களை அடைந்து கொண்டவர்களில் 13 பேர் நைசாபூர், ஆசர்பைஜான், ரய், ஹமதான், கும், அஹ்வாஸ், கூபா, பக்தாத் ஆகிய பிரதேசங்களில் இருந்த இமாமின் வகீல்கள் ஆவார்கள்.

இன்னும் சுமார் 50 பேர் கஸ்வீன், ரய், கும், சமீரத், இஸ்பஹான், தய்னூர், ஹமதான், பக்தாத் போன்ற பிரதேச வாசிகளாவார்கள்.[121]

மர்ஹூம் ஹாஜ் நூரி (அவர் 14ம் நூற்றாண்டின் பெரிய உலமாக்களில் ஒருவர், முஸ்தத்ரகுல் வஸாயிலின் ஆசிரியர்) தனது "அன்நஜ்முத்தாகிப்" என்ற நூலில், மர்ஹூம் தபர்சி கூறியவர்களுடன் 120பெயர்களையும் அறிவிக்கின்றார்.

121. அ.்.லாமுல் வரா - ப. 425

இவர்கள் அனைவரும் ஒன்றில் இமாமைக் கண்டவர்கள், அல்லது அவரது அற்புதங்களை கண்டவர்கள் அல்லது இரு பாக்கியங்களையும் அடைந்து கொண்டவர்கள்.

இன்னும் அவர் கூறுகையில், ஒருவேளை இவர்களில் அதிகமானோர் அந்த இரு பாக்கியங்களையும் பெற்றிருக்க முடியும். பலதரப்பட்ட ஆதாரங்களைக் கொண்டு இமாமின் தோழர்களின் புத்தகங்களில் அவர்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி குறிப்பிடப்படுகின்றன. எனவே, இறையச்சம், உறுதிப்பாடு, சிறப்பு போன்ற ஸ்தானங்களைப் பெற்றிருக்கின்ற அந்தத் தோழர்களின் அறிவிப்புகள் பற்றி அறிந்து வைத்துள்ள ஒவ்வொரு நீதமானவனும் இமாமிடமிருந்து அற்புதங்கள் வெளியாகி இருக்கும் என்பதில் சந்தேகம் கொள்ளமாட்டான்.

ஆம், இந்த ஒவ்வொரு சம்பவங்களிலும் அவை பொய்யாக இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படலாம். ஆனால் பொதுவாக அவை அனைத்தும் பொய் என்று சந்தேகிக்க முடியாது. ஏனெனில் இது போன்ற அற்புதங்கள் அவரது தூய தந்தைமார்களின் புறமிருந்தும் வெளியாகியுள்ளன.[122]

இன்னும் சில பெரும் உலமாக்கள், இமாமை அவரது பெரிய மறைவின் போது சந்திக்கும் பாக்கியம் பெற்றவர்களது சம்பவங்களை அல்லது அவர் கராமத்துகளை தூக்கத்திலும், விழிப்பிலும் கண்டவர்களது சம்பவங்களை அவர்களது பெயர்களோடு தங்களது ஏடுகளில் பதிவு செய்துள்ளன.

உதாரணமாக மர்ஹூம் ஹாஜ் நூரி, நஜ்முஸ் ஸாகிப் என்ற நூலின் 7ஆவது பாகத்தில் நூறு சம்பவங்களைக்

122. அந்நஜ்முஸ் ஸாகிப் - ப. 211

குறிப்பிட்டுள்ளார். அவர் அதன் ஆரம்பத்தில் கூறுகின்றார்: "நாம் இந்தப் பாடத்தில் இமாமின் அற்புதங்களில் இருந்து கூற உள்ளவை தெளிவானவையாக உள்ளன. அவற்றில் அதிகமானவை அப்பழுக்கற்ற மிகவும் சரியான, மிகவும் உயர்வான ஆதாரங்களைக் கொண்டவை."

நாம் இங்கு எல்லோரிடமும் இருந்து கேட்டவற்றை குறிப்பிடவில்லை. நிச்சயமாக இறையுதவியுடன், அறிவிப்பு களின் நம்பகத்தன்மையையும் உண்மையையும் உறுதிப்படுத்துவ திலே எங்கள் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். இவ்வி டயத்தில் அவர்கள் அனைவரும் பங்காளிகள். அவர்களில் அதிகமானோர் உயர்வான சங்கைமிக்க தோழர்களா வார்கள்.[123]

ஹாஜி நூரிக்கு பின்பும் இமாமை சந்திக்கும் பாக்கியத்தை இன்னும் சில பேர் பெற்றிருந்தனர். அதனை லுத்புல்லாஹ் அஸ்ஸாபி என்பவர் தனது 'அஸாலதுல் மஹ்தவிய்யா' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர்களின் சம்பவங்களிலிருந்து சில உதாரணங்களை நாம் இங்கு குறிப்பிடுகின்றோம்.

லுத்புல்லாஹ் ஸாபி பின்வருமாறு கூறுகின்றார்: நாம் சுருக்கமாக கூறவேண்டும் என கொண்டிருந்த அடிப்படையின் பிரகாரம் எங்களது கால கட்டத்தில் நிகழ்ந்த சில அற்புதங்களை மாத்திரம் கூறுவதோடு போதுமாக்கிக் கொள்கின்றோம்.[124]

நாம் இந்தப் புத்தகத்தில் நஜ்முஸ் ஸாகிப் என்ற புத்தகத்தில் கூறப்பட்ட சம்பவங்களை மாத்திரம் கூறுவதுடன்

---

123. மே. கு - ப. 211,209
124. அஸாலாதுல் மஹ்தவிய்யா - ப. 70

மட்டுப்படுத்திக் கொள்கின்றோம். இருந்தும் கண்ணியத்துக்கு ரிய சகோதரர்கள் தங்கள் தகவல்களை அதிகரித்துக் கொள்ளவும் விரிவாக்கிக் கொள்ளவும் நாங்கள் சற்று முன் குறிப்பிட்ட புத்தகங்களையும் புரட்டிப் பார்க்கலாம்.

இஸ்மாயீல் இப்னு அல்ஹஸன் அல்ஹிர்கலியின் சம்பவம்: அலீ இப்னு ஈசா அல்அர்பிலி என்கின்ற அறிஞர் தனது "கஷ்புல் ஹும்மா" என்ற நூலில், தனது காலத்துக்கு சற்று நெருங்கிய காலத்தில் நடைபெற்று தனது நம்பிக்கைக் குரிய சகோதர குழுவினரால் அறிவிக்கப்பட்ட ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்கள். ஹில்லா என்ற நகரத்தில் ஹர்கில் என்ற கிராமப்புறத்தில் இஸ்மாயீல் இப்னு ஹர்யா என்கின்ற ஒருவர் இருந்தார். அவர் எனது காலத்தில் மரணித்தார். ஆனால் நான் அவரை சந்திக்கவில்லை. அவர் மகன் சம்சுத்தீன் என்பவரே எனக்கு அச்சம்பவத்தைக் குறிப்பிட்டார்.

அவர் கூறுகையில் எனது தந்தை வாலிபராக இருந்த போது அவரது இடது பக்கத்தொடையில் ஓர் கைப்பிடி அளவு கட்டி ஒன்று காணப்பட்டது. அது ஒவ்வொரு வசந்த காலத்தி லும் வெடித்துப் பிளந்து அதிலிருந்து இரத்தம், சீழ் போன்றவை வெளிவந்து கொண்டிருக்கும் அதன் வேதனை அவரது அதிக வேலைகளிலிருந்து இடைநிறுத்தியது.

ஒருமுறை ஹில்லுக்கு வந்து சயீத் ரழியுத்தீன் அலீ இப்னு தாவூஸ் என்பவரது மஜ்லிசுக்கு வந்து தமக்கு இருக்கின்ற வருத்தத்தைக் கூறி அதற்கு பரிகாரம் செய்ய வேண்டுமென அவரிடம் கோரினார்.

உடனே, அலீ இப்னு தாவூஸ் ஹில்லா பிரதேச வைத்தியர்களை அழைத்து அதனைக் காட்டினார். அவ்வைத்தி யர்கள் "இந்தக் கட்டி முக்கியமான ஒரு நரம்பின் மேலுள்ளது.

அதற்கு வைத்தியம் செய்வது ஆபத்தான ஒன்றாகும். அதனை வெட்டியெடுக்கும் போது அந்நரம்பு வெட்டுப்பட்டு விட்டால் அவர் மரணித்து விடுவார் என்கின்ற அச்சம் உள்ளது” என்றனர்.

சயீத் ரழியுத்தீன் அவருக்கு, "நான் பக்தாத் செல்கின்றேன். அங்குள்ள வைத்தியர்கள் இவர்களை விட திறமை வாய்ந்தவர்கள். எனவே என்னுடன் வாருங்கள்" என்று கூறினார்.

அவரும், அவரோடு சென்றார். அவர் வைத்தியர்களைச் சந்தித்து விடயத்தைக் குறிப்பிட்டார். அவர்களும் முன்னைய வைத்தியர்கள் குறிப்பிட்டது போன்றே கூறினார்கள். அப்போது, தந்தையின் உள்ளம் மிகவும் வேதனை அடைந்தது.

பின்பு, சயீத் அவரை நோக்கி "ஷரீஆ இந்த உடையுடன் உமக்கு தொழுவதற்கு உத்தரவு தந்துள்ளது. எனவே உன்னைப் பாதுகாத்துக் கொள்வதில் முயற்சி செய். தன்னை அழிவின் விளிம்புக்கு இட்டுச் செல்லாதே. ஏனெனில், இறைவனும் அவனது தூதரும் அதனை தடுத்துள்ளார்கள்" எனக் கூறினார்.

எனது தந்தை சயீதை பார்த்து, "விடயம் இவ்வாறு தான் என்றால், நான் பக்தாத் சென்றதும் சாமர்ராவில் உள்ள புனித தளத்தை தரிசிக்க வேண்டும்." பின்பு தான் எனது குடும்பத்தாரிடம் செல்ல வேண்டும் என்று கூறினார். அதுவே அவருக்கு நல்லதாக இருந்தது. எனவே, அவரது உடைகளையும் பொருட்களையும் சயீதிடம் விட்டுவிட்டு அப்புனிதஸ்தலத்தை நோக்கிப் புறப்பட்டார்.

தந்தை சொன்னார்: "நான் அப்புனிதஸ்தலத்தில் நுழைந்து இமாம்களை தரிசித்துவிட்டு சர்தாப் எனப்படும் இடத்தில் அமர்ந்தேன். அங்கிருந்து இறைவனிடம், இமாம் களைக் கொண்டு உதவி தேடினேன். இன்னும் சில இரவுகளை சர்தாபில் கழித்த நான், வியாழக்கிழமை வரை அப்புனிதஸ்தலத்தில் தரித்துவிட்டு தைக்ரீஸ் நதிக்கரைக்கு வந்தேன். அதில் குளித்து சுத்தமான உடையும் அணிந்து கொண்டேன். என்னுடன் இருந்த பாத்திரத்தை நீரினால் நிரப்பிக் கொண்டேன். அப்புனித இடத்தை நோக்கி மீண்டும் சென்றேன். அப்போது அக்கிராமத்தின் நுழைவாயிலிலிருந்து நான்கு பர்சஹ் தூரத்துக்கப்பால் கண்ணியமிக்க சிலர் அப்புனிதஸ்தலத்தின் எல்லையில் தங்களது ஆட்டு மந்தை களை மேய்த்த வண்ணம் இருந்தனர்.

அதன் பிறகு இரு அடிமைகளைக் கண்டேன். அவர்களில் ஒருவர் நீண்ட உயரமானவர். அவர்கள் ஒவ்வொ ருவரும் வாட்களை தொங்கவிட்டவாறு இருந்தனர். அவர்களில் ஒருவரது கையில் ஈட்டி காணப்பட்டது. இன்னும் ஒருவர் தனது வாளைத் தொங்கவிட்ட நிலையில் காணப் பட்டார். அவரது வாளின் மேல் நிறத்துணி காணப்பட்டது.

இன்னும் ஒரு கண்ணிய பெரியாரையும் சந்தித்தேன். அவரோ தனது தலைப்பாகையின் தொங்கலை கழுத்தைச் சுற்றி தொங்கவிட்டிருந்தார். அப்போது ஈட்டியைக் கையில் வைத்திருந்தவர்கள் பாதையின் வலது புறத்தில் தரித்து நின்று ஈட்டியின் அடிப்பகுதியை பூமியில் வைத்தார்கள். பெரியவர், தலைப்பாகையை தொங்கவிட்ட நிலையில் இருந்தவர், பாதையில் எனது தந்தைக்கு முன் நின்று அவருக்கு ஸலாம் கூறினார். அவரும் பதில் கூறினார்.

அவர் எனது தந்தையை நோக்கி “நீர் நாளை உமது குடும்பத்தாரிடம் செல்கின்றீரா?” எனக் கேட்டார். அதற்கவர்

“ஆம்” என்று கூற அப்பெரியார் அவருக்கு வலி ஏற்படும் இடத்தைக் காட்டுமாறு பணித்தனர்.

எனது தந்தை கூறுகின்றார்: அவர்கள் தடவுவதை நான் வெறுத்தேன். இன்னும் இந்த பாலைவன வாசிகள் இவ்வாறான அழுக்குள்ள விடயங்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவுமாட்டார்கள் என எனக்குள் கூறிக் கொண்டேன். அப்போது நான் நீராடிவிட்டு வந்து கொண்டிருந்தேன்.

அந்த வலிக்கின்ற இடத்தை நான் அவருக்குக் காட்டினேன். அவரது கையினால் அந்த கட்டி உள்ள இடத்தை அழுத்தினார், பின்னர் அவரது குதிரை மீது மீண்டும் உட்கார்ந்து கொண்டார்.

அங்கிருந்தவர்களில் ஒருவர் என்னைப் பார்த்து, "இஸ்மாயிலே! நீ ஜெயம் பெற்று விட்டாய்" என்றார். அவர் எனது பெயரை அறிந்திருந்ததையிட்டு ஆச்சரியமடைந்த நான், "இன்ஷாஅல்லாஹ் நானும் நீங்களும் ஜெயம் பெற்றுவிட்டோம்" என்றேன். அப்போது அவர், "இதைத் தான் எனது இமாம் எனக்குக் கூறினார்கள்" என்று கூறினார்.

எனது தந்தை கூறுகின்றார்: அப்போது நான் அவர் முன் சென்று அவரை அணைத்து அவரது தொடையை முத்தமிட்டேன். பின்பு அவர் முன் செல்ல நானும் அவரை நெருங்கியவாறு அவருடன் சென்றேன். அவர் எனக்கு சொன்னார்: “நீ திரும்பிவிடு”. அதற்கு நான் கூறினேன்: “ஒரு போதும் நான் உம்மை விட்டுப் பிரிய மாட்டேன்.” மீண்டும் சொன்னார்: “நீ மீள்வதே உனக்கு நன்று.”

மற்ற முதியவர், "இஸ்மாயிலே! இருதடவைகள் இமாம் திரும்பி விடு என்று கூறியும் நீ அவருக்கு மாறு செய்வதை

யிட்டு வெட்கப்படவில்லையா?" எனக் கேட்டார். அந்த வார்த்தைகள் என்னை இடைநிறுத்தின. நானும் நின்று விட என்னை விட்டு பல எட்டுகளை எடுத்து வைத்த பின்பு என்பால் திரும்பிப் பார்த்தார் இமாம். “நீ பக்தாத் சென்றதும் அபூஜஃபர் என்கின்ற கலீபா அல்முஸ்தன்சிர் உன்னை அழைத்து ஏதாவது தருவான். அவனிடமிருந்து நீ அதை எடுக்க வேண்டாம். மாறாக எங்கள் பிள்ளையான செய்யித் இப்னு தாவூஸ் என்பவரிடம் அலீ இப்னு அவ்ஸ் என்பவரிடம் கொடுப்பதற்கு உனக்கு ஒரு கடிதம் தருமாறு கூறு. நான் நீ விரும்புகின்றவற்றை உனக்குக் கொடுக்குமாறு அவருக்கு உபதேசம் செய்துள்ளேன்” எனக் கூறினார்.

பின்பு அவர்களும் அவர்களது தோழர்களும் என்னை விட்டு மறையும் வரை அவர்களைப் பார்த்த வண்ணம் இருந்தேன். அவர்களது பிரிவு எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. எனவே சில மணி நேரம் அவ்விடத்தில் உட்கார்ந்து விட்டு அப்புனிதஸ்தலம் நோக்கி நடந்தேன்.

புனிதஸ்தலத்தின் எல்லையில் காணப்பட்ட ஒரு கூட்டம் என்னைச் சூழ்ந்த வண்ணம் 'உனது முகத்திலே ஒரு மாற்றத்தைக் காண்கின்றோம். ஏதாவது நோவினை உண்டா?' என்று கேட்டனர். 'அவ்வாறு ஒன்றுமில்லை' என்றேன். மீண்டும் அவர்கள் 'எவரேனும் உன்னோடு சண்டை செய்தனரா?' என்றார்கள். அதற்கு நான் 'நீங்கள் கூறும் எந்த விடயமும் என்னிடம் இல்லை. ஆனால் நான் உங்களிடம் கேட்கின்றேன், உங்களிடம் இருந்த அந்த இரு குதிரைகளையும் அறிவீர்களா?' அதற்கவர்கள் 'அந்த ஆடு மேய்ந்த இடங்களிலிருந்தா?' எனக் கேட்டனர்.

அதற்கு நான் 'இல்லை, அந்த இமாம் அவர்களை' என்றேன். அதற்கு அவர்கள், 'இமாம் அந்த முதியவரா? அல்லது தலைப்பாகை அணிந்தவரா?' எனக் கேட்டனர்.

அதற்கு நான், ‘தலைப்பாகை அணிந்தவர் தான்’ என்றேன். அதற்கு அவர்கள், 'நீர் உமது நோயை அவருக்கு காண்பித்தீரா?’ எனக் கேட்க நடந்ததைச் சொன்னேன்.

இந்த குழப்ப நிலை என்னை சந்தேகத்துக்குட்படுத்த எனது காலை மீண்டும் ஒருமுறை பார்த்தேன். எதனையும் காணவில்லை. அப்போது அங்கிருந்த மனிதர்கள் முண்டியடித் துக் கொண்டு எனது மேலாடையைக் பிடித்து இழுக்க ஆரம்பித்தனர்.

சில கூட்டத்தினர் என்னை பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் சென்று மனிதர்கள் என்னை நெருங்கா வண்ணம் தடைசெய்தனர். அப்போது அப்புனிதஸ்தலத்துக்குப் பொறுப்பா யிருந்தவர் நடக்கின்ற விடயத்தை அவதானித்து என்ன விடயம் என என்னிடம் வினவினார், அவர்கள் அவருக்கு விடயத்தை எத்தி வைத்தனர். பின்னர் அவர் நான் இருந்த இடத்துக்கு வந்து எனது விலாசம், நான் எப்போது பக்தாதில் இருந்து வந்தேன் என்றெல்லாம் விசாரித்தார். நானும் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்து இவ்வாரம் ஆரம்பத்தில் புறப்பட்டதாக கூறினேன்.

அவர் என்னோடு அந்த புனித இடம் வந்து அன்று தரித்தார். நான் சுபஹைத் தொழுதுவிட்டு வெளியாகினேன். மனிதர்களும், நான் அப்புனிதஸ்தலத்தை விட்டு வெளியாகும் போது என்னோடு வெளியாகினார்கள். அப்போது நான் அவானா என்ற இடத்தை சென்றடைந்து அங்கு தரித்து விட்டு அதிகாலை பக்தாத் நோக்கிப் பயணமானேன்.

ஒரு பழைய பாலத்தின் மீது மனிதர்கள் நெருக்கமாக நின்ற வண்ணம் என்னிடம் இமாம் பற்றியும் எனது பெயர் என்ன எந்த வம்சத்தைச் சார்ந்தவர் எங்கிருந்து வருகிறீர்

என்றெல்லாம் கேட்கலாயினர். நான் என்னை அவருக்கு அறிமுகப்படுத்த என்னைச் சூழ்ந்து எனது உடையை இழுக்க ஆரம்பித்தனர்.

அந்த நதிகளுக்கிடையில் நின்று அவதானித்துக் கொண்டிருந்தவர், பக்தாதுக்கு ஒரு மடல் எழுதி என்னை அறிமுகப்படுத்தி வைக்க அவர்கள், என்னை பக்தாதுக்கு சுமந்து சென்றனர். அப்போது மனிதர்களின் நெருக்குதல் களினால் எனது உயிர்கூட பிரியுமோ எனும் நிலை ஏற்பட்டது.

வஸீருல் கும்மீ (ரஹ்) அவர்கள், சயீத் ரழியுத்தீன் அவர்களை அணுகி இந்த விடயத்தின் உண்மை நிலையை அறிய முற்பட்டார்கள். ரழியுத்தீன் என்னைச் சந்திக்கப் புறப்பட்டு வந்தார். அவருடன் ஒரு பெரிய கூட்டமே வெளியாகியது. நாம் அன்னூய் என்ற நுழைவாயிலில் சந்திப்பதாக உடன்படிக்கைக்கு வந்தோம். எனவே அவரோடு வந்த தோழர்கள் என்னை விட்டும் மனிதர்களை தூரமாக்கினர்.

அவர் என்னைக் கண்ணுற்ற போது 'உன்னைப் பற்றிக் கூறுவது சரியா?' எனக் கேட்க, நான் 'ஆம்' என்று கூறினேன். உடனே அவர் குதிரையை விட்டு இறங்கி எனது தொடையைப் பார்த்தார். அப்போது எதுவித அடையாளமும் தென்படவில்லை. அப்போது அவர் சில மணிநேரம் மயக்கத்தில் இருந்தார்.

பின்பு எனது கையைப் பிடித்துக் கொண்டு என்னை வஸீருல் கும்மீயிடம் அழைத்துச் சென்று, அழுதவாறு, 'எனது தலைவா! இது எனது சகோதரன், மனிதர்களில் எல்லாம் மிகவும் எனக்கு விருப்பமானவன்' என்று கூறினார்.

என்னிடத்தில் பெரியார் வஸீருல் கும்மீ நடந்த வற்றை வினவ, நான் அவருக்கு விபரித்தேன். அப்போது அவர் அந்த வைத்தியர்களை மீண்டும் அழைத்து எனக்கு வைத்தியம் செய்யுமாறு வேண்டினார். அதற்கு அவர்கள், ‘அதற்கான வைத்தியம் அதனை வெட்டுவது தான்’ என்றனர். ‘அவ்வாறு செய்தால் அவர் மரணிக்கக்கூடும்’ எனவும் கூறினர்.

‘சிலவேளை அப்படி செய்து மரணிக்கவில்லையென்று வைத்துக் கொண்டால் எப்போது சுகம் கிடைக்கும்?’ என்று பெரியார் அவர்களிடம் வினவினார். அதற்கு அவர்கள் ‘இரு மாதங்களில்’ என்று கூறிவிட்டு, ‘அவ்விடத்தில் ஒரு மடு தோன்றும். அதில் ஒரு போதும் முடியும் முளைக்காது’ என்றனர்.

பெரியார் ‘நீங்கள் அதை எப்போது கண்டீர்கள்?’ என வினவ, அவர்கள் ‘நாம் பத்து நாட்களுக்கு முன்பு கண்டோம்’ என்றனர். அப்போது வஸீருல் கும்மீயின் வேண்டுகோளுக்கிணங்க அந்த நோவு இருந்த இடத்தை வைத்தியர்களுக்குக் காட்டினேன். அவர்கள் பார்த்த போது அது மற்றைய தொடையைப் போன்று எவ்வித குறைபாடும் இன்றிக் காணப்படது.

அப்போது ‘இதை வைத்தியர்களாகிய நீங்கள் குணப்படுத்தவில்லையென்றால் இதை யார் செய்தார் என்பதனை நாம் அறிய வேண்டும்’ என்றார். அவ்வேளை அங்கிருந்த வைத்தியர்களில் ஒருவர் 'இது ஹஸ்ரத் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் அவர்களின் வேலை' என சத்தமிட்டார்.

பின்பு, அப்பெரியார் என்னை கலீபாவிடம் சமுக மளிக்க வைத்தார். கலீபாவும் அது விடயமாக வினவ

ஏற்கனவே கூறியது போன்று கலீபாவுக்கும் விடயத்தை விளங்கப் படுத்தினேன். அப்போது கலீபா என்னிடம் ஆயிரம் தீனார் கொடுக்க அதில் ஒன்றையேனும் ஏற்க மறுத்துவிட்டேன். அதற்கு கலீபா, 'யாருக்கு அஞ்சுகின்றாய்?' என்று கேட்டார். அதற்கு நான், "யார் இந்த வேலையைச் செய்தாரோ அவர், அபூஜஃபரிடம் செல்லும், ஆனால் எதனையும் வாங்க வேண்டாம் என்று என்னிடம் சொல்லியுள்ளார்" என்றேன்.

கலீபா அழ ஆரம்பித்தார். அவரிடமிருந்து எதையும் எடுக்காமலேயே இஸ்மாயில் வெளியேறினார்.

அலீ இப்னு ஈஸா (கஷ்புல் ஹும்மாவின் ஆசிரியர்) கூறுகின்றார்: 'நான் சில நாட்களில் இந்த சம்பவத்தை என்னிடம் உள்ள சில கூட்டத்தினருக்கு கூறிக் கொண்டிருந் தேன். ஷம்சுத்தீன் முஹம்மத் என்கின்ற அவரது புதல்வனும் அக்கூட்டத்தினருடன் இருந்தார். நான் அவரை அறிந்திருக்க வில்லை. ஆனால் சம்பவத்தைக் கூறி முடித்த பிறகு, 'நான் அவருடைய மகன் தான்' என்றார். அப்போது அந்த நிகழ்வையிட்டு ஆச்சரியப்பட்டவனாக அவரிடம் கேட்டேன். 'நீர் அவரது தொடையிலிருந்த அந்த நோயைக் கண்டீரா?' அதற்கவர், "நான் அந்த நோயைப் பற்றி அறிந்திருக்கவில்லை. ஆனால், அது குணமடைந்த பிறகு அதனைப் பார்த்தேன். அதில் எவ்வித அடையாளமும் இல்லாதவாறு முடி முளைத்திருந்தது."

இந்த நிகழ்வுக்குப் பிறகு, இமாமைப் பிரிந்ததையிட்டு எனது தந்தை மிகவும் கவலையுடன் காணப்பட்டார். எந்தளவுக்கென்றால் குளிர்காலத்தில் வந்து பக்தாதில் தரித்திருப்பார். ஒவ்வொரு நாளும் பக்தாதில் சாமர்ராவுக்குச் சென்று சியாரத் செய்து விட்டு மீண்டும் வருவார். அவர்

பெற்ற அப்பாக்கியத்தை, அச்சந்திப்பை, அவ்வுதவியைப் பெறும் அச்சந்தர்ப்பம் மீண்டும் வரும் என்ற ஆவலுடன் அந்த வருடத்தில் மாத்திரம் நாற்பது தடவைகள் சாமிர்ராவை தரிசிக்கச் சென்றுள்ளார். இறுதியில் இமாமைப் பிரிந்த கவலையுடன் மரணித்து மறுவாழ்வுக்குச் சென்று விட்டார். இறைவன் அவரையும் எங்களையும் அவனது அருட்கொடை யின் கீழ் பொறுப்பேற்பானாக.[125]

இந்த சம்பவத்தின் இறுதியில் அன்னஜ்முஸ் ஸாகிப் என்ற நூலின் ஆசிரியர், ஷெய்க் ஹுர்ரு ஆமிலியிடமிருந்து கூறுகின்றார்: இந்த முஹம்மத் பின் இஸ்மாயில் என்பவர் இப்னு இஸ்மாயீல் அல்ஹிர்கிலி ஆகும். அவர் ஒரு சிறந்த அறிஞராகவும் அல்லாமா ஹில்லியின் மாணவர்களில் ஒருவராகவும் இருந்தவர்.[126]

ஹிஜ்ரி 11ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஷீயாக்களின் மூத்த உலமாக்களில் ஒருவரும் அவர்களது முப்தியுமான ஷெய்க் ஹுர் ஆமுலி என்பவர் அல்ஹிர்கிலி என்பவரது சம்பவத்துக்கு ஒப்பான சம்பவம் ஒன்றை அறிவித்து விட்டு, இது போன்ற விடயம் எங்களது காலங்களிலும் அதற்கு முன்னரும் ஒன்றன் பின் ஒன்றாக இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் புறமிருந்து நிகழ்ந்துள்ளன என்று கூறுகின்றார்.[127]

மேலும் கூறுகையில், நம்பிக்கைக்குரிய தோழர்களில் இருந்து ஒரு கூட்டத்தினர் இமாமவர்களைப் பார்த்ததாகவும், அவரிடமிருந்து அதிக அற்புதங்களைக் கண்ணுற்றதாகவும், இமாமவர்களுக்கு பல மறைவான விடயங்களை அறிவித்ததா

125. கஷ்புல் ஹும்மா, பா. 3, ப. 398,404
126. அந்நஜ்முஸ் ஸாகிப், ப. 228,231
127. இஸ்பாதுல் ஹுதாத் - பா. 7, ப. 383

கவும் அவர்களுக்கு இமாம் பிரார்த்தனைகள் புரிந்து அவை ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவும், அவர்களை அழிவு தரக்கூடிய பல ஆபத்துகளிலிருந்து பாதுகாத்ததாகவும் எனக்கு அறிவித்த னர். அதனை விரிவாக கூறுவதற்கு நேரம் போதாதுள்ளது. அவைகள் அனைத்தும் முஃஜிஸாத்துகள்.[128]

அதேபோன்று இக்கிதாபின் ஆசிரியர் முஹம்மத் ஹூர் என்பவர் இமாமவர்களின் அற்புதங்களை பல தடவைகள் கண்டதாக கூறினார்கள்.[129]

---

128. மே. கு
129. மே. கு - பா. 7, ப. 378

# இமாம் தோன்றும் காலம்

நாம் ஏற்கனவே கூறியது போன்று இமாமின் நான்காவது பிரதிநிதியான அபுல்ஹஸன் அல்சம்ரீயின் மறைவுக்குப் பின்பு இமாமின் பெரிய மறைவு ஆரம்பமாகி இதுவரை நீடித்துள்ளது. இந்த கால எல்லையின் கடைசிப் பகுதியில் இறைவனின் உத்தரவுடன் இமாமவர்களது வெளியேற்றம் நிகழும். இன்னும் எங்களது பரிசுத்த இமாம்களினது அதிகமான அறிவிப்புகளும் அதனையே தெளிவுபடுத்துகின்றன. எனவே தான், வெளியாகும் நேரத்தை இறைவனைத் தவிர வேறு எவராலும் நிர்ணயிக்க முடியாது. அது எதிர்பார்த்த வண்ணம் இறைகட்டளையின் பிரகாரம் நிகழும் ஒரு விடயமாகும். எனவே, எவரேனும் நேரம் காலம் நிர்ணயிப்பாரானால் அவர் பொய்யராவார்.

புழைல் என்பவரிடமிருந்து அறிவிக்கப்படுகின்றது: அவர் சொன்னார், நான் அபூஜஃபரிடம் கேட்டேன், "இமாமின் வெளியேற்றத்திற்கு நேரம், காலம் உண்டா?" அதற்கு அவர்கள், "நேரம் குறிப்பிடுபவர்கள் பொய் கூறிவிட்டனர்.

நேரம் குறிப்பிடுபவர்கள் பொய் கூறிவிட்டனர். நேரம் குறிப்பிடுபவர்கள் பொய் கூறினர்" எனக் கூறினார்கள்.[130]

இஸ்ஹாக் இப்னு யஃகூப் என்பவர் முஹம்மத் இப்னு உஸ்மான் அல்சம்ரீ மூலமாக இமாமவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினார்கள். அவர் அதிலே பல விடயங்களைப் பற்றி கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு இமாம் புறமிருந்து பின்வருமாறு பதில் வந்தது. "எனது தோற்றம் இறைவனுக்குரியது. அதனை அவன் தான் கூறவேண்டும். நேரம் நிர்ணயிப்பவர்கள் பொய் கூறிவிட்டனர்."[131]

கால நேரம் குறிப்பதென்பது நுணுக்கமாக வெளியாகும் நேரத்தை குறிப்பிடுவது என்பது தெளிவான விடயமாகும். இவ்வாறான கால நேர நிர்ணயம் பரிசுத்த இமாம்கள் புறமிருந்தும் கூறப்படவில்லை. அவர்கள் அதனை இறைவனின் இரகசியங்களில் ஒன்றாகவே கருதினார்கள். இருந்தும் சில அடையாளங்களை குறிப்பிட்டுள்ளார்கள். அவை நிகழுமாயின் இமாமின் வெளியேற்றம் விரைவில் நிகழும் என்பதை உறுதி செய்கின்றன.

## தோற்றத்துக்கு முன்

இமாம் வெளிப்படுவதற்கு முன்பு நிகழக்கூடிய விடயம் சம்பந்தமாக வந்துள்ள அறிவிப்புகளும், வெளியேற்றத்துக்குரிய அடையாளங்கள் சம்பந்தமாக வந்துள்ள அறிவிப்புகளும் அதிகம் உள்ளன. அவற்றில் சில அறிவிப்புகள் சமுதாயத்தின்

130. அல் ∴கய்ப் - ப. 261,262
131. கமாலுத்தீன் - பா. 2, ப. 160

நிலை பற்றி, குறிப்பாக முஸ்லிம் சமுதாயத்தின் நிலை பற்றி தெளிவுபடுத்துகின்றன.

இன்னும் சில, வெளியேற்றத்துக்கு சமீபமான நிகழ்வு களை விபரிக்கின்றன. அவற்றில் சில அப்போது நிகழக்கூடிய ஆச்சரியமான விடயங்களை தெளிவுபடுத்துகின்றன.

அந்த அனைத்து அறிவிப்புகளையும் பதிவு செய்வ தென்றால் இன்னுமொரு விரிவான நூல் எழுத வேண்டும். எனவே அதிக விளக்கம் தேவையென ஆர்வமுள்ளோர் அது சம்பந்தமாக வந்துள்ள ஹதீஸ் கிரந்தங்களைப் பார்க்கவும். நாம் இச்சிறு ஏட்டில் விளங்குவதற்கு இலகுவானதும் தெளிவானதுமான சில அடையாளங்களை மாத்திரம் குறிப்பிடுகின்றோம்.

*1சில அடையாளங்கள்;*

இஸ்லாமிய சமுதாயத்திலும் அனைத்து உலகிலும் நேரிய தீனிலிருந்து வெளியேறி பாவமும் குழப்பமும் அநீதியும் அதிகரித்துக் காணப்படுதல். இமாம் மஹ்தி அலைஹிஸ் ஸலாம் வெளிவருவார்கள் என்று இமாமால் கூறப்பட்டுள்ள அதிக அறிவிப்புகளில் இமாமின் தோற்றம் இப்பூமி அநீதியால் நிரம்பிக் காணப்படும் சந்தர்ப்பத்தில் நிகழும் என்பது தெளிவாகின்றது.

அதில் சில அறிவிப்புகளில் “இமாம் வெளியாகுவதற்கு முதல் குறிப்பாக இமாமின் வெளியேற்றத்திற்கு சமீபத்தில் இஸ்லாமிய சமுதாயத்தில் குழப்பம், அநீதி, பாவம், வெறுக்கத்தக்க விடயங்கள் மலிந்து காணப்படும். அந்த பித்னாக்களில் சில; குடிப்பழக்கம் மலிந்து காணப்படுவதுடன், போதைப் பொருட்களின் வியாபாரம் வெளிப்படையாக

நடைபெறும். வட்டி உண்ணுதல் வழக்கமாகி விடும். விபச்சாரம் போன்ற கீழ்த்தரமான செயல்கள் மலிந்து காணப்படும்.

கொடூரம், நம்பிக்கைத் துரோகம், இட்டுக்கட்டுதல், புறம் பேசுதல், மார்க்கத்தில் புதியதை உருவாக்குதல், வட்டி, இலஞ்சம், நயவஞ்சகம் போன்றவையும் அதிகரிக்கும். அநீதி ஆக்கிரமித்து, தூய்மை, வெட்கம் போன்றவை இல்லாமல் ஆகிவிடும்.

பெண்கள் ஹிஜாபின்றி தங்களது அங்கங்களை வெளிக்காட்டக் கூடியவாறு உடையணிந்து சமுதாயத்துக்கு மத்தியில் வெளிவருவார்கள். உடையணிவதிலும், அலங்கரிப்பதி லும் ஆண்கள் பெண்களுக்கு ஒப்பாகவும், பெண்கள் ஆண்களுக்கு ஒப்பாகவும் இருப்பார்கள்.

தீமையை விட்டு தடுப்பதும் நன்மையைக் கொண்டு ஏவுவதும் விடுபட்டுவிடும். முஃமின்கள் பாவங்களையும் அசிங்கமான விடயங்களையும் தடைசெய்யும் ஆற்றல் அற்றவர்களாகவும், சமுதாயத்தில் கணக்கெடுக்கப்படாதவர் களாகவும், கவலை நிறைந்த நிலையில் காணப்படுவார்கள்.

நிராகரிப்பும், தீனற்ற தன்மையும் பின்பற்றப்படும். இஸ்லாமும், குர்ஆனும் அமுல் செய்யப்பட மாட்டாது. பிள்ளைகள் தங்களது தாய் தந்தையர்களின் சங்கையைப் பேணி நடக்கமாட்டார்கள். எதிர்த்துப் பேசுவார்கள். சிறுவர்கள் பெரியவர்களுக்கு கண்ணியம் வழங்கமாட்டார்கள். அதேபோன்று பெரியவர்கள் சிறுவர்கள் மீது இரக்கம் காட்டமாட்டார்கள். இரத்த பந்தங்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டு விடும். குமுஸ், ஸக்காத் போன்றவைகள் கொடுக்கப்படாது. அல்லது அவை உரிய முறையில் செலவு செய்யப்படமாட்டாது.

முஸ்லிம்கள் மீது அந்நியர்கள், நிராகரிப்பாளர்கள் ஆதிக்கம் செலுத்துவார்கள். முஸ்லிம்கள் சொல், செயல், உடை போன்ற அனைத்து விடயங்களிலும் நிராகரிப்பாளர் களை பின்பற்றுவார்கள். அவர்களது அந்தஸ்து இழக்கப்பட்டு விடும். இறைகட்டளைகள் கைவிடப்பட்டு விடும்.

இமாம்களின் பலதரப்பட்ட அறிவிப்புகளின் பிரகாரம் வேறு சில அதிக கவலை தரக்கூடிய விடயங்களும் உண்டு.[132]

அதேபோன்று நாம் இந்த கடைசி நூற்றாண்டில் குறிப்பாக ஈரானில் "ஷா" மன்னனின் ஆட்சியின் போது இவ்வாறான அநாச்சாரங்களின் உச்சநிலையை அவதானித் தோம். ஈரானில் முஸ்லிம் சமுதாயம் மேற்கொண்ட புரட்சி இமாம் மஹ்தி தோன்றுவதற்கு முன்னேற்பாடாக அமைய வேண்டுமென அவாக் கொள்கின்றோம். இது மக்களை இந்த அனைத்து வழிகேடுகளிலுமிருந்து பாதுகாத்தும் தீனற்ற நிராகரிப்பாளர்களான உட்சக்தி, வெளிச்சக்தி போன்றவற்றில் இருந்து பாதுகாத்தும் மேற்கொள்ளப்பட்ட ஒரு புரட்சியாகும்.

இவ்வாறான அழுக்குகள், அநாச்சாரங்கள் முஸ்லிம் களது அதிகமான விவகாரங்களில் அவதானிக்க முடிகின் றது. இறையுதவியைக் கொண்டு அவனது தீர்ப்பைக் கொண்டு இத்தகைய பல சீர்கேடுகள் ஈரானில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. அதேநேரத்தில் ஏனைய இஸ்லாமிய நாடுகளில் நாளுக்கு நாள் அதிகரித்தே காணப்படுகின்றன.

**சுப்யானியின் தோற்றம்**

இமாம் தோன்றுவதற்கு முன்பு நிகழக்கூடிய அடையாளங்களில் ஒன்றாக இமாம்களால் உறுதிப்படுத்தப்பட்டு

132 மே. கு

தெளிவாக விபரிக்கப்பட்டது சுப்யானி என்பவனின் தோற்றமாகும். சுப்யானி என்பவன் சில அறிவிப்புகளின் பிரகாரம், உமையா பரம்பரையைச் சேர்ந்த யசீத் இப்னு முஆவியா இப்னு அபீசுப்யானின் வம்சத்தைச் சேர்ந்தவனாகும். அவன் மனிதர்களில் மிகவும் கெட்டவன். அவனது பெயர் உஸ்மான் இப்னு அன்பஸ் எனப்படும்.

அவன் குறிப்பாக இறைத்தூதரது குடும்பத்தோடும் இமாம்களோடும் அவர்களைப் பின்பற்றுபவர்களோடும் பரம வைரியாக இருப்பான். அவன் தோற்றம் வெள்ளையுடன் கலந்த சிவப்பாகவும், கண்கள் நீல நிறமாகவும், உடல் கட்டையாகவும் காணப்படும். அவனது நெற்றியில் சிறு கட்டிகளின் அடையாளம் தென்படும். அவன் ஓர் அநியாயக் காரனாகவும், மோசடி செய்பவனாகவும் இருப்பான். அவன் ஷாம் தேசத்தில் முன்னைய டமஸ்கஸ், பலஸ்தீன், ஜோர்தான் போன்ற பிரதேசங்களை உள்ளடக்கிய பகுதியில் இருந்தே வெளியாகுவான்.

ஐந்து பிரதேசங்களை குறுகிய காலத்தில் கைப்பற்றி பலம் வாய்ந்த படையுடன் ஈராக்கிலுள்ள கூபாவை வந்தடைவான். ஈராக்கில் குறிப்பாக கூபாவில் எண்ணிலடங் காத அட்டூழியங்களைப் புரிவான்.

பின்னர் ஹிஜாஸில் உள்ள மதீனாவை நோக்கியும் ஒரு படைப்பிரிவை அனுப்புவான். அப்படை தான் விரும்பு கின்றவாறு கொள்ளைகளையும் அபகரிப்புகளையும் மேற்கொண்ட பின் மதீனாவிலிருந்து மக்காவை நோக்கி நகரும்.

மக்காவுக்கும் மதீனாவுக்கும் இடையிலுள்ள பாலைவனத்தில் இறையுத்தரவைக் கொண்டு பூமி அவர்

களைப் பிடித்துக் கொள்ள சுப்யானீயின் படையினர் அதனுள் புதையுண்டு விடுவார்கள்.

இவ்வாறான சில நிகழ்வுகள் நடைபெற்ற பிறகு இமாம் மஹ்தி அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மக்காவில் வெளியாகுவார்கள். அப்போது அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கும், மதீனாவிலிருந்து ஈராக்குக்கும் செல்வார்கள். ஈராக்கில் கூபாவுக்குள் நுழைந்ததும், சுப்யானீ அங்கிருந்து ஷாமுக்கும், ஷாமிலிருந்து டமஸ்கஸ்ஸுக்கும் விரண்டோடு வான். அதனைத் தொடர்ந்து பைத்துல் முகத்தஸில் வைத்து அவனுக்கு தீர்ப்பு வழங்கப்பட்டு அப்படையினர் அவனது தலையைத் துண்டித்து விடுவார்கள்.[133]

## செய்யிதின் வெளியேற்றம்

இமாம்கள் புறமிருந்து வந்துள்ள சில அறிவிப்புகளின் பிரகாரம், செய்யித் ஹுஸைனீ என்பவர் ஷீயாக்களில் உள்ள ஒரு பெரியார். அவர் ஈரானில் உள்ள கஸ்வீன், தைலம் போன்ற பிரதேசங்களிலிருந்து தனது எழுச்சியை ஆரம்பிப்பார்.

அவர், தான் மஹ்தி என்றோ, இமாம் என்றோ வாதிடாத ஒரு கண்ணியமான முஃமின். அப்போது அவருக்கு ஆதரவு கிடைக்கும். அதன்விளைவாக அதிக ஆதரவாளர் களைத் தேடிக் கொண்டு அநீதிக்கும் அட்டூழியத்துக்கும் எதிராகப் போராடி கூபா வரை சென்று பூமியில் அதிகப் பகுதிகளை சீர்படுத்தி அவற்றைப் பாதுகாப்பான இடங்களாக ஆக்கி வைப்பார்.

அவருக்கும் அவரது தோழர்களுக்கும் இமாம் மஹ்தி பற்றிய செய்தி வந்து சேரும். அவ்வேளை தோழர்கள் இறைத்தூதரின் மகனே! “எங்கள் எல்லைக்குள் வந்த அந்த

133. முன்தஹஹல் ஆமால், இஸ்பாதுல் ஹுதாத் - பா. 7, ப. 398,417

மனிதர் யார்?” என்று கேட்பார்கள். அப்போது அவர், “வாருங்கள், அவர் யார்? அவருக்கு என்ன வேண்டும்? என்று சென்று பார்ப்போம்” எனக் கூறுவார். ஆனால், அவரும் மஹ்தி என்பதை நன்கு அறிவார்கள். நிச்சயமாக இமாம்கள் அவரை நன்கு அறிவர். ஆனால் அந்த விடயம் அவரது தோழர்களுக்கு, செய்யித் அறிமுகப்படுத்தும் வரை தெளிவுக்கு வரமாட்டாது.

அப்போது ஹுஸைன் வெளியாகி சொல்வார், “நீங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த மஹ்தி என்றால், உங்களது பாட்டனின் அஸா, அவர்களது மோதிரம், அவர்களது போர்வை, அவர்களது கேடயம், அவர்களது நீண்ட தலைப்பாகை, அவர்களது நீண்ட வால் கொண்ட குதிரை, அவர்களது ஒட்டகம், அவர்களது கழுதை, அமீருல்முஃமினீன் அலீ அலைஹிஸ் ஸலாம் வைத்திருந்த ஏடு போன்றவை எங்கே?” என்று கேட்பார்.

அப்போது இமாம் அவற்றை அவருக்கு வெளிக்காட்டிய பின்பு, அஸாவை ஒரு கடினமான கல்லில் அடிப்பார்கள். அந்தக் கல் துண்டு துண்டாகிவிடும். அவ்வேளை, ஹுஸைனி, "அல்லாஹ் மிகப் பெரியவன்" என்று கூறியவாறு "இறைத்தூதரின் புதல்வரே! நான் உங்களுக்கு பைஅத் செய்வதற்காக தங்கள் கரங்களை நீட்டுவீராக" என்பார்.

இமாமவர்கள் தமது கரத்தை நீட்ட அவரும் அவருடன் உள்ள படைகளில் நாற்பதாயிரம் பேர்களைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் பைஅத் செய்வார்கள்.

அந்த நாற்பதாயிரம் பேர்களும் குதர்க்கவாதிகளாக இருந்ததனால் இமாமின் அற்புதத்தைப் பார்த்து விட்டு இவை மாயாஜாலத்தைத் தவிர வேறில்லை என்பார்கள்.

அப்போது இரு படைகளும் ஒன்றோடொன்று கலந்து விடுவார்கள். இமாம் மஹ்தி அவர்கள் வழிதவறிச் செல்லும் அக்கூட்டத்தினரை நோக்கி மூன்று தினங்கள் உபதேசம் செய்து அவர்களை அழைப்பார்கள். ஆனால், அவர்களது நிராகரிப்பும், கட்டுப்படாத தன்மையும் மிதமிஞ்சிக் கொண்டே இருக்கும். எனவே அவர்களோடு போரிட்டுத் தோற்கடிக்கும் நிலை உருவாகும்.[134]

**வான ஓசை**

பிரபல்யம் வாய்ந்த அடையாளங்களில் ஒன்று தான் வான ஓசை. அது, இமாம் மஹ்தியின் தோற்றத்தின் பின்னர் மக்காவில் இடம் பெறும். அது ஹஸ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் சப்தமாகும்.

அவர்கள் இமாமின் பெயரைக் கொண்டும், அவர்களது தந்தையின் பெயரைக் கொண்டும் அழைப்பார்கள். அவ்வோசையை கிழக்கு மேற்கு வாசிகள் அனைவரும் செவியுறுவார்கள்.

தாங்கள் நேர்வழி பெறுவதற்காக வேண்டி இமாமுக்கு பைஅத் செய்யுமாறு மனிதர்களுக்கு உபதேசம் செய்வார்கள். இன்னும் அவர்களுக்கு மாறு செய்வதன் மூலம் வழிதவறி விடாதீர்கள் என்றும் உபதேசம் செய்வார்கள்.[135]

அதேபோன்று, இமாமையும், அவர்களைப் பின்தொடர் வோரையும் உறுதிப்படுத்தவென இமாமின் வெளியாக முன்பும் ஒரு ஓசை இடம்பெறும்.[136]

---

134. முன்தஹபல் ஆமால், பா. 103,104, பிஹார், பா. 53, ப. 15,16
135. முன்தஹபல் ஆமால், ப. 102, அல் ∴கய்பா, ப. 274
136. மே. கு

## ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் வருகை

சில அறிவிப்புகளில் ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ் ஸலாம் இமாம் மஹ்திக்கு உதவியாக இருக்கும் நோக்குடன் வானத்திலிருந்து இறங்கி வந்து இமாம் மஹ்தியைப் பின்பற்றித் தொழுவார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி கூட தமது சங்கை மிக்க மகளான பாத்திமா ஸஹ்ரா அவர்களைப் பார்த்து பின்வருமாறு கூறியுள்ளார்கள்.

"எங்களிலிருந்து தான் -அல்லாஹ்வின் மீது ஆணை யாக- இந்த உம்மத்தின் மஹ்தி -அலைஹிஸ் ஸலாம்- வருவார். அவர் பின்னால் நின்று ஈசா இப்னு மர்யம் -அலைஹிஸ் ஸலாம்- அவர்கள் தொழுவார்கள்."[137]

இன்னும் எத்தனையோ அடையாளங்கள் நூற்களில் கூறப்பட்டுள்ளன. அவை அனைத்தும் இடம் பெறுமா அல்லது மாற்றங்கள் நிகழுமா என்பது முக்கிய விடயம.

உலமாக்கள், இவ்வடையாளங்களை உறுதியானவை என்றும், உறுதியற்றவை என்றும் இருவகையாகப் பிரித்துள் ளார்கள். சந்தேகத்திற்கிடமின்றி உறுதியானவை அனைத்தும் இடம்பெற்றே தீரும்.

இன்னும் சில அறிவிப்புகளில் அந்த உறுதியான சில விடயங்களிலும் திடீரென மாற்றம் ஏற்படலாம் என வந்துள் ளது. ஆனால், அது சாத்தியமானது அல்ல. ஏனெனில், அவை இறைவனின் வாக்குறுதி. இறைவன் ஒருபோதும் வாக்குறுதிக்கு மாற மாட்டான்.[138]

---

137. இஸ்பாதுல் ஹுதாத் - பா. 7, ப. 14
138. மே. கு, பா. 7, ப. 431

உறுதியான விடயங்களிலும் மாற்றம் வரலாம் என்று கூறுகின்ற அறிவிப்புகளிலிருந்து புரிந்து கொள்ளும் விடயம், அவை ஷீயா சமுதாயத்தின் மத்தியில் இமாமை எதிர்பார்த் திருக்கின்ற தன்மையை பலமுள்ளதாகவும் உறுதியுள்ளதாகவும் ஆக்கி அவர்கள் எவ்வேளையும் இமாமின் வருகையை எதிர்பார்த்து தொடர்ச்சியாக தங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்வதாகும். ஒருவேளை இமாம் வெளியாகலாம், அந்த அடையாளங்களில் சில இடம்பெறாமலும் இருக்கலாம்.

# *இமாம் மஹ்தியின் தோற்றம்*

இமாம் மஹ்தி அலஹிஸ்ஸலாமின் தோற்றத்தை சூழ்ந்திருக்கின்ற விடயங்கள் பற்றி இமாம்களிடமிருந்து வந்துள்ள அறிவிப்புகளின் பிரகாரம் எமக்கு பின்வருவன வற்றைத் தெளிவுபடுத்தலாம்.

இமாம் நீண்ட மறைவுக்குப் பின்பு இறையுத்தரவுடன் கஃபாவின் அருகாமையில் வெளியாகுவார்கள். அவர்களுடன் இறைத்தூதர் கொண்டிருந்த கொடி, வாள், தலைப்பாகை, ஆடை போன்றவை இருக்கும். அவர்களுக்கு உதவியாக மலக்குகள் இருப்பார்கள்.

அவர்களது குறிப்பிட்ட தோழர்கள் 313பேர். அவர்கள் அனைவரும் மக்காவில் வைத்து பைஅத் செய்வார்கள். இமாம் சில காலம் மக்காவில் தரித்து விட்டு மதீனாவுக்கு வருவார்கள்.

அவர்களது தோழர்கள் கெடுதியாளர்களுடன் யுத்தம் புரிபவர்களாகவும், இறை விசுவாசிகளுடன் அந்நியோன்யமாக

வும் இருப்பார்கள். அவர்கள் உறுதியான விசுவாசம் உள்ளோராக இருப்பர். அவர்கள், அவரை வழிப்படுவதில் தங்களாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதோடு அவரை எங்கு கண்டாலும் அவருக்கு உதவியாக இருப்பார்கள்.

மதீனாவில், நிலைமை சற்று சீரடைந்த பிறகு தமது படையுடன் ஈராக்கை நோக்கி வந்து கூபாவுக்குள் நுழைவார். அங்கு செய்யித் ஹுஸைனியைச் சந்திப்பார்கள். செய்யித் ஹுஸைனி தனது படைகளுடன் இமாமோடு பைஅத் செய்து கொள்வார்.

இன்னும் ஹஸ்ரத் ஈசா அலைஹிஸ்ஸலாம் வானத்திலிருந்து இறங்கி இமாமுக்கு உதவியாக இருந்து தொழுகையிலும் இமாமைப் பின்பற்றித் தொழுவார்கள்.

இமாமின் ஆட்சிபீடம் கூபாவில் அமையும். பின்பு கிழக்கு மேற்குகளை வெற்றி கொண்டு அதில் இஸ்லாத்தைப் பரப்பி அதனை உலகில் அனைத்து பாகங்களிலும் நடைமுறைப் படுத்துவார்கள்.

தீனை மீண்டும் ஒருமுறை உயிர் பெறச் செய்து உண்மையான இஸ்லாத்தின் முகத்திலுள்ள அழுக்குகளையும் வழிகேடுகளையும் அகற்றி இறைவேதத்தின் பிரகாரமும் அவனது நபியின் சுன்னத்தின் பிரகாரமும் அதனை முன்னெடுத்துச் செல்வார்கள்.

அவர்களது உணவு ஆடம்பரமற்றதாகவும், அவர்களது உடை அவர்களது பாட்டனார் அலீ அலைஹிஸ்ஸலாம் அவர்களது உடை போன்று கரடுமுரடாகவும் இருக்கும்.

இமாமின் ஆட்சிக்காலத்தில் பூமி அதனுடைய பரகத்துகளை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும். தானிய வகைகள், பல வகை செல்வம், செழிப்பு அனைத்தும் அதிகரித்துக் காணப்படும். வறுமை நீங்கி அனைவரும் செல்வத்திலும் சந்தோஷத்திலும் வாழ்வார்கள். எந்தளவுக் கெனில், ஸக்காத் கொடுத்தால் அதனை வாங்குவதற்கு ஒரு மனிதரும் இருக்கமாட்டார்.

அப்போது இறைவிசுவாசிகள், தோழர்கள், இமாமைப் பின்தொடர்ந்து கூபாவிற்கு வந்து இமாமின் அருகாமையில் மட்டில்லா மகிழ்ச்சியுடன் வசிப்பார்கள். இமாமைப் பின்பற்றுப வர்கள் தொழுவதற்குரிய இடம் விரிவாக இருக்க வேண்டும் என்பதற்காக ஆயிரம் கதவுகள் கொண்ட ஒரு பெரிய பள்ளிவாயலை அமைத்துக் கொள்வார்கள்.

அவர்களது ஆட்சிக்காலத்தில் அனைத்து இடத்திலும் நீதி, நேர்மை, நம்பிக்கை பரிபூரணம் அடைந்து காணப்படும். எந்தளவுக்கெனில், வயது முதிர்ந்த ஒருவர் தங்கத்தாலும், வைரத்தாலும் நிரப்பப்பட்ட ஒரு பாத்திரத்தை தன்னந்தனியே ஒரு கிராமத்திலிருந்து இன்னொரு கிராமத்துக்கு எடுத்துச் சென்றாலும், எவரும் அதனை திருடவோ அபகரிக்கவோ முற்படமாட்டார்கள்.

பூமி, தன்னுள் புதையுண்டிருக்கும் களஞ்சியங்களையும் செல்வங்களையும் இமாமுக்கு வெளிப்படுத்திக் கொடுக்கும். இமாம் அதனைக் கொண்டு அநீதியிழைக்கப்பட்டவர்களின் நஷ்டங்களை திருத்தியமைப்பார்கள். இமாமவர்கள் வெளியா கும் போது இறைவன் அவர்களது தோழர்களின் செவிப்புலன் களையும் கண்பார்வையையும் தூரநோக்குள்ளதாக ஆக்கிக் கொடுப்பான். இதன்மூலம் இமாமின் பேச்சை தெளிவாக செவியுறவும், அவர்களை நல்லமுறையில் பார்க்கவும் அவர்களுக்கு முடியுமாக இருக்கும்.

இமாம் வெளிவரும் போது இறைவன் தனது அருட்கரங்களையும் அருட்கொடைகளையும் அவனது அடியார்கள் மீது அள்ளி வழங்குவான். அது மாத்திரமல்ல, அவர்களது சிந்தனா சக்தியையும் பரிபூரணமாக்கிக் கொடுப்பான்.

இமாம் ஹஸ்ரத் தாவூத் அலஹிஸ்ஸலாம் அவர்களது வழிகாட்டல் போன்றும், ஹஸ்ரத் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி அவர்களது வழிகாட்டல் போன்றும் மக்கள் மத்தியில் தீர்ப்பு வழங்குவார்கள். இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி அவர்கள் எவ்வாறெல்லாம் செயற்பட்டார்களோ அவ்வாறே இமாமும் செயற்பட்டு இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஆலிஹி அவர்கள் ஜாஹிலிய்யா கலாசாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது போன்று இமாமவர்களும் முற்றுப்புள்ளி வைத்து இஸ்லாத்துக்கு மீண்டும் புத்துயிரளிப்பார்கள்.[139]

139. பிஹாருல் அன்வார் - பா. 52, ப. 279, கமாலுத்தீன் - பா. 2, ப. 367,368, முன்தஹுல் அதர். ப. 482